# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

மார்ச்-2016
பருவம் 2 புனல் 18

தனிச்சுற்று
நன்கொடை ரூ 20




## பன்னாட்டு நிறுவனங்களின்

## 'பால் அரசியல்'

காட்டாறு
அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

**தொகுப்புக்குழு**
யாழ் மொழி
பெரியார் செல்வி
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
அ.ப. சிவா
செல்லையா முத்துச்சாமி
மே.கா. கிட்டு
பூ. மணிமாறன்

**சட்ட ஆலோசனைக்குழு:**
வழக்கறிஞர் கிருட்டிணக்குமார்
வழக்கறிஞர் க.ஜெயராஜ்
வழக்கறிஞர் வெ.பழனிச்சாமி
வழக்கறிஞர் பிரபாத்

**விளம்பரம் ~ விற்பனைத் தொடர்பு:**
சி. விஜயன் 94881 79109
சேயூர் செந்தில்குமார் 90252 47411
ஜீவாநகர் குமார் 99944 77013
ஆ. பாண்டியன் 96591 12891
கடத்தூர் காந்தி 99428 76665
ஈரோடு வெங்கட் 97884 95774

**ஆன்லைன் சந்தா - நன்கொடை:**
பெரியகுளம் குமரேசன் 99943 65133

**ஆண்டுக்கட்டணத் தொடர்பு:**
திருப்பூர் வேணி 77084 58086

**வடிவமைப்பு:**
முகிழ் மீடியா 97873 20044

**அச்சு:**
க்ரியேட்டிவ் க்ராஃபிக் , சென்னை

**உரிமை, வெளியீடு, ஆசிரியர்:**
சி.விஜயராகவன்

**பொறுப்பாசிரியர்:**
சி. இராவணன் 97868 89325

# நமது இலக்கு 2000 ஆண்டுக் கட்டணங்கள்!

கொள்கைகளுக்காக நடத்தப்படும் பத்திரிக்கைகளுக்கு பல தொல்லையும், கஸ்டமும், நஸ்டமும் ஏற்படுவதோடு வெகு சுலபத்தில் எதிரிகள் ஏற்பட்டு கொண்டே இருப்பார்கள். இம்மாதிரி பத்திரிக்கைகள் பொதுஜன செல்வாக்கு விரோதமாகவும் வேலை செய்ய வேண்டி எற்பட்டுவிடுவதால் பொதுஜனங்கள் ஆதரவும் இல்லாமல் இருக்கவேண்டியும் வரும்.

- கலகக்காரர் பெரியார்.16.08.1936 குடிஅரசு

அக்டோபர் 2014 தொடங்கி மார்ச் 2016 முடிய 18ஆவது இதழ் உங்கள் கரங்களில் தவழும் நிலையில் இந்த கடிதம்.‘காட்டாறு’ இதழ் வாசகர்கள் கட்டுரையாளர்கள், விளம்பரதாரர்கள், காட்டாறு இதழ் வளர உதவும் கொள்கைத் தோழர்களுக்கும் வணக்கம்.

கலகக்காரர் தோழர் பெரியார் உலகில் எந்த சமுதாய அமைப்பும் புரட்சிகர இயக்கங்களும் தங்களுடைய அமைப்புகளுக்கு வைக்காத பெயரான ‘சுயமரியாதை இயக்கம்’ என்னும் பெயரால் இயக்கம் துவக்கி, மான அவமானம் பாராது இனநலனே முக்கியம் எனக் கருதி உழைத்த உழைப்பின் பயன்தான் இன்றைக்கு திராவிடர் இன மக்கள் தமிழகத்தில் பெற்றுள்ள மகத்தான மறுமலர்ச்சி.

பல நூறு ஆண்டுகள் முயன்று பெரும் உயிர் மற்றும் உடமைகளை இழந்து தாளமுடியாத துன்பங்கள், துயரங்களைச் சந்தித்துப் பெறவேண்டிய வெற்றியை - தன்னையும், தங்களை வருத்தித் தன்நலம் இல்லாது உண்மை உழைப்பை நல்கிய தனது தோழர்களையும், தான் உருவாக்கிய இயக்கத்தையும் நம்பி உழைத்த உழைப்பின் பயன் அவரது மறைவுக்கு பிறகு குறிப்பாக 1983 க்கு பிறகு அறிவியல் பண்பாட்டு துறையில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டதால் தான் இன்று இன எதிரிகளும் பார்ப்பன கை கூலிகளும். திராவிட அரசியல் கட்சிகளின் போக்கை கண்டிக்கிற எதிரிக்கிற போர்வையின் மறைவில் (திராவிடர் இன எதிரி அயோத்தி இராமனை போல ) திராவிடர் கருத்தாக் கத்தை, பெரியாரியலை ஒழிக்க முனைப்போடு செயல் படுகின்றனர்.

இன எதிரிகள் மற்றும் துரோகிகள் பல்வேறு அமைப்புகளாக இருந்தாலும் அவர்கள் தாய் அமைப்புக்கும் அதன் கொள்கைகளுக்கும் நடவடிக்கை களுக்கும் கட்டுபட்டவர்களாக நடந்து கொண்டு பல்வேறு இதழ்களை நடத்துகிறர்கள்!. ஆனால் அவர்கள் குறிக்கோள் ஒன்றே! ஒரே நாடு! ஒரே மொழி!! ஒரே பண்பாடு !!! பார்ப்பன வேதமதமான இந்து மதம் கூறுகிற வர்ணாசிரம அமைப்பை வலுப்படுத்தி வெளிபடையான சாதி அமைப்பை நிலை நிறுத்துவது தான். இதனை நிறுவ அவர்களின் அமைப்புகளும், நடத்தும் இதழ்களும் ஒரு வலைப்பின்னாலாக செயல் படுகிறர்கள்.

மூன்றாம் தலைமுறையை சேர்ந்த திராவிடர் இன இளைஞர்களுக்கு கலகக்காரர் தோழர் பெரியாரின் அறிவியல் பண்பாட்டுக் கொள்கைகளை எடுத்துச்சொல்ல அனைத்து ஊடக வாய்ப்புகளையும் எதிரிகளைப்போலவே நாமும் பயன்படுத்த வேண்டும். இன்றைய அனைத்து வகையான ஊடக இயல்களையும் பயன்படுத்தி, இளைய தோழர்களைத் தயார் செய்யவேண்டும். இளைய தோழர்களை பெரியாரியலுக்குத் தயார்படுத்தி எழுதச்செய்வது. அடுத்த தலைமுறை பெரியாரியல் எழுத்தாளர்களை, கருத்தாளர்களைத் தயார் செய்யும் நோக்கத் தோடுதான் அச்சு ஊடகத்தில் 'காட்டாறு' இதழ் வரவேண்டும் என்ற தேவையை உணர்ந்தோம்.

"எதையும், யாரையும் சார்ந்து நிற்காமால், எந்தக் கட்டுக்குள்ளும் சிக்காமல், எமக்குத் தெரிந்த அளவில் பெரியாரைத் தற்காலச்சூழலோடு பொருத்திக் காட்டுவது காட்டாறு" என்ற குறிக்கோளோடு தோழர்கள் கூடிப்பேசி 30 நாட்களுக்குள், ஆண்டு கட்டணம் ரூ.200 வீதம் ஆயிரம் சந்தாதாரர்களைச் சேர்ப்பது என முடிவேடுத்தோம் இதன் தேவை குறித்து நன்கு உணர்ந்த தோழர்கள் தேனீக்களைப் போலத் தேடி அலைந்து குறிப்பிட்ட காலத்திற்குள் 1200 ஆண்டுக் கட்டண உறுப்பினர்களைச் சேர்த்தார்கள்.

அடுத்த கட்டமாக பெரியாரியல் கடமையில் இந்தத் தலைமுறைக்குரிய முதன்மைப் பணியாக "அடுத்த தலைமுறைக்கு அறிவாயுதம்" என்ற பெரியாரின் எழுத்தும் பேச்சும் இணையதளத் தொகுப்புப் பணியை அறிவித்தோம். கலகக்காரர் தோழர் பெரியாரின் எழுத்துக்களையும் மிக அதிகமாக கொண்ட இணையதளம் ஆங்கிலத்திலும் அறிந்து கொள்ள உதவும் இணையதளம். www.periyarwritings.org தோழர் பெரியாரின் பண்பாட்டுப்புரட்சியை அறிந்துகொள்ள kataru.in இந்த இரு தளங்களில் தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் பெரியாரின் கருத்துக்களைத் தரவேற்றம் செய்து , அவைகளை இலவசமாகக் கிடைக்கச் செய்தும், எளிதாக அணுகக்கூடிய தொழில்நுட்பத்துடன் செய்வது என்ற நோக்கில் 01.07.2015ல் பணிகளைத் தொடங்கி 14.10.2015 ல் முடித்தோம்.

அக்டோபர் 2015 'காட்டாறு' தனது முதல் ஆண்டை வெற்றிகரமாக நிறைவு செய்யும் நிலையில், தோழர்கள் மீண்டும் கூடி, கலந்துரையாடி ஆண்டுவிழாவையும், விழா மலரையும் 'திறனாய்வு மலராகவும்' 'திறனாய்வு விழா' வாகவும் நடத்துவது என முடிவுசெய்து, 14.10.2015 கோவையில் நடத்தப்பட்டது.

அவ்விழாவில், காட்டாறின் அடுத்த இலக்காக 'குடிஅரசுப்பள்ளிகள்' மாதத்தின் முதல் ஞாயிறு ஒட்டன்சத்திரத்திலும், கடைசி ஞாயிறு சூலூரிலும் நடத்துவது என முடிவு செய்யப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

எந்தவிதமான ஜாதிபலம், கல்விபலம், பணபலம், செல்வாக்கு, மேல்மட்டத் தொடர்புகள், அமைப்புகளின் பின்புலம், சமுதாய அந்தஸ்த்து, பெரும் எண்ணிக்கையுள்ள தோழர்களின் பலம் என எதுவுமே இல்லாத மிக எளிய, மிகக்குறைந்த தோழர்கள் இணைந்து சிற்றிதழ் வெளியீடு, குடிஅரசுப்பள்ளித் தொடர்பயிற்சிவகுப்புக்கள், திராவிடர் பண்பாட்டு நாட்காட்டி வெளியீடு, சிறுநூல்கள் வெளியீடு என பண்பாட்டுத் தளத்தில் ஒரு ஆண்டுக்கும் மேலாகப் பணியாற்றுகிறோம்.

காட்டாறு ஏட்டின் 2015 மே - 2016 ஏப்ரல் ஆண்டுக்கட்டணம் வரும் எப்ரலோடு நிறைவு பெறுகிறது. 2016 மே - 2017 ஏப்ரல் ஆண்டுக்கான ஆண்டுக்கட்டணம் சேகரிப்புப்பணி தொடங்கப் பட்டுவிட்டது. மார்ச் 8 முதல் ஏப்ரல் 14 முடிய, குறிப்பிட்ட நாட்களுக்குள் பணியை முடிக்கத் திட்டமிட்டுள்ளோம். சென்ற ஆண்டு இலக்கு 1000. இந்த ஆண்டு இலக்கு 2000.

இதழை அனுப்ப ஒரு இதழுக்கு அஞ்சல் கட்டணம் 7 ரூபாய் ஆகிவிடுகிறது. தொடர்ச்சியாக அந்தச் சுமையை எங்களால் தாங்க இயலவில்லை. எனவே இந்த ஆண்டுக்கான ஆண்டுக்கட்டணத்தை 250 ஆக நிர்ணயித்துள்ளோம். எங்களின் செயல்பாடுகளுக்குத் தொடர்ந்து ஆதரவளித்துவரும் நண்பர்கள், தோழர்கள், ஆதரவாளர்கள் எமது அடுத்த இலக்கையும் செயலாக்குவீர்கள் என்ற நம்பிக்கையுடன் அறிவிக்கிறோம். நமது இலக்கு 2000!

பொள்ளாச்சி சி.விஜயராகவன்
காட்டாறு

## 2016 மே - 2017 மே
## ஆண்டுக்கட்டணம் சேகரிப்புப் பணி

மார்ச் 08 முதல் ஏப்ரல் 14 முடிய ஆண்டுக்கட்டணம் சேகரிப்புப்பணி நடைபெற்றுவருகிறது. ஆன்லைனில் ஆண்டுக்கட்டணத்தைச் செலுத்துவோர்

ASURAN OODAKAM, KVB,
Current A/c, Periyakulam Branch,
No: 1176115000003502
IFSC: KVBL0001176

என்ற கணக்கில் செலுத்திவிட்டு, பணம் செலுத்திய விபரத்தை பெரியகுளம் தோழர் குமரேசன் எண்ணுக்கு 99943 65133 SMS அனுப்பி விடவும். முகவரிகளை தோழர் இராவணன் எண்ணுக்கு 97868 89325 அனுப்பி விடவும்.

தோழர் மணியம்மை

# பிற சமயமும் நம்(இந்து) சமயமும்

2016ம் ஆண்டில் இந்த டிஜிட்டல் மயமான உலகில் ஒரு பெண் முழுநேர இயக்கப் பணியாளராக வருவது இந்தியா போன்ற பெண்ணடிமைத்தனம் நிறைந்த நாட்டில் இழிவுக்கும், ஏச்சுக்களுக்கும் ஆளாகின்றபோது - கிட்டத்தட்ட 70 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு பெண், சமூக தொண்டிற்காகவே தன்னை முழுமையாக அர்ப்பணித்து அன்றைக்கு இருந்த ‘பெரிய மனிதர்களின்’ எதிர்ப்பு ஏளனங்களை முறியடித்து, தனக்கென வாழாமல் தோழர் பெரியாரின் உதவியாளராக, இயக்கத்தை வழி நடத்தும் தளபதியாக, இயக்கத்தைப் பாதுகாக்க தோழர் பெரியாரின் துணைவராக என பல பரிமாணங்களை வகித்து, இறுதியில் கழகத்தின் தலைவராகவும் பணியாற்றி, இந்திய அரசும் பார்ப்பன அதிகார மய்யங்களும் அலறும் அளவிற்கு போராட்டங்களை முன்னெடுத்த தோழர் மணியம்மை அவர்களின் பிறந்தநாள், நினைவுநாள் இரண்டுமே மார்ச் மாதத்தில் வருகிறது. அவரது நினைவாக குடி அரசு இதழில் தோழர் மணியம்மையார் எழுதிய ஒரு கட்டுரையைப் பதிவுசெய்கிறோம்.

**பிற சமயமும், நம் இந்து சமயமும்**

இன்றைய தினம் உலகத்திலுள்ள 200 கோடி ஜனங்களுக்கு முக்கியமாய் நான்கைந்து மதங்களே பெரும் மதங்களாயிருக்கின்றன. அவற்றுள் சுமாராக கிறிஸ்து மதத்திற்கு 60 கோடியும், பவுத்த மதத்திற்கு அதன் உள்பிரிவுகளையும் சேர்த்து 60 கோடியும், இஸ்லாம் மதத்திற்கு 40 கோடியும், இந்து மதத்திற்கு 20 கோடியும், நாஸ்திகர்களுக்கு 20 கோடியும் இருக்கின்றதனாலும் இந்து மதம் தவிர, மற்ற மதங்களில் எல்லாம் வேறு மதங்களிலிருந்து வருகின்றவர்களையெல்லாம் தங்கள் மதங்களில் சேர்த்துக் கொள்வதும், நாளுக்கு நாள் தங்கள் மதங்களை விருத்தி செய்வதும், தங்கள் தங்கள் மதங்களில் உள்ள மக்கள் எல்லோரையும் சமமாகக் கருதி ஒற்றுமைப்படச் செய்வதுமான முயற்சியில் எல்லோருக்கும் சமமான கல்வியும், வாழ்க்கையில் சரி சுதந்திரமும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், இந்துமதம் என்பதில் மாத்திரம் மனிதனை மனிதன் பிரித்துக் காட்டி கீழ்-மேல்,உயர்வு-தாழ்வு நிலையை உண்டாக்கி வேறு மதத்திலிருந்து வரும் எவனையும் சேர்க்காமலடித்து-இந்து மதத்திலிருந்து அநேகரை வேறு மதத்திற்குப் போகும்படி நிர்ப்பந்தப்படுத்தி ஜன சமூகம் வருஷத்திற்கு வருஷம் குறைந்துக் கொண்டே வருகிறது.

மதக் கொள்கையைப் பற்றி பேசும்போது மாத்திரம் “இந்துமதம்,அன்புமதம்,சமத்துவ மதம்,சமரச சன்மார்க்க மதம்” என்று சொல்வது; நடக்கும்போது மாத்திரம் சமரசமில்லை, சன்மார்க்கமில்லை, அன்பு இல்லை, இரக்கமில்லை என்பதும்; மற்றும் மற்ற மதங்களில் இல்லாத தத்துவங்கள்,வேதாந்த சாரங்கள், ஞானங்கள் இந்து மதத்தில் இருக்கின்றன என்று பெருமை பேசிக் கொண்டு ஆத்மாவே கடவுள் என்றும், ஒரே ஆத்மா உலகிலெல்லாம் பிரகாசிக்கின்றதென்றும், எல்லா உடல்களிலிருக்கும் ஆத்மா ஒன்றே என்றும், அதற்குப் பற்றில்லை என்றும், அதற்குச் சாவு இல்லை, பிறப்பு இல்லை என்றும் ஆத்மா, கடவுள், தோற்றம் ஆகிய மூன்றும் ஒன்றை ஒன்று பிரியாத தன்மையுடைய தென்றும், இன்னும் ஏதேதோ பித்துக்கொள்ளிபோல் பேசி பெருமையடைந்து கொண்டு வாழ்க்கையில் அவை ஒன்றுக் கொன்று சிறிதும் சம்பந்தமில்லாமல் நடந்து, மனித சமூகத்திற்குப் பல கொடுமைகளை இழைத்துக் கொண்டு வருவதாயிருக்கின்றது.

மற்ற சமயக்காரர்களெல்லாம் தாங்கள் செய்யும் தருமங்களையும், புரியும் கர்மங்களையும் இந்த உலகத்திலிருக்கும் மக்களுக்கு,இந்த உலகத்திலேயே நன்மை உண்டாகும்படியும் அதனுடைய பலனை இந்த உலகத்திலேயே அடைவதாகவும் சொல்லி,கஷ்டப்படுகின்ற ஜீவன் யாராயிருந்தாலும், தேவைப் படுகின்ற ஜீவன் யாராயிருந்தாலும் அவர்களுக்கெல்லாம் தங்களால் ஆனதை வித்தியாச மில்லாமல் தங்கள் மத மக்களுக்கும், நாட்டு மக்களுக்கும் பயன்படும் படியாக உதவி வருகின்றார் - கள். மீதியுள்ளதை நாட்டின் முன்னேற்றத்திற்கும் உதவி, பெரிய பெரிய நன்மை களைச் செய்து வருகிறார்கள்.

ஆனால், இந்து மதக்காரர்களோ, தாங்கள் செய்வது மக்களுக்கு இந்த உலகத்திற்குப் பயன்படு கின்றதா என்பதைவிட,மேல் உலகத்திலுள்ளவர்கள் திருப்தியடைவார்களா? சந்தோஷமடைவார்களா? நமக்கு வேண்டியதை அவர்கள் கொடுப்பார்களா? நாம் இந்த லோகத்தை விட்டுப்போன பிறகு மேல் லோகத்தில் நமக்கு நன்மை கிடைக்குமா? இந்த ஜென்மம் போன பிறகு அடுத்த ஜென்மத்தில் நமக்குப் பெருமையும், மேன்மையும் கிடைக்குமா?என்கிற கவலையிலேயே செய்வதுடன், கஷ்டப்படு பவனையும்,தேவைப்படுபவனையும் லட்சியம் செய்யாமல் யாருக்குக் கொடுத்தால் மேல் லோகத்தில் பலனுண்டு என்கிற கவலையினால் சுயநல எண்ணங்கொண்டு எவனெவனுக்குக் கொடுத்தால் அதிகமான பலன் மேல் லோகத்தில் கிடைக்குமென்றும்,கடவுள் தனக்கே கொடுக்கும்படிச் சொன்னார் என்றும் பித்தலாட்டமாய் அறிவுக்கும்,அனுபவத்திற்கும் பொருந்தாததாய் எழுதி வைத்திருக் கின்றார்களோ,அவற்றை எல்லாம் நம்பி அந்தப்படியே செய்கின்றார்கள்.

மற்ற மதக்காரர்கள் எல்லோரும் தங்கள் மதக்காரர்கள் நன்மைக்கும், மற்ற மதக்காரர்கள் நன்மைக்கும் என்று பள்ளிக்கூடம் கட்டி ஏராளமான பொருள் செலவு செய்து உபாத்தியாயர்களை

வைத்து,படிப்பு சொல்லிக் கொடுக்கின்றார்கள். இந்துமதக்காரர்கள் கோவில் கட்டி ஏராளமான பொருள் செலவு செய்து பார்ப்பனர்களையும், தாசிகளையும் வைத்து உற்சவங்கள் செய்கின்றார்கள். படிப்பைப் பற்றிய கவலையே இல்லாமலிருக் கின்றார்கள்.

மற்ற மதக்காரர்கள் மக்களின் நோய்களைச் சவுக்கியம் செய்ய ஆஸ்பத்திரிகள் கட்டி வைத்தியம் செய்கின்றார்கள். இந்து மதக்காரர்கள் நோய் வந்தாலும், காசில்லாமல் வேறொருவன் செய்யும் வைத்தியத்தைக் கூட செய்து கொள்ளாமல் அந்த நோய்க்கும் கடவுளை நம்பிக் கடவுளுக்கும் ‘சில்லறை தேவதை’ களுக்கும் வேண்டிக் கொள்வதன் மூலமும் கோவில்களுக்குப் போய் படுத்துக் கொள்வதன் மூலமும் காசையும், நேரத்தையும் செலவு செய்து காயலாவைப் பலப்படுத்திக் கொள்கிறார்கள்.

மற்ற மதக்காரர்கள் பெண்களுக்குப் படிப்புக் கொடுத்து அறிவு உண்டாக்கி வாழ்க்கையில் புருஷர்களுக்கு குடும்பக் கஷ்டமில்லாமல் இருக்கும் படியாக பயன் பெறச் செய்கின்றார்கள். இந்து மதக்காரர்கள் படிப்புக் கொடுக்காமல் போவதோடல்லாமல் ஏறக்குறைய 100-க்கு 50 பெண்களுக்கு ‘பிசாசு’ பிடிக்கச் செய்து பேயோட்டு கின்றார்கள்.

கடைசியாக, கடவுள் விஷயத்திலும் 60 கோடி கிறிஸ்தவருக்கு ஒரே கடவுளாகவும், 60 கோடி புத்தர்களுக்கு ஒரு கடவுள் கூட இல்லாததாகவும், 40 கோடி முகம்மதியர்களுக்கும் ஒரே கடவுளாகவும், அதுவும் உருவம், பால் இல்லாததாகவும் இருக்கும்போது இந்துக்களுக்கு மாத்திரம் 20 கோடிப் பேருக்கு, 33 கோடி கடவுள்களும், அவைகளுக்குக் கண்ணு, மூக்கு, கைகால்கள் அதுவும் ஒவ்வொன்றுக்கும் ஆயிரக்கணக்கான கண்கள், இரண்டாயிரக்கணக்கான கைகள், பதினாயிரக் கணக்கான பெண்ஜாதி, பதினாயிரக்கணக்கான தாசி வேசி வைப்பாட்டிகள், பிள்ளை குட்டி, மாமன், மாமி, மைத்துனன், மாமனார், மருமகன், பேரன், பேத்தி, கொள்ளுப்பேத்தி முதலிய பத்து வர்க்கங்களுடன் இருக்கின்றன.

இவை மாத்திரமல்லாமல், மற்ற மதக் கடவுள்களுக்கு பூசையோ, சாப்பாடோ, ஸ்நானமோ, வேஷ்டி துணியோ, கல்யாணமோ, கருமாதியோ, கல்லெடுப்போ இல்லாமல் இருப்பதும், இந்து மதக் கடவுள்களுக்கு மாத்திரம் தினம் ஒரு வேளை, மூன்று வேளை பூசையும், ஸ்நானமும், அபிஷேகமும், ஒவ்வொரு சாமிக்கும் பூசை நாள் 1-க்கு 1படி, 2படி, 100படி, 10மூட்டை, 20 மூட்டை, 50மூட்டை அரிசி வீதம் சமைத்து வைத்து ஆராதனை செய்வதும்,மற்றும் பலப் பல நைவேத்தியங்கள் செய்வதும், கணக்கில்லாமல் துணிகள் கட்டுவதும்,நகைகள் போடுவதுமான செலவுகள் செய்து வருகிறார்கள்.

மதத்தலைவர் அல்லது தெய்வீகத் தன்மை பொருந்தியவர்கள் என்பவர்களிலும், மற்ற மதக்காரருக்கு ஒவ்வொருவரே உண்டு. அதாவது கிறிஸ்து சமயத்திற்கு கிறிஸ்து நாதரும், இஸ்லாம் சமயத்திற்கு முகமது நபியும், பவுத்த சமயத்திற்கு புத்தரும் இப்படி ஒவ்வொருவரே உண்டு. ஆனால், இந்து சமயத்திற்கு முதலில் யார் என்று கண்டுபிடிப்பது கஷ்டமாகும். அப்படிக் கண்டு பிடித்து விட்டால் பிறகு அவர்களைப் போல் நூற்றுக் கணக்காக, ஆயிரக்கணக்காக, லட்சக்கணக்காக அவதாரம், தேவர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், ரிஷிகள், முனிவர்கள் முதலாகிய தெய்வ அவதாரமும் தெய்வ அம்சமும் பொருந்தியவர்கள் கணக்கு வழக்கில் அடங்காத அளவு ஆகிவிடும்.

சமய ஆதாரங்கள் விஷயத்தில் மற்ற சமயக்காரர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆதாரமே உண்டு. அதாவது கிறிஸ்துவருக்கு பைபிள், இஸ்லாமானவருக்கு குர்ஆன், பவுத்தருக்கு திரிபீடகம் என்பவையாகும். ஆனால், இந்து சமயக்காரருக்கு 4 வேதம், 6 சாஸ்திரம், 18 புராணம். இவை தவிர, அவர் சொன்னது, இவர் சொன்னது, உதாரணமாக, மனு சொன்னது, பராசரர் சொன்னது, ரிஷிகள் சொன்னது, போதாயனர் சொன்னது, பகவான் சொன்னது, மாடு, குரங்கு, கழுகு, கிளி சொன்னது என்பவை போன்ற கணக்கு வழக்குக்கடங்காத அநேகம் உண்டு.

இந்தவிதமான ஆதாரங்களைப் பார்க்கும் உரிமை விஷயத்திலோ, மற்ற சமயக்காரர்களில் யாரும் அச்சமய ஆதாரம் எதையும் கேட்க-பார்க்க-படிக்க-மனத்தில் இறுத்த-உரிமையுண்டு. ஆனால், இந்து சமயக்காரருக்கோ அச்சமய ஆதாரத்தை நூற்றுக்கு மூன்று பேர் அதிலும் பெண்களை நீக்கிவிட்டால், 100-க்கு ஒன்றரைப் பேர் மாத்திரமே படிக்க-கேட்க-பார்க்க உரிமையுடயவர்களாவார்கள். பாக்கி தொண்ணூத் தெட்டரைப் பேர்கள் அவைகளைப் பார்த்தோ, கேட்டோ, படித்தோ விட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவதும், கண்ணைக் குத்துவதும், நாக்கை அறுப்பதும் முதலாகிய பலவகைத் தண்டனைகள் படிப்படியாயுண்டு.

இப்படியிருக்க, இதுபோலவே இன்னும் அநேக விஷயங்களில் இந்து மதம் வித்தியாசத்தை வைத்துக் கொண்டு அவற்றை நிலைநிறுத்த முயற்சிகளும் செய்து கொண்டு,இதன் பயனாகவே தேசத்தை அன்னிய நாட்டு ஆதிக்கத்திற்கும், நன்மைக்கும் விட்டுக் கொண்டு தேசத்தில் உள்ள மக்களை நாயினுங்கடையாக, கேவலமாய் நடத்தி இழிமக்களாக்கி அடிமைப்படுத்திக் கொண்டிருப்பதை மறந்து அநேகரை உப்புக்கு சிறைக்குப் போகச் சொல்கின்றது.

எனவே, பிற சமயத்திற்கும் நம(இந்து) சமயத்திற்கும் உள்ள தாரதம்மியத்தையும், அதனால் ஏற்பட்ட பலனையும் எனக்குத் தோன்றிய வகையில் ஒருவாறு எடுத்துச் சொன்னேன். இனி உங்களுக்குப் பட்டபடி முடிவு செய்து நடந்து கொள்ளுங்கள்.

**தோழர் மணியம்மை** - குடிஅரசு- 9.12.1944

அரசூர் அ.ப.சிவா



# நாலு பேரு நாலு விதமாப் பேசியது



## டீக்கடையும் பாராளுமன்றமும்

தெரு முக்குல இருக்கிற டீக் கடையிலதான் நானும் தம்பி விஜயனும் டீ சாப்பிடறது வழக்கமாகிப் போச்சு. நாடு இருக்கிற பொருளாதாரத்துலேயும், நாம இருக்கிற பொருளா-தாரத்துலேயும் ஐந்து ரூபாய் ஆவின் டீக்கடை வந்தது வசதியாய் போச்சு.

அன்னைக்கு அப்படித்தான் போய் இரண்டு வடையைப் பிச்சு வாயில போடறதுக்குள்ள சடாருன்னு எரிஞ்சு விழுந்தார் மாஸ்டர்.

என்ன மாஸ்டர் இவ்வளவு கோபம் அப்படின்னு தம்பி விஜயன் கேட்க, இல்லீங்க தலைவரே வர வர இந்த நாட்டுல யாரை நம்பறதுன்னு ஒரே குழப்பமா இருக்கு.

நம்ம ஓ.பி.எஸ் தமிழ்நாட்டு முதலமைச்சர் ஆனப்ப ஒரு டீக்கடைக்காரர் முதலைமைச்சர் ஆகிட்டாரேன்னு ஒரே மகிழ்ச்சியா இருந்துச்சு, ஆனாலும் பாருங்க செயல்படாத முதல்வர், பொம்மை முதல்வர் அப்படின்னு எல்லோரும் கிண்டல் செய்ய கடைசியில அம்மா மீண்டும் வந்துட்டாங்க.

இப்படி வருத்தமா இருக்கும்போது, ஏன் மாஸ்டர் கவலைப்படறீங்க முதல்வர் போனா என்ன? நம்ம பிரதமர் மோடியே டீ வித்துட்டு இருந்தவர்தான் அப்படினார். மறுபடியும் பெருமை பொங்கிச்சு, போதாக்குறைக்கு, கோவையில பேசும் போது, தான் டீ வித்ததை பிரதமர் சொல்ல அப்படியே சிலிர்த்தது, இப்ப அதுலையும் மண்ணு.

அப்படியா என்னாச்சு நான் ஆச்சரியமாக கேட்க, அதான் அவரு டீயே விற்கலை, அதுக்கு எந்த ஆதாரமும் இல்லையின்னு சொல்லிட்டாங்களே தம்பி என்றார்.

அட விடுங்க. இந்த மீடியாக்களுக்கு எப்பவும் இதுதான் வேலை. மோடியை விமர்சிக்கறதே என்றவனிடம், அட சொன்னது டீவியோ, பேப்பராகவோ இருந்தா கூட அப்படியே விட்டுவிடலாம், சொன்னது பிரதமர் அலுவலகம். ஒரு RTI கேள்விக்குப் பதில் சொல்லும்போது அவர்கள் பிரதமர் டீ விற்றார் என்பதற்கு எந்த ஆதாரமுன்னு இல்லையின்னு சொல்லிட்டாங்க.

அதான் தம்பி மிஸ்டு கால் கொடுத்துக் கட்சியில சேர்த்தானுக STD யே ஆனாலும் பரவயில்லை போனைப் பண்ணி நான் அந்த கட்சியில இல்லையின்னு சொல்லோனும் என்றபடி போனை எடுத்தவரிடம் முதல்ல அதைப் பண்ணுங்க என்றபடி நகர்ந்தோம்.

## மாணவர்கள் அரசியல் பேசலாமா?

*இது தேசத் துரோகம்.*

*அப்சல் குருவுக்கு எப்படி நினைவு நாள் கொண்டாடலாம்?*

*JNU வில் தினமும் 3000 காண்டம்கள் எடுக்கப்படுகிறது*

அடுக்கிக் கொண்டே போகலாம் விமர்சனங்களை. JNU வில் கடந்த மாதங்களில் நடைபெற்ற போராட்டங்கள், கைதுகள் இப்படித் தொடர்ச்சியாகப் பல்வேறு தளங்களிலும் JNU மற்றும் கண்ணையாகுமாருமே ஆக்கிரமித்து இருந்தார்கள்.

போராட்டங்களின் விளைவாக மார்ச் 8 மகளிர் நாளன்று பெண்களை இழிபடுத்துகிற மனுஸ்ம்ருதியின் 40 சுலோகங்களை எரிக்கும் போராட்டம் JNU- ன் BJP மாணவர் பிரிவான ABVB ன் முன்னாள் இணை செயலாளர் பிரதீப் நார்வல் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது.

இதையெல்லம் தாண்டி எனக்கு இப்போராட்டம் சார்ந்த அறிக்கைகளில் என்னை மிகவும் கவர்ந்தது, டாட்டா குழுமங்களின் தலைவர் ரத்தன் டாட்டா வின் அறிக்கையே. JNU மாணவர்களுக்கு தன் நிறுவனத்தில் வேலை இல்லை. நாட்டுப்பற்று இல்லாதவர்களுக்கு இங்கென்ன வேலை என ஒரு முத்தை உதிர்த்துள்ளார்.

நாம் JNU மாணவர்கள் சார்பிலும் நாட்டில் உள்ள சமூக மாற்றத்தை விரும்பும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவர் சார்பிலும் ரத்தன் டாட்டா அவர்களுக்கு நன்றி சொல்லியாக வேண்டும்.

பெரியார் தான் இப்போதும் நமக்கு துணை வருகிறார். நாம் எதை உடைக்க நினைக்கிறோமோ அதை வெளியில் நின்று உடைக்க வேண்டும். JNU மாணவனுக்கு உள்ளே என்ன வேலை மிஸ்டர். ரத்தன் டாட்டா.

போதக்குறைக்கு கட்செவியில் வலம் வந்தது அந்தப் புகைப்படம் பதான் கோட் தாக்குதலில் காயமுற்று இப்போது மீண்டும் பணிக்கு திரும்பியிருக்கும் சைலேஷ் படத்தைக் காட்டி இவர்தான் உண்மையான ஹீரோ கண்ணையா குமார் இல்லை எனக்கூறியது.

இது ஒரு மிடில் கிளாஸ் பிற்போக்கு இந்து மனப்பான்மை. இது தவறு எனப்புரிய நீங்கள் சேரிகளைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும் அல்லது சேரியில் பிறந்திருக்க வேண்டும் என்றேன்.

சேரிகளைவிட எல்லைகள் முக்கியம். எல்லைகள் தகர்ந்தால் இங்கு சேரிகளே இருக்காது என்றார் நண்பர். இங்கிருக்கிற சேரிகள் உடையுமானால் எத்துனை எல்லைகள் தகர்ந்தாலும் கவலையில்லை என்பதே என் பதிலாக இருந்தது.

## தேர்தல் அவசரம்

அன்னிக்கு அப்படித்தான் ரோட்டுல போயிட்டு இருக்கறப்ப, ஒன்னுக்கு அவசரமுன்னு ஓரமா ஒதுங்கி திரும்பறதுக்குள்ள பத்து ஜீப் கடந்து போச்சு. ‘தேர்தல் அவசரம்’ என ஸ்டிக்கர் ஒட்டியவாறு ஆம்புலன்ஸ் அவசரம், மருந்து பொருட்கள் அவசரம், முழு அடைப்பு நேரங்களில் அத்தியாவசியப் பொருள்கள் அவசரம்... புரிந்து கொள்ள முடிகிறது அதென்ன ‘தேர்தல் அவசரம்’ தேர்தல் தேதி அறிவித்தவுடன் அரங்கேறிவிட்டது, அத்துனை காட்சிகளும்.

மக்களின் அன்றாட நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட எந்த அரசாங்க அலுவலகத்துக்கு எந்த வேலையாகப் போனாலும் வரக்கூடிய ஒரே பதில் தேர்தல் முடிந்தபின் வாங்க என்பதுதான்.

மக்களை ஆளப்போகிற அரசாங்கத்தையும், அதன் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்க மக்கள் சேவகர்கள் காட்டுகிற அக்கறையைக் கொஞ்சம் மக்களுக்காகத் தாங்கள் செய்கிற வழக்கமான வேலைகளிலும் காட்டினால் நன்றாக இருக்கும் என்பதே நம் கோரிக்கை.

ஒரு இயந்திரம் எப்போது தன் முதலாளிகளுக்காகவே மட்டும் இயங்கி கொண்டிருக்கக் கூடாது. தொழிலாளர்களுக்காகவும் இயங்க வேண்டும். ஏனெனில் முதலாளிகளைத் தீர்மானிப்பது தொழிலாளிகளே என்பதை இயந்திரங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேன்றால் முதலாளி மாறினால் கழற்றிக் காயலான் கடைக்குப் போட்டுவிடுவார்கள் .

## வேட்டி கட்டுன ஆம்பளயா இருந்தா?

அலைபேசி சிணுங்க எடுத்தபோது, தடாலடியாய் ஆணாதிக்கம் எத்தனை வகைப்படும் என்றார் மலர் மாமா. என்ன மாமா ஆச்சு? அக்காகிட்டச் சொல்லி அடி வேணுமா? எனக் கேட்டேன்.. கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுங்க என அதட்டினார்.

என்ன மாமா ஏகாதிபத்தியவாதி போல மிரட்டுறீங்க? என்றவனிடம் திருப்பிக் கேட்டார் அப்ப ஆணாதிக்கம் ஏகாதிபத்தியமா?

என்ன மாமா சுத்த இது மாதிரி கேள்வி கேட்கறீங்க? என முடிக்கும் முன் சுத்த இதுன்னுன்னா லூசு மாதிரியா அப்படின்னு மாமா கேட்க, உங்களப்போய் நான் அப்படி சொல்வேனா? என்றவனிடம் மறுபடியும் அதே கேள்வியை கேட்டார்.

நீங்க அக்காகிட்ட போனைக் குடுங்க மகளிர் நாள் வாழ்த்து சொல்லணும் என்றவனிடம், அது கெடக்கட்டும், கேட்ட கேள்விக்குப் பதில் எங்கே மறுபடியும் மடக்கினார் மலர் மாமா. அட என்ன மாமா எந்த ஆதிக்கமும் ஏகாதிபத்தியம் தானே என்றேன்.

ஓ அப்படியா? பொதுவுடமை ஆணாதிக்கம் பற்றிக் கேள்விபட்டிங்களா? இது மலர் மாமா. என்ன மாமா குழப்பறீங்க. வெயிலுக்குத் தலையில எலுமிச்சம் பழம் வச்சுத் தேய்ங்க என்றேன். சரி வீட்ல போயி டீவியைப் பாருங்க என்றார்.

டீவியில் பார்த்த பின்பு தான் தெரிந்தது எலுமிச்சம் பழம் தேய்க்க வேண்டிய தலை மாமா உடையதில்லை, முத்தரசனுடையது என்று. அம்மா ரிமோட்டை வாங்கி சேனலை மாற்ற எதோ ஒரு சிரியலில் ஒருவன் நரம்பு புடைக்கக் கத்திக் கொண்டிருந்தான். நீ மட்டும் வேட்டி கட்டுன ஆம்பளையா இருந்தா வெட்டுடா பார்க்கலாம்.

டாக்டர் பெரியார்செல்வி

2




# கசப்பான இனிப்பு வியாதி

அமெரிக்கா டயாபடிஸ் அசோசியேஷன்-
BLOOD-GLUCOSE LEVEL

உணவுக்கு முன் 80-130 MG/DL

உணவுக்கு பின் - 80-180 MG/DL

உலக சுகாதார நிறுவனம்- (W.H.O)
WORLD HEALTH ORGANISATION

உணவுக்கு முன் 80-120 MG/DL

உணவுக்கு பின் - 80-180 MG/DL

பொதுவாக அதிகபட்சம் 200 MG/DL

உலகில் அனைத்து நாடுகளிலும் அதிகபட்சமாக பின்பற்றுவது மேற்கூறிய அளவுகளே. இதில்

MG- MILLI GRAM / DL- DECI LITER

10 DECI LITER = 1 LITER

பொதுவாகவே சர்க்கரை வியாதிக்காரர்கள் அசைவம் சாப்பிடக்கூடாது, சைவம் தான் சாப்பிட வேண்டும். இறைச்சி, முட்டை ஆகியவை கொழுப்பு நிறைந்தவை என்ற கருத்தாக்கம் எங்கும் பரவிக் கிடக்கிறது. இது உண்மையா? இக்கருத்துருவாக்கம் எப்போது யாரால் உருவாக்கப்பட்டது என்பதைப் பார்ப்போம்.

1862 ம் ஆண்டு வில்லியம் பாண்டிங் எனும் சமையல்காரர் மன்னர்களுக்கும், பிரபுக்களுக்கும் சமைத்து வந்தார். அவர்கள் உண்ட உணவைத் தானும் உண்டு வந்ததால், தன் முப்பதாவது வயதில் பருமனாக ஆனார். பின்பு மருத்துவரின் ஆலோசனைப்படி கடுமையாக உடற்பயிற்சி செய்தார். இதன் விளைவாக நன்றாகப் பசியெடுத்து மேலும் சாப்பிட்டு மிகப் பருமனாக ஆனார்.

கலோரி உணவே எடுத்தார். ஒரு கட்டத்தில் வெறும் காய்களை மட்டும் சாப்பிட்டு வந்தார். கடுமையான பயிற்சியும் உணவில்லா முறையும் அவரை மருத்துவமனையில் சேர்க்கும் நிலைக்கு ஆக்கிவிட்டது. ஆனால் அவரால் மூன்று கிலோ மட்டுமே எடையைக் குறைக்க முடிந்தது. மேலும், காது கேட்டும் திறனும் குறைந்து கொண்டே வந்தது.

வில்லியம் பாண்டிங் 1862 ல் வில்லியம் ஹார்வி எனும் மருத்துவரைச் சந்தித்தார். அப்போது அவருக்கு குளுக்கோஸ் (SUGAR) இருப்பது கண்டுபிடிக்கப் பட்டது. உடல் எடைஅதிகரிப்பு மற்றும் காது கேட்காத தன்மைக்குக் காரணம் சர்க்கரையின் அளவு கூடுதலே என்று வில்லியம் ஹார்வி கூறினார். மேலும் அதற்கு ஒரு எளிய முறையை வில்லியம் பாண்டிங்க்குக் கூறினார்.

சர்க்கரைச் சத்து எதில் அதிகமோ ( அரிசி, பருப்பு, கோதுமை, ரொட்டி, பழங்கள், பீன்ஸ், பால்) போன்றவற்றைத் தவிர்த்து சர்க்கரையற்ற உணவுகளை (இறைச்சி, முட்டை மற்றும் சீஸ்) எடுக்க வேண்டும் என்று கூறினார்.

வில்லியம் பாண்டிங் முதல் முறையாக இப்படி ஒரு ஆலோசனையைப் பெறுகிறார். இதில் எப்படி எடை குறையும் ? முட்டையும் இறைச்சியும் எடுத்தால் உடல் எடை அதிகரிக்கத்தானே செய்யும் என்று ஹார்வியிடம் கேட்டார்.

ஹார்வி, குண்டாக இருக்கும் புலி, சிங்கம், ஓநாயை யாராவது பார்த்ததுண்டா என்றார்? இவை யெல்லம் இறைச்சியை மட்டும் சாப்பிடுகிறது. குண்டாக இருக்கும் மிருகங்களான யானை, காண்டாமிருகம், நீர்யானை போன்றவை முழுக்க முழுக்கத் தாவர உண்ணிகளே என்று விளக்கமளித்தார்.

வில்லியம் பாண்டிங் ஹார்வியின் அறிவுரையின் படி மூன்று வேளையும் மீன், முட்டை, பன்றி, மாடு இறைச்சியை மட்டும் உண்டார். மாலையில் டீயும் பழமும் உண்டார். மேலும் ரொட்டி, பால், உருளைக்கிழங்கு, இனிப்பு ஆகியவற்றை முற்றிலும் தவிர்த்தார். இரண்டு ஆண்டுகளில் 30 கிலோ எடையைக் குறைத்து அதிசயதக்க வகையில் உடல் ஆரோக்கியம் பெற்று, காது கேட்கும் திறனும் நாளடைவில் குணமாகி விட்டது.

மகிழ்ச்சியடைந்த பாண்டிங் 1863 ம் ஆண்டு இறுதியில் தன் அனுபவங்கள் மற்றும் டயட் முறையைப் புத்தகமாக எழுதினார். அந்த முறை டயட்டிங் என்பதற்கு பதில் பாண்டிங் என்று அழைக்கப்பட்டு பிரபலமானது.

பாண்டிங் டயட் பிரபலமானதால் அதைக் குறித்து விமர்சனங்களும் வரத்துவங்கியது. நூலைப் படித்த மருத்துவர்கள் பாண்டிங் சமையல்காரர் என்பதால், இந்த டயட்டின் அறிவியல் அடிப்படை என்ன? இது எப்படி வேலை செய்கிறது? என்று கேள்வி எழுப்பினர். அறிவியல் அடிப்படையற்ற நூல் என்று இதை ஒதுக்கி வைத்தனர். ஆனால் மக்களிடம் பாண்டிங் டயட் பெரும் வரவேற்பைப் பெற்றது. பின்பற்றியோரின் எடை நன்றாக குறையத் தொடங்கியது.

பாண்டிங் ட்யட்டை ஆராய சில மருத்துவர்கள் முன் வந்தனர். 1890 ல் ஹெலன் டென்ஸ்மோர் என்ற அமெரிக்க மருத்துவர் தனது நோயளிகளுக்கு பாண்டிங் டயட்டையே பரிந்துரைத்தார், இதைப் பின் பற்றியோர் எடை நன்றாகக் குறைய ஆரம்பித்தது. ஹெலன் டென்ஸ்மோர்ன் பரிந்துரை பாண்டிங் டயட்டுக்கு பெரிய திருப்பமாக அமைந்தது.

இதன் தொடர்ச்சியாக அமெரிக்க, ஐரோப்பா மருத்துவர்கள் பாண்டிங் டயட்டை ஏற்றுக் கொண்டு சர்க்கரை நோயாளிகளுக்கு இதைப் பரிந்துரைத்தனர். சர்க்கரை வியாதி தொடர்புடைய நூல்களும் பாண்டிங் டயட்டையே வலியுறுத்தின.1863 - 1950 வரை உலகின் அனைத்து மருத்துவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகாரப்பூர்வ டயட்டாக இது இருந்தது.

1950 களுக்குப் பிறகு எப்படி இறைச்சியும் முட்டையும் கொழுப்பான உணவுகளாக மாற்றப் பட்டது? சைவ உணவும், LOW COLORI DIET எனப்படுகிற தானிய உணவுகள் (அதிகபட்சமாக மக்காச் சோளத்திலிருந்து தயாரிக்கப்படும் உணவுகள்) எப்படி கொழுப்புக் குறைந்த ஆரோக்யமான உணவு என மக்கள் மனதில் பதியப்பட்டது? என்பதை அடுத்த இதழில் பார்ப்போம்.

## சிறுநரிக் கூட்டத்தை விரட்டி அடி

**- வீரா பாலு**

பரவுது பரவுது காவிவெறி
பன்னாட்டுப் பண்ணுது குள்ளநரி
அம்பேத்கர் பெரியார் சொன்னபடி
அத அடிச்சி நொறுக்கிடு கண்டபடி

நெத்தியில நாமம் போட்டுக்கிட்டு
புத்தியில குரோதம் வச்சிக்கிட்டு
பல்லப் பல்ல காட்டிக்கிட்டு
பவுசாப் பரவுது பார்ப்பனியம் அத
லேசுல விட்டுட்டா வச்சிடும் சூனியம்

மாட்டுக்கறிய புனிதமெங்கும்
மனுசக்கறிய ருசி பார்க்கும்
வேதாந்தம் சித்தாந்தம் பேசிக்கிட்டே
வெடிகுண்டு வைக்கும் உள்ளுக்குள்ள

இராமன் பெயரால் படைதிரட்டி
பாபர் மசூதிய இடிச்சுப்புட்டு
தாஜ்மஹாலில் கன்னம் வைக்கும்
சிவனின் பெயரால் சீரழிக்கும்

பன்னாட்டு கம்பெனிக்கு வாலாட்டும்
அம்பானி அதானிக்கு விளக்குப் பிடிக்கும்
இயற்கை வளங்களைக் கூறகட்டி
சல்லீசாக வித்துப்புட்டு
தேசியம் என்றே கூச்சலிடும்
வேசித்தனமே இதன் பிழைப்பாகும்

குல்லா போட்டவன் குற்றவாளி
தாடி வச்சவன் தேசத்துரோகி
எதிர்த்து நிற்பவன் நக்ஸலைட்டு
கும்பிட்டு விழுபவன் தேசபக்தன்
புதுசு புதுசா கௌப்பிவிடும்
தெளிந்த புத்திய கொழப்பிவிடும்

மாமாத்தனங்களை வீரமென்கும்
மார்தட்டி எதிர்ப்பவனைத் துரோகியென்கும்
தேசிய இனங்களை ஒடுக்கி கொண்டே
தேச ஒற்றுமைப் படம் ஓட்டும்

சாதிமதவெறிய ஊட்டிவிடும்
மொழி இன வெறிக்குத் தூபமிடும்
மனுசனுக்கு மனுசனப் பகையாக்கும்
கார்பரேட் முதலைக்கு உனை இரையாக்கும்

மார்க்சியம் அம்பேத்கரியம் பெரியாரியம்
உனைச் சிந்திக்கவைக்கும் நெருப்பாகும்
சிந்தனை நெருப்பைக் கையில் பிடி
சிறுநரிக் கூட்டத்தை விரட்டி அடி .



ரீ.சிவக்குமார்



# பெண்கள் உரிமைக்காக பெரியார் என்னவெல்லாம் செய்தார் தெரியுமா...?

மார்ச் 8... உலக மகளிர் தினம். பெண்களுக்கான உரிமைகள் குறித்த சிந்தனைகளையும், அதற்காகச் செயலாற்றியவர்களையும் நினைவுகூரும் நாள் இன்று. பெண்ணியம் என்றாலே ஏதோ அயல்நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சித்தாந்தம் என்கிற மனப்போக்கு நம்மில் பலருக்கு இருக்கிறது. ஆனால், 80 ஆண்டுகளுக்கு முன்பே பெண் விடுதலை குறித்த வீரியமிக்க சிந்தனைகளை முன்வைத்த மரபு நமக்குண்டு.

காங்கிரஸில் இருந்து வெளியேறிய தந்தை பெரியார், சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கியபோது சாதி ஒழிப்புடன், பெண்ணியச் சிந்தனைகளையும் வலுவாக முன்வைத்தார். சாதி ஒழிப்பு, பெண் விடுதலை இவை இரண்டும்தான் பெரியாரின் செயல்பாடுகளுக்கான முக்கியமான அடித்தளங்கள் என்றே சொல்லலாம்.

ஆனால், இதை அவர் மட்டுமே சாதிக்கவில்லை. சுயமரியாதை இயக்கத்தில் இயங்கிய நூற்றுக் கணக்கான பெண்களும், பெண்ணியச் சிந்தனையாளர்களும் காலத்தைத் தாண்டிச் சிந்தித்தார்கள். வெறுமனே பெண்களுக்கான உரிமைகளைப் பேசுவது என்பதைத் தாண்டி சாதி, மதம், வர்க்கம் ஆகியவற்றுக்கும், ஆணாதிக்கத்துக்கும் இடையிலான தொடர்புகள் குறித்தும் விரிவாக எழுதியும் பேசியும் வந்தனர். மேலும் உலகளாவிய சிந்தனைகளான மார்க்சியம், தாராளவாதம் போன்ற சிந்தனைப் போக்குகளோடு இந்தியப் பெண்களின் பிரச்னைகளை அணுகவும் முற்பட்டனர்.

காலத்தால் மறந்துபோன நம் முன்னோடிப் பெண்ணியச் சிந்தனையாளர்களின் செயல்பாடுகளில் சில துளிகள் இவை....

✦ பெரியார் காலத்தில் வாழ்ந்த சீர்திருத்த வாதிகள் சதி என்னும் உடன்கட்டை எதிர்ப்பு, விதவை மறுமணம், குழந்தைமண எதிர்ப்பு ஆகியவற்றை வலியுறுத்தக்கூடியவர்களாக மட்டுமே இருந்தனர். திருமணம் என்கிற அமைப்புக்கு வெளியே பெண்கள் தனித்து வாழ்வது, பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கான உரிமைகள் ஆகியவை குறித்து நவீனப் பெண்ணிய உருவாக்கத்தையொட்டி சமீபகாலமாகத்தான் பேசப்படுகின்றன.

ஆனால், 1928 செங்கல்பட்டு முதல் சுயமரியாதை மாகாண அழைப்பிலேயே, “தனியாக வாழும் பெண்கள், விதவைகள், விபச்சாரிகள் என்று தம்மைக் கருதிக்கொள்வோர் சிறப்பாக இந்த மாநாட்டில் பங்கேற்க வேண்டும்” என்று பெரியார் எழுதுகிறார். வெறுமனே சொல்லளவில் நின்றுவிடாமல் தனது வீட்டிலேயே பெண்களுக்கான முறைசாரா அமைப்பு ஒன்றையும் ஏற்படுத்தி, அதில் பெண்கள் தங்கள் பிரச்னைகள் குறித்து பேசுவதற்கும் வசதி செய்து தந்தார்.

✦ வீட்டைவிட்டு வெளியேறும் பெண்கள், அநாதரவான பெண்கள் தங்குவதற்காக ஒரு விடுதியையும் நடத்தியிருக்கிறார் பெரியார்.

✦ மூன்றாவது தஞ்சை மாவட்ட சுயமரியாதை மாநாட்டில் 22 வயதான சின்னராயம்மாள் என்ற பெண்ணின் சார்பாக ஒரு கோரிக்கை வைக்கப் பட்டிருக்கிறது. 50 வயதான ஒரு ஆணுக்கு மூன்றாம் தாரமாக வலுக்கட்டாயமாகத் திருமணம் செய்யப்பட்டிருந்தார் சின்னராயம்மாள். ‘குழந்தை வேண்டும்’ என்று அவரது கணவர் கட்டாய உறவு கொள்ள முயன்றபோது, சின்னராயம்மாள் வீட்டை விட்டு வெளியேறி பெரியார் நடத்திய விடுதியில் குடிபுகுந்தார்.

✦ சுயமரியாதை இயக்க ஆதரவாளரான டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டியை ஆதரித்து தேவதாசி ஒழிப்புச் சட்டம் கொண்டு வருவதற்குத் துணை நின்ற சுயமரியாதை இயக்கம்தான், ”பெண்களுக்குச் சமயக்கல்வி அளிக்கப்படவேண்டும்” என்று அவர் பேசியபோது எதிர்த்தும் வந்தது. இதை எதிர்த்து குடியரசுவில் எழுதியவரும் தி.சு.மாசிலாமணி என்ற பெண்தான்.

✦ “பல மனைவிகளுடைய கடவுள்களை விமர்சிக்கும் சுயமரியாதை இயக்கம் ஒரு மனைவி உயிருடன் இருக்கும்போது வேறு பெண்ணை மணந்துகொள்வதை ஏற்றுக்கொள்கிறதா?” என்று ஒரு கூட்டத்தில் பெரியாரிடம் கேட்கப்பட்டது. “கடவுள்களை விமர்சிப்பதாலேயே அவர்களின் எல்லாச் செயல்களையும் கண்டிப்பதாக ஆகாது. கடவுள் மூச்சுவிடுவதாகப் புராணத்தில் இருப்பதால் நாம் மூச்சுவிடுவதை எதிர்க்கிறோமா என்ன? அதனால், பலதார மணத்தை நாங்கள் ஏற்கிறோம். இதே உரிமை பெண்களுக்கும் இருக்கவேண்டும்” என்றும் பெரியார் பதில் அளித்தார்.

✦ சுயமரியாதை இயக்க முன்னணி வீரர் அ.பொன்னம்பலத்தாரின் மனைவி சுலோசனா, ஏற்கனவே திருமணமானவர். ஆனால், கணவரோடு வாழ விருப்பமில்லாததால் அவருடைய சம்மதத்துடன் பொன்னம்பலத்தாரைத் திருமணம் செய்துகொண்டார்.

✦ பெரியாரின் வாழ்க்கை வரலாற்று நூலான ‘தமிழர் தலைவர்’ நூலை எழுதிய சாமி.சிதம்பரனார் சிவகாமி என்ற விதவையைத் திருமணம் செய்துகொண்டார்.

✦ 1935-ல் மாநில சுயமரியாதை சங்கப் பொருளாளர் வை.சு.சண்முகத்தின் மகளின் திருமணத்தில் மணப்பெண், மணமகனுக்குத் தாலி கட்டினார்.

✦ 1930- களில் கருத்தடை பற்றிய கட்டுரைகளைக் ‘குடி அரசு’ இதழ் தொடர்ச்சியாக வெளியிட்டது. அப்போது அரசாங்கம்கூட குடும்பக்கட்டுப்பாடு குறித்த பிரசாரங்களை முன்னெடுக்காத காலகட்டம் அது என்பதை நினைவில்கொள்ள வேண்டும்.

✦ காத்ரின் மேயோ எழுதிய ‘பாரத மாதா’ என்ற புத்தகம் இந்தியப் பெண்களின் அவலநிலை குறித்து அம்பலப்படுத்தியதால் அது இந்தியர்களை இழிவுபடுத்துவதாகத் தேசியவாதிகள் எதிர்த்தனர். ஆனால், அதை மொழிபெயர்த்து குடி அரசு தொடராக வெளியிட்டது.

✦ சோவியத் ரஷ்யாவில் பெண்களின் நிலை குறித்த கட்டுரைகள் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டன. துருக்கிப் பெண்கள் விடுதலை குறித்து ஹாவிட் ஹானும் என்பவர் ஆற்றிய உரை வெளியிடப்பட்டது. தொடர்ச்சியாக நவீனச் சிந்தனைகளும், பெண்ணியச் சிந்தனைகளும் அயல்நாடுகளில் பேசப்படும்போது சாத்தியப்பட்டவரை அதை மொழிபெயர்த்து, ‘குடி அரசு’ இதழ் வெளியிட்டு விவாதித்தது.

✦ ‘ஆண் - பெண் வித்தியாசம்’ குறித்து 1935-ல் நாகை முருகேசன் என்பவர் எழுதிய கட்டுரை யொன்றில் ஏங்கெல்ஸ் தொடங்கி பாகோபென், ஹூம்போல்ட் ஆகிய மானுடவியலாளர்களின் ஆய்வுகள் மேற்கோள் காட்டப்படுகின்றன.

✦ சுயமரியாதை இயக்கத்துக்காரர்களால் பல பத்திரிகைகள் நடத்தப்பட்டன. அதில் ’அறிவுக்கொடி’ என்ற இதழை நடத்தியவர் எஸ்.சி.சிவகாமி அம்மாள் என்ற பெண்.

✦ 05.05.1935-ல் ‘பெண்கள் நிலையமும் பிள்ளை வளர்ப்பு விடுதியும்’ என்ற கட்டுரையை எழுதிய மயில்வாகனன், குழந்தை வளர்ப்பில் இருந்து பெண்களை விடுவித்து, அதற்காகத் தனியான விடுதிகளை ஏற்படுத்த வேண்டும் என்கிறார்.

✦ பெண்ணுரிமை தொடர்பாக ‘குடி அரசு’ இதழில் வெளியான சில கட்டுரைகள் : தேவதாசி களுக்கு ஒரு வேண்டுகோள், ரஷ்யாவில் ஆண்-பெண்

ஒழுக்கம், ஆண்மை அழியவேண்டும், சமதர்மத்துக்குப் பெண்கள் விடுதலை அவசியம், முஸ்லிம் பெண்களும் அடிமைகளேதான், பர்தாவின் கொடுமை, கத்தோலிக்க மதமும் பெண்களும், பெண்கள் நாடு - ஆண்களுக்கு வேலையில்லை, சோசலிசமும் பெண்களும், சோசலிச உலகில் பெண்கள், பெண்களும் தொழிலாளிகளே, பெண்களும் சங்கமும்.

✦ சுயமரியாதை இயக்க மாநாடுகளோடு தனியாகப் பெண்கள் மாநாடுகளும் நடத்தப்பட்டன. ஆனாலும், பெண்களுக்கென்று தனித்துவமான அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற விவாதத்தை நீலாவதி அம்மையாரும், ராகவனும் தொடங்கி வைத்தார்கள். அதேபோல் பெண்கள் நிலையம் ஒன்றை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

✦ சுயமரியாதை இயக்கத்தில் இயங்கிவந்த, தொடர்ச்சியாக 'குடி அரசு' இதழில் எழுதிவந்த பெண்களில் குறிப்பிடத்தக்கவர்கள்: தி.சு.மாசிலாமணி, பினாங்கு ஜானகி, நீலாவதி அம்மையார், ஜெயசேகரி, லட்சுமி, கிரிஜாதேவி, அன்னபூரணி, சுப விசாலாட்சி, சிதம்பரம் அம்மாள், பண்டிதை ரங்கநாயகி, வள்ளியம்மாள், குஞ்சிதம் குருசாமி, மீனாம்பாள் சிவராஜ், தருமு அம்மாள், நீலாம்பிகை, கே.ஏ.ஜானகி அம்மாள்.

✦ இசை வேளாளர் சாதியில் பிறந்த குஞ்சிதம் அம்மையார் இந்தியாவின் முதல் பெண் கல்வி அதிகாரியாகப் பணியாற்றியவர். முதல் பார்ப்பனரல்லாத இளைஞர் மாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசியவர். "கோயில்களை மருத்துவ மனைகளாக மாற்றவேண்டும்" என்றும், "கோயில் வருமானத்தைக் கொண்டு ஆதிதிராவிடர்களுக்கு முழுமையான இலவசக் கல்வி அளிக்கவேண்டும்" என்றும் 30-களில் பேசினார். முதலியார் சாதியைச் சேர்ந்த சுயமரியாதை இயக்க வீரர் குருசாமி ஒரு தலித் பெண்ணைத்தான் திருமணம் செய்துகொள்வது என்று உறுதியாக இருந்தார். பெரியாரும், மற்ற தோழர்களும் அவருக்காகப் பெண் பார்த்து குருசாமியைச் சமாதானம் செய்து குஞ்சிதம் அம்மையாருக்குத் திருமணம் செய்கிறார்கள்.

பெரியார் தலைமையில் நடைபெற்ற முதல் சுயமரியாதைத் திருமணம் குருசாமி - குஞ்சிதம் அம்மையாருடைய திருமணம். குருசாமி வீட்டில் யாரும் சம்மதிக்கவில்லை. திருமணத்தன்று குருசாமியின் தங்கை கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டார் என்று தந்தி வருகிறது. பெரியாரும் மற்றவர்களும் பதறிப் போகிறார்கள். "எங்கள் குடும்பத்திலேயே துணிச்சலான பெண் அவள்தான். இது திருமணத்தை நிறுத்துவதற்கான சதி" என்கிறார் குருசாமி. திருமணம் முடிந்தபிறகு அவரது அனுமானம் உண்மைதான் என்று தெரியவருகிறது.

இருவரின் திருமணத்தின்போது குஞ்சிதம் ஆங்கிலத்தில் உரையாற்றுகிறார். அதை மொழிபெயர்ப்பவர் "இதுவரை யார் யார் உரைகளையோ மொழிபெயர்த்திருக்கிறேன். ஒரு பெண் ஆங்கிலத்தில் பேசியதை மொழிபெயர்ப்பது பெருமையாக இருக்கிறது" என்கிறார். திருமணத்துக்குப் பிறகு தாலி அணியாமலும், பொட்டு வைக்காமலும் இருந்ததால் குஞ்சிதம் அம்மையாருக்குப் பள்ளியில் ஆசிரியர் பணிபுரியும் வாய்ப்புகள் மறுக்கப்பட்டன. பாரதிதாசன் கவிதைகளை முதன்முதலில் பதிப்பித்த பதிப்பாசிரியர் குஞ்சிதம் அம்மையார்தான்.

இவையெல்லாம் வெறுமனே 1928 - 35 காலகட்டத்து நிலை. இந்த சிறியளவிலான குறிப்புகளை வாசித்தாலே கருத்தியல் ரீதியாக சுயமரியாதை இயக்கம் எத்தகைய செயல்பாடுகளைத் தொடங்கி வைத்திருக்கிறது என்பதை அறியலாம். மேலும் ஒருபுறம் சனாதனம் உச்சத்திலும், இன்னொருபுறம் காங்கிரஸ் கட்சிக்கு மக்கள் ஆதரவு உச்சத்திலும் இருந்த காலத்தில் இத்தனை பெண்கள் கற்பு, குடும்பம், குழந்தைப்பேறு ஆகியவை குறித்து சுதந்திரமாகவும் சுயசிந்தனையோடும் விவாதித்திருக்கிறார்கள், செயல்பட்டிருக்கிறார்கள் என்பதுதான் ஆச்சர்யமானது!

– ரீ.சிவக்குமார்

vikatan.com இல் எழுதியது.

## டாக்டர் பெரியார்செல்விக்கு விருது

காட்டாறு தொகுப்புக்குழு உறுப்பினரும், அழுத்தமான பெரியாரியல்வாதியும், கோவை கே.ஜி மருத்துவமனை மருத்துவருமான டாக்டர். பெரியார்செல்வி அவர்களுக்கு DOCTOR OF EXCELLENCE என்ற விருது வழங்கப்பட்டது. 25.02.2016 மாலை 6 மணிக்கு கோவை Le Meridian விடுதி அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் திரு.ரோசைய்யா அவர்கள் விருதினை வழங்கினார்.

டாக்டர் பெரியார்செல்வியை அறிமுகப் படுத்திய KG GROUPS Chairman டாக்டர். பக்தவச்சலம் அவர்கள் "She doesn't believe in god, but acts like a god" என அறிமுகப்படுத்தினார். திராவிடர் கழகத் தலைவர் மானமிகு தோழர் கி.வீரமணி அவர்கள் பெரியார் செல்விக்கு பெயர் வைத்ததையும் நினைவு கூர்ந்தார். விருது பெற்ற தோழர் பெரியார்செல்வி அவர்களுக்கு திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் தொலைபேசியில் பாராட்டுத் தெரிவித்தார். விடுதலை ஏடும், பெரியார் முழக்கம் ஏடும் செய்தியை வெளியிட்டுள்ளன.

# முகநூலில்
# மகளிர் நாள் சிந்தனைகள்



**Ashok Kumar** 8 March at 09:14 ·

**மகளிர் உரிமைகளுக்காக பதவியை உதறிய அம்பேத்கர்**

புத்தருக்கு பின், இந்தியாவில் பெண்களின் நலனுக்கான இயற்றப்பட்ட (Hindu Code Bill,1951) என்ற சட்டமுன்வடிவை அனுமதிக்காத அன்றைய ஆட்சியாளர்களையும், இந்திய பாராளுமன்றத்தையும் எதிர்த்து தன்னுடைய இந்திய சட்ட அமைச்சர் பதவியைத் துச்சமெனத் தூக்கி எறிந்த Champion of Women's Rights பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களுக்கு சர்வதேச மகளிர் தினமான இன்று நன்றியுடன் நினைவுகூர்ந்து வீரவணக்கம் செலுத்திடுவோம். ஜெய்பீம்! ஜெய்புத்தம்!

**அந்த சட்ட வரைவில்:-**

பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை.

பெண்கள் மறுமணம்.

பெண்களுக்குப் பேறுகால விடுப்பு.

விவாகரத்தின்போது வாழ்வாதாரம் பெறும் உரிமை.

வரதட்சணை வழக்குகளைப் பிணையற்ற வழக்குகளாக அறிவித்தல்.

விருப்பமின்றிக் கணவனே பாலியல் உறவுகொள்ளக் கட்டாயப்படுத்தினால் கூட சட்டப்படி நடவடிக்கை.

பெண்களுக்குப் பிரசவகால விடுப்பு.

அலுவலகங்களில் குழந்தைகள் காப்பகம்.

இயற்கை உபாதைகளுக்காக அலுவலகங்களில் பெண்களுக்குத் தனி இடம், போன்ற பெண்களுக்கான அடிப்படை உரிமைகள் இடம்பெற்றது.

இந்த சாதியச் சமூகத்தில் வருடம்தோரும் பெண்கள் தினம் கொண்டாடும் பல அமைப்புகள் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களைக் கொண்டாடவோ, அவரைக் குறிப்பிடவோ மறக்கின்றனர், மறுக்கின்றனர். ஆனால் சமத்துவவாதிகளான நமக்கு இந்த உண்மையை உலகிற்கு உரக்கச்சொல்லும் கடமை இருக்கிறது.

**Veeramani Panneerselvam** Chennai, India ·

**வெறுப்பில்தான் எழுதுகிறேன்!**

மகளிர் தினம் மற்றும் பெண் விடுதலை குறித்துப் பதிவிடும் அன்பர்கள் குறிப்பாக, பெரியார் தொண்டர்களாகத் தன்னைக் காட்டிக் கொள்பவர்கள் - விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உள்ள பெண் போராளிகளின் படத்தைப் பதிவிடுகிறார்கள்.

இந்தியத் துணைக்கண்டத்தில் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளுக்கு எதிராக முதன் முறையாக என்று சொல்லமாட்டேன்; வீரியமிக்க போராட்டங்களையும், பிரச்சாரங்களையும் முன்னெடுத்தவர்கள் பெரியாரும், திராவிட இயக்கத் தொண்டர்களும். குறிப்பாக சுயமரியாதை இயக்கமாக இருந்தபோது அதில் இருந்த பெண் உறுப்பினர்கள் மிகப்பெரிய பண்பாட்டுப் புரட்சிக்கு வித்திட்டார்கள்.

பொதுவெளிக்கு வரும் பெண்கள் இந்த நவீன யுகத்திலேயே இவ்வளவு இடர்ப்பாடுகளைச் சந்திக்கிறார்கள் என்று சொன்னால் 1920 களிலும், அதற்கு பின்பும் நமது சுயமரியாதை இயக்கப் பெண்கள் எவ்வளவு இடர்ப்பாடுகளையும், இடையூறுகளையும், விமர்சனங்களையும், புறக்கணிப்பு களையும் தாண்டி செயல்பட்டிருக்க வேண்டும்.

மூவாலூர் ராமமிர்தம் அம்மையார், நாகம்மையார், கண்ணம்மாள், குஞ்சிதம் அம்மையார், நீலாவதி அம்மையார், மீனாம்பாள் அம்மையார், பண்டித நாராயணி அம்மையார், மருத்துவர் தருமாம்பாள் அம்மையார் போன்றோரின் பெயர்களைப் பெரியார் தொண்டர்களே, மறந்தும் மறைத்தும் விடுவார்கள் என்றே தோன்றுகிறது.

இதன்மூலம் இவர்கள் சாதித்த, குழந்தைத் திருமணமுறை ஒழிப்பு, கைம்பெண் மறுமணம், பாலியல் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு, தேவதாசிமுறை ஒழிப்பு, பெண்களுக்கு எதிரான பார்ப்பனச் சடங்கு மறுப்பு, மதமறுப்பு, சுயமரியாதை திருமண முறையை ஏற்றல் போன்ற சாதனைகளைப் பேசாமல் விவாதத்திற்கு உள்ளாக்காமல் - அடுத்தகட்டத்திற்கு நகர்த்தாமல் கடந்து செல்கிறோம் என்றே தோன்றுகிறது.

இக்கருத்துக்களை முன்வைப்பதன் மூலம் நாம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பெண் போராளிகளின் பங்களிப்பை மதிக்காதவர்கள் என்று பொருளல்ல. உலகில் போர் நடக்கும் நாடுகளிலெல்லாம் எக்காலத்திலும் பெண்கள்தான் பணயக் கைதிகளாக்கப்பட்டிருக்கிறார்கள், பாலியல் ரீதியாக கொடுமைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அதற்கு ஈழமும் விதிவிலக்கு அல்ல. அதை உணர்ந்த பிரபாகரன் அவர்கள் ஈழத்துப் பெண்களை போராளிகளாக்கினார். எந்த எதிரி தமிழ்ப் பெண்களை சிதைத்தானோ, அதே பெண்களை வைத்தே எதிரிகளை நிர்மூலமாக்கினார். தமிழனாக பெருமைப்பட வேண்டியதுதான்.

ஆனால் போராட்டம் என்பது ஆயுதம் ஏந்துவது மட்டும்தானா? ஒரு திராவிட இயக்கத்துக் காரனாக நாம் எதை சமூகத்துக்கு நினைவூட்ட வேண்டும்? - தற்காலச் சமூக சூழலுக்கு ஏற்ப நமது கொள்கைகளை எவ்வாறு முன்னகர்த்த வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் சிறிதும் அக்கறையில்லாமல் இரசிகக்குஞ்சுகளைப் போல் எதெற்கெடுத்தாலும் விடுதலைப் புலிகளின் படங்களைப் பதிவேற்றிவிட்டால் நானும் போராளி என்பது போல் நடந்து கொள்கிறார்கள். அதற்கு எல்லோரையும்போல் நாமும் 'ஹாப்பி வுமன்ஸ் டே' என்று சொல்லிவிட்டு அமைதியாக இருப்பது நலம்!

நம்பி




சிறுகதை

# நாம மட்டும் ஒசந்த ஜாதியா?

"சாமீ ... இன்னிக்கி ராத்திரிக்கி மந்தயிலிருக்கிற சாவிடியில ஊர்க்கூட்ட நடக்குதுங்கோ... இதில காலனிகாரங்கள தவர வூட்டுகொரு ஆம்பள சாமிங்க ஜாதி தவறாம வரோணுமுங்க... இது நாட்டாம சாமியோட வுத்தரவுங்கோ சாமீயோவ்....." என கைநாட்டுக்கவுண்டன்பாளையத்து துப்புரவுத் தொழிலாளியான குப்பன் கூவிக்கொண்டோ போனார்.

தன் தோட்டத்திற்குக் கூலி வேலை செய்ய வரும் உழைக்கும் மக்களான தலித் பெண்களை உருட்டி மிரட்டி உல்லாச வாழ்க்கை வாழ்ந்து வந்ததால் 48 வயதைத் தாண்டியும் சண்டியர் கவுண்டருக்குத் திருமணம் ஆகவில்லை. 10 ஏக்கர் பம்ப் செட் நிலத்திற்கு ஒரே வாரிசான இவரின் காலித்தனத்தை கண்ணால் கண்டவர்களும் காதாரக்கேட்டவர்களும் இவருக்குப் பெண் தர முன்வராததால், திருமணம் ஆகவில்லை. தனக்குத் திருமணம் ஆகததற்கு ஏதாவது மாங்கல்ய தோஷம் இருக்குமோ என பயந்த சண்டியர் கவுண்டர் ஒரு நல்ல ஜோசியரைத் தேடிச் சென்றார்.

ஜோசியர் சிப்பி முத்துக்களை உருட்டிப் போட்டு கூட்டிக்கழித்து ஒவ்வொரு விரலாக விட்டு எண்ணி மாங்கல்ய தோஷம் இருப்பதாகச் சொல்ல, வெலவெலத்துப்போனார் சண்டியர் கவுண்டர். 'ஏணுங்கோ பரிகாரம் கிரிகாரம் ஏதாச்சி இருந்தா சொல்லிப்போடுங்க, எம்புட்டு செலவானாலும் செஞ்சிடலாமுங்கோ"

அட அதுவொண்ணு பெரிய சாமாச்சரமிலீங்க கவுண்ரே அரசு - ன்னு முடியுறதல ஆம்பள மரமான அரசங்கன்னையும், வேம்பு ன்னு முடியுறதல பொம்பள மரமான வேப்பங்கன்னையும் ஒருசேர வாங்கியாந்து, ஒண்ணாப் பிண்ணிப்பெனஞ்சு ஊரு மத்தில நட்டு நல்ல மரமாகுரவரக்கும் தண்ணி ஊத்தனுமுங்க. இதான் பரிகாரம் எனச் சொல்லி ரூபாய் 1001 காணிக்கையாகப் பிடுங்கிச் சென்றார் ஜோசியர்.

சண்டியர் கவுண்டருக்கு மாங்கல்ய தோஷம் நீங்கியதோ இல்லையோ அரசு, வேம்பு இணைந்த சேர்க்கை விண்ணைத்தொடும் உயரத்திற்குப் பரந்து விரிந்து வளர்ந்து கொளுத்தும் வெயிலுக்கு மக்களுக்கு நிழலானது. பகலெல்லாம் சுற்றித் திரியும் பறவைகளுக்கு இளைப்பார களைப்பார இனிய வீடுகளானது. இந்த மரத்தடியில் இருக்கும் சாவடியில்தான் கைநாட்டுக்கவுண்டன்பாளயத்து உழைக்கும் மக்களால தலித்துகளை கசக்கிப் பிழிகின்ற சாதிக்கட்டுப்பாடுகளை அமுல்படுத்தும் ஊர் கூட்டங்கள் நடைபெறும்.

கைநாட்டுக்கவுண்டன்பாளயத்து மைனர்மாதிரி வலம்வரும் சண்டியர் கவுண்டர் பெண்களை வேட்டையாடி விளையாடுவதில் மட்டும் வில்லனல்ல சாதிக்கட்டுப்பாடுகளைக் கட்டிக் காத்து அதை மீறும் தலித் மக்களை அடித்து உதைத்து சித்தரவதை செய்யும் சிறப்பானப் பணியும் அவரைச் சார்ந்ததாகவே இருந்தது.

10 ஏக்கர் 20 ஏக்கர் உள்ள பெரும் உழவர்கள்; 2 ஏக்கர் 3 ஏக்கர் உள்ள சிறு உழவர்கள், ஆதிக்கச் சாதியினராகவும் - உழவுத் தொழிலுக்கு உதவுகின்ற ஏர் கலப்பை செய்ய கொல்லம்பட்டறை வைத்திருக்கும் தச்சுத் தொழிலாளர்கள்; சுகாதாரமான உணவு சமைக்க தேவைப்படும் மண்பாண்டங்களைச் செய்யும் தொழிலாளர்கள்; வயல்

வரப்புகளில் விவசாயத்திற்கு ஆடுமாடுகளின் கழிவுகளை இயற்கை உரமாக்க பட்டுபோட்டு பிழைக்கும் மக்கள் - இவர்களுக்கெல்லாம் முடி வெட்டுவதற்கு சவரத் தொழிலார்கள், துணி வெளுக்க சலவைத் தொழிலாளர்கள் என 300 வீடுகளைக் கொண்ட அனைவரும் ஊரின் மத்தியில் வசிக்கின்றனர்

இவர்களுக்குச் செருப்புத் தைத்துக் கொடுப் பதற்கும் இவர்களின் வீடுகளில் ஏற்படும் இறப்பு நிகழ்சிகளுக்கு இழவு சொல்லிப் போவதற்கும் தப்படிப்பதற்கும் இவர்களின் பண்ணைகளில் ஆடுமாடுகளுக்கு இணையாக இரவுபகலாக அடிமை வேலை செய்வதற்குப் பண்ணை அடிமைகளாக உழைத்து உருக்குலைந்து போகவும் - அனைவருக்கும் அடிமைகளாகவும் மேற்கண்ட சாதியினர் மலம் ஜலம் கழிக்க ஒதுங்குவதற்கும், இவர்கள் இறந்துபோனால் புதைப்பதற்கும் எரிப்பதற்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் சுடுகாடு அருகில் ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருக்கும் நத்தம் புறம்பு இடமான 1 ஏக்கர் நிலத்தில் தலா 400 சதுரடி வீதம் 80 குடிசைகள் கொண்டது சக்கிலியச் சேரி.

மழைவெள்ளக் காலங்களில் மேட்டுக் குடியிலிருந்து வழிந்து வரும் மழைநீர் மேட்டுக் குடியினரின் கழிவுகளுடன், ஆடுமாடுகளின் கழிவுகளையும் சேரும் கசதியுமாக அள்ளிக் கொண்டு வந்து சேரியில் தான் தள்ளும். அவற்றையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு வாழும் வாழ்க்கையை வசந்தமாக எண்ணித்தான் வாழவேண்டும்.

சேரி மக்கள் உழைத்துக் களைத்து ஓய்வெடுக்கவே 1 சென்ட் இடத்தைத் தவிர வேறு இல்லாத போது உழுது பயிர் வைக்க ஏது இடம். இவர்கள் செத்தே போனாலும் சேரியோடு சேரியாக மீதமிருக்கும் இடத்தில்தான் தோண்டித்தோண்டிப் புதைத்தாக வேண்டும். அதுதான் இவர்களின் சுடுகாடும்கூட. வாழ்வென்றாலும் சாவென்றாலும் ஆதிக்கச் சாதியினரைச் சார்ந்தேதான் வாழ்ந்தாக வேண்டும்

ஊரின் தலைவாசலிலிருந்து சேரியின் நுழைவாசல் வரை சேரி மக்கள் செருப்புகளைக் கையில்தான் பிடிக்க வேண்டும்.ஊருக்குள் சேரி மக்கள் சைக்கிள் வைத்துக் கொள்ளக்கூடாது.சேரி மக்களுக்கு ரேசன் கடைகளில் தனியாக பொருட்கள் வழங்கவேண்டும், தேநீர் கடைகளில் தனிக் குவளையில்தான் தேநீர் வழங்க வேண்டும். தொடை தெரிய வேஷ்டியை மடித்துக் கட்டக் கூடாது, தோளில் துண்டு போடக்கூடாது, மேல் சட்டை போடக்கூடாது பேருந்துகளில் சமமாக அமரக் கூடாது செல்போன் பயன்படுத்தக் கூடாது சேரியில் வாழும் 80 வயது முதியவரானாலும் இரண்டே வயதான மேட்டுக்குடியினரின் பிள்ளைகள் வாடா போடா என்று அழைத்தாலும் அந்தச் சிறுவர்களைக் கூட 'சாமி' என்றுதான் அழைக்க வேண்டும். சேரிப் பிள்ளைகள் பள்ளிக்குச் செல்லவே கூடாது. சேரிப்பிள்ளைகள் படித்துவிடுவார்கள் என்ற அச்சத்தில் கைநாட்டுக் கவுண்டன் பாளையத்திற்குப் பள்ளிக்கூடமே தேவையில்லை என்பது ஆண்டாண்டு காலமாக எழுதப்படாத சட்டமாக அமுலில் உள்ளது.

இந்த சாதிக்கட்டுப்பாடுகள் ஒழுங்காக நடைமுறையில் உள்ளதா என்பதைக் கண்காணித்து நடைமுறைப்படுத்தும் முழுப்பொறுப்பையும் தனக்கானதெனக் கருதி, தானே ஏற்றுக்கொண்டு இதை மீறுபவர்களை உருட்டி மிரட்டி அடித்து உதைத்து சண்டியர்தனம் செய்ததினால் வஞ்சியப்பனாக இருந்தவர் சண்டியர் கவுண்டராக கைநாட்டுக்கவுண்டன்பாளையத்தில் வலம்வந்தார்.

சேரியில் அடுத்த குழந்தையாவது ஆணாக இருக்கக் கூடாதா என முயன்று முயன்று அய்ந்து பெண்குழந்தைகளுடன் வாழ்ந்த சுப்பனுக்கு 400 சதுரடி நிலத்தை அரசாள ஆண்வாரிசு இல்லை என்ற ஏக்கம் ஒரு ஆண்பிள்ளையைப் பெற்றுக்கொள்ள எலும்புக்கு சேலை உடுத்தியதுபோல் இருந்த தன் மனைவி ஆராயியை தயார் படுத்தி பிரசவத்திற்கு தாய் வீட்டிற்கு அனுப்பியிருந்தார் சுப்பன்

என்ன சுப்பா ஒம்பொண்டாட்டிக்குக் கொழந்த பொறந்தாச்சா என யாராவது கேட்டால், " சாமீ நம்ம கையில என்ன இருக்குங்க எஜமானே மகப்பேரு புள்ளப்பேரு மகாதேவ கையில, நான் செத்தா கொள்ளி போட, ஏம் பொண்டாட்டி செத்தா மண்ணுத் தள்ள ஒரு புள்ளயக்கொடுத்தா ஆறுமுகன்னு பேரு வெக்கிறதா, அந்தப் பழனியாண்டவகிட்ட வேண்டியிருக்கேனுங்க" என பொறுப்பில்லாமல் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு போக்குவழியையும் கண்டுபிடுத்த சுப்பனுக்கு, ஆண்பிள்ளை பிறந்த அதேவேளையில் தன் மூத்த மகள் மாரியாயி 12 வயதில் பூப்பெய்தி தான் பெண் என்பதற்கான முழுத்துகுதியும் பெற்றாள்.

சுப்பன் ஒரு பண்ணையாரிடம் பண்ணையடிமை வேலை பார்ப்பதில் ஒருவருடக் கூலியான ஒரு மூடை நெல்லு, ஒரு மூடை சோளத்தில்தான் பிள்ளைகள் அரைவயிறு கஞ்சியுடன் காலந்தள்ளின. தற்போது மூத்த மகள் மாரியாயி அப்பாவிற்கு உதவியாகக் கூலி வேலைகளுக்குச் செல்லத் தொடங்கினாள்.

அப்படி ஒரு நாள் சண்டியர் கவுண்டர் தோட்டத்திற்கு வேலைக்குச் செல்ல வழக்கம்போல் சண்டியர் கவுண்டர் உருட்டி மிரட்டி உரசி விளையாட வெலவெலத்துப் போன மாரியாயி, அழுது துடித்துக்கொண்டு நடந்ததை சுப்பனிடம் சொன்னாள். சண்டியர் கவுண்டரை எதிர்கும் வல்லமையும் வலிமையும் இல்லாத சுப்பன் மிரண்டுபோய், பெண்டு பிள்ளைகளை அழைத்துக்கொண்டு கைநாட்டுக்கவுண்டன்பாளையத்திலிருந்து தன் மாமியார் ஊரான மசக்கவுண்டன் பாளையத்திற்குக் குடிபெயர்ந்தார்.

அந்தி சாயும் மஞ்சள் வெயில் வேளையில் இரைதேடச் சென்ற காக்கை குருவிகள் காச்மூச்சென கானம்பாடிக்கொண்டே தன் குஞ்சுகளைத் தேடி மந்தையிலிருந்த மரக்கிளைகளுக்கு வந்துசேர்ந்தன பொழுதோ இரவைத் தொட்டு எட்டு மணியைத் தாண்டிக்கொண்டிருந்தது. ஊர் கூட்டத்திற்கு

ஒவ்வொருவராக மந்தையை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

ஏளுங்கப்பா நாளியாயிட்ருக்குல எல்லாத்திய செத்த கூப்பீடுங்கோ என்றார் ஒருவர்

ஊராளிக்கவண்டனு மாரப்பகண்டனு டவுனுக்குப் பொயிட்டு வந்துட்ருங்காங்கல நாட்டாம வூட்டுல கௌம்பிட்டிருக்காரா... என மற்றொருவர்

மிச்சமிருக்குரவங்கல அந்த தோட்டிய அனுப்பி கூட்டியாரச் சொல்லுங்கப்பா இருட்டாயிட்டே இருக்குல்ல வேரோருவர்

சண்டீரு கவண்டமேல என்ன சாதா கேசா போடிட்டிருங்காங்க பிசிஆர் கேசல்ல போட்டிருங்காங்க. இப்போதக்கி ஜாமீனே கெடக்காதாமில்ல..

எப்பிடியாச்சும் சண்டீரு கவண்டன வெளியில கொண்டாந்தாருனுமுப்பா என வந்தவர்கள் ஆளாளுக்குப் பேசிக்கொண்டிருக்கும்போது நாட்டாண்மை வந்து சேர்ந்தார். அனைவரும் எழுந்து நின்று மரியாதை செய்தனர்.

எல்லாரு ஒக்காருங்கப்பா. எல்லா சனமும் வந்தாச்சாப்பா... புதுசா வந்த பொடிப்பய இப்பிடி பண்ணிட்டானேப்பா என முணுமுணுத்துக் கொண்டே நாட்டாண்மை உட்கார்ந்தார்.

ஏனுங்க டி.எஸ்.பி கிட்ட எதாச்சு பேசீனீங்களா அவுரு என்ன சொன்னருங்க?

அதாப்பா... இப்போதக்கி ஜாமீன் கெடக்காதா... மூணு மாசங்கூட ஆயிடுமா பிசிஆர் கேசோட, அரசாங்க ஆள அரசாங்க வேலயச் செய்யவிடாமத் தடுத்ததா ஒரு கேசு, இரும்புக் கம்பியால அடுச்சு கைய ஒடச்சதுக்கு கொல மொயற்சின்னு கேசுன்னு மொத்த மூணு கேசு போட்டிருங்காங்க என்றார் நாட்டாண்மை.

அசுலூருலிருந்து வந்த ஒரு நீச நாயிக்கி இம்பூட்டு துணிச்ச எப்பிடி வந்துச்சு?

அட அவெ எங்கத்த அசுலூரு நம்ம சண்டீரு கவண்டனுக்கு பயந்துக்குட்டு பொண்டாட்டி புள்ளங்கள கூட்டிக்கிட்டு வூரவுட்டு போனானில்லோ சுப்பெ அவெ மவனாம்.

அதானெ பழய பகய மனசுல வச்சுட்டுதான் அவ இம்புட்டு பண்ணியிட்டானா? சுப்பெ, எம்பூட்டு மட்டு மரியாத தெரிஞ்சவ... நம்மலயெல்லா பாத்துட்டா துண்ட எடுத்து கக்கதுல வச்சுகுட்டு குனுஞ்சு குப்பூடு போடுவா... நம்மூருலு இருந்தவரக்கு மட்டு மரியாதயா இருந்தவனுக்கு அசுலூருக்குப் போனபொறவு பள்ளிகோடத்துகள்ல அவெ மவனா அனுப்பியிருக்கானெ... அந்த வூருல கட்டுத்திட்டமே இல்லியாக்கும்.... நம்மூட்டு புள்ளங்களோட, சக்கிலிப் புள்ளங்ககளும் ஒன்னா மன்னா படிக்கிதுன்னா காலம் எப்புட்டுத்தொரம் கெட்டுக்கெடக்குன்னு பாருங்க... அத நாலு எழுத்து படுச்சதனால செருப்பக் கையில தூக்காம , சைக்கிள ஏறியாந்து வர்ரளவுக்கு இம்பூட்டுத் திமிரு.

அதனாதா நம்மூருல பள்ளிகோடமே வராம கவனமாப் பாத்துகோனும். இல்லாட்டி நம்மூருலயும் நம்மூட்டு புள்ளங்களோட, சக்கிலியூட்டுப் புள்ளங்களும் ஒன்னா ஒக்காந்து ஜாதி கலப்பு ஏற்பட்டுப்போசுன்னா இந்த மாதிரி ஏதாச்சும் எழவு வுழந்திரும். ஏதோ தப்புச்சோம் நம்மூட்டுப் புள்ளங்கள மட்டும் அசுலூருக்குப் போயி படிக்கிது.

இப்படிஆளாளுக்குப் பேசிக்கொண்டிருக்கும் போதே, நாட்டாண்மை குறுக்கிட்டு அட வளவளன்னு பேசாம சும்மயிருங்கப்பா. நம்மூருல இதுநாவரைக்கு இப்பிடி நடந்ததில்ல. மொதத்தடவய நம்மூருல பிசிஆர் கேசு போட்டிருங்காங்க அதப்பத்திப் பேசாம ஆளாளுக்குப் பேசிகிட்டு டி எஸ் பி என்னடான்னா...போஸ்ட்மேனுக்குக் கைமுறுஞ்சு போச்சு அதனாதா கேச பலமா போட வேண்டியதாச்சுன்னு சொல்ராரு. அதப்பத்தி ஒருயோசன சொல்லுங்கப்பா...

அதுசரிங்க, கை முறுஞ்சுபோச்சுன்னா அதுக்கு மட்டும் கேசு போடவேண்டியதுதானே? அதவுட்டுட்டு இப்பிடி பிசியாரு கேசா போடோணும்?

டிஎஸ்பிகிட்ட இதத் தானேப்பா நானுங்கேட்டேன். நீங்க நம்மூட்டு ஆளா நம்ம சாதிசனமா இருந்துகுட்டு இப்பீடி பண்ணீட்டீங்களேன்னு கேட்டேனப்பா... அதுக்கு அவுரு இந்த போஸ்டு மேனுக்கு ட்ரெய்னிங்கு கொடுக்க வந்த அரசாங்கத்தோட ஆளு பலமா சாட்சி சொல்ராருப்பா...

ஏண்டா சக்கிலி----- நீச நாயே ஒனக்கு எம்பூட்டு தயிரிய எங்கூருல செருப்பப் போட்டுக்குட்டு கோட்டு சூட்டோட சைக்கிள ஏறி வருவென சொல்லிக்கிட்டே இரும்பு கம்பியால அடுச்சு கைய ஒடச்சத அச்சு அசலா சாட்சி சொல்றான். கேசு போடுலீனா, பேப்பர்காரங்க டிவி காரங்களக் கூட்டியாந்து பேட்டி கொடுப் போமுன்னு மெறட்டுரான். அதனாலதா வேற வழியில்லாம கேசு போட வேண்டிதாச்சாம்... சார்ஜிட்ல இதல்லாம் சரிபண்ணி கேச ஒண்ணில்லாம நா பாத்துகுரேன். எப்பிடியாச்சு போஸட்மேனக் கொஞ்சம் சரிபண்ணப் பாருங்கன்னு சொல்ராரு.... அதுக்கு ஒரு நல்ல ஓசன சொல்லுங்கப்பா...

நம்மூருக்கு தபாலும் வேணாம், ஒரு எழவும் வேணாம். நம்மூருக்குத் தபாலாபீசுக்கு சம்மந்தமே வேண்டான்னு முடிவெடுங்கப்பா.

அட சுத்தவெவரங்கெட்ட ஆளால்ல இருக்கெநீ? அதெப்பிடி நம்மூருக்குத் தபாலே வேண்டாண்ணு முடிவெடுக்ரது? எலிக்கிப் பயந்துட்டு வூட்டக் கொளுத்தன கதையால்ல இருக்கு? இந்தக் கீசாதிகாரனா இல்லாம வேற சாதிக்காரனாப் பாத்து நம்மூருக்குத் தபால்கார வேணுமுன்னு கேப்போம்.

நாடாமைங்கற மொறயல தாபாலாபீசிரப் பாத்து அதயக் கேட்டேனே... நம்மூரு போஸ்ட்மேனு வேலய எடவொதுக்கீடு மொறய காலனிக்காரங்களுக்கு ஒதுக்கீட்டாங்களாம். நம்மூருல ஒரு பள்ளிகோடம் இருந்தா, நமக்குத் தோதா ஒரு பயலப் படிக்க வச்சு நம்மூரு கட்டுகோப்பு ஒடயாம இந்த வேலய வாங்கிருக்கலாம். அதையும் வுட்டுடோம்.

நம்ம மொடக்கிடிகவண்டம்பாளையத்துப் பஞ்சாயத்ல பெரசிடென்டு பதவிய காலனிகாரங்களுக்கு ஒதுக்கியும்,

நம்ம நாச்சிமுத்து கவண்ட வயிசு பெரசிடெண்டா இருந்து தாந்தோட்டத்ல பண்ணக்கிருந்த மாதாரிய பேருக்கு பெரசிடென்டாக்கி பெரசிடென்டு வேலய அவரே பாக்றார்ல? அதமாதிரி நம்மளுஞ் செஞ்சிருக்லாம்.

அரசாங்கத்தோட திட்டங்களுக்குள்ளபோயி சாதி காப்பாத்துர வெவராம் நமக்கு இல்லாததால நம்மூருக்கு பள்ளிகோடமே வேண்டாமுன்னு வெவரங்கெட்டத்தனமா வுட்டுடோம். இப்ப அதுவே வெனயா வந்து நிக்கிது. ஊருக்குள்ள பேசி ஒரு சுமூகமான முடிவுக்கு வாங்குன்னு டி எஸ் பி வேற சொல்றாரு அதுக்க தோதா ஒரு ஓசன சொல்லுங்கப்பா...

சுப்ப மவ கொனமாயி வந்தபின்னாடி நம்மூருக்கு வர்ர தபால நம்மூர்லிருந்த ஒரு ஆள அனுப்பி தபால வாங்கியாந்துட்டா அவன் நம்மூருக்கு வரவேண்டிதில்ல, இப்பிடி சாதிக்கட்டு ஒடய வேண்டிதில்ல

எத்தினி நாளிக்கி இப்பிடி பண்றது? இது வேணாம். வேற ஓசன சொல்ங்க.

இதுவரைக்கும் எல்லாவற்றையும் அமைதியாக இருந்து வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த தனிக்கொடி வாய்திறந்து, “சரி இவன ஒருத்தன மட்டும் செருப்பு போட்டுக்குட்டு சைக்கிள்ல ஏறியாந்து தபால் கொடுக்க வுட்டுடா என்ன? ஒரு போடுபோட்டார்.

அய்யய்யோ அதெல்லா கூடாதப்பா... கீபடி, மேபடி பெரியவங்க சும்மாவென்னும் ஒதுக்கி வக்கல நம்மூர்ல சாதி கட்டு ஒடயரத ஒத்துக்முடியாதப்பா மாதாரிகெல்லா மல்லுக்கு நின்னு சக்கிலியெல்லா சம்மந்தியாயிடுவாங்க அது கூடாது.

மீண்டும் தனிகொடி, “சரி ஒத்துகாம இந்த சுப்ப மவெ இல்லீன்னா இன்னோரு குப்ப மவதா இங்க தபால்காரனா வரமுடியும். அப்புறம் அவனயும் கைய கால உடச்சு போட்டுட்டு காலமெல்லா கோர்ட்டு கேசு போலீசு ஜெயிலுன்னு அலய முடியுமா?

இப்போ தாலுகாபீசுக்குப்போரோம் அங்க மேசாதிப் பயலுங்க மட்டுமா வேல பாக்குராங்க நமக்கு பட்டா சிட்டா வேணுமுன்னா கச்கிலி, பறயங்கள ‘சாரு’ன்னு சொல்றதில்லயா சக்கிலியரு பறயரு தாசில்தாரா இருந்தா மீசயவா முறுக்குரோம்? நமக்கு வேயலாகுனுமுன்னா கையெடுத்து கும்புட்டுத் தோள்ல கெடக்குர துண்ட கக்கத்துல வக்கரதில்லயா?

அவங்க ஒக்காந்திருக்குறப்ப நாமே கைகட்டி நிக்கிறதில்லயா? அது அரசாங்கத்து வேல. அவங்க அரசாங்கத்தோட அளுங்க. அதுமாதிரிதா இதுவும். நாம சுப்ப மவன மாதாரிப்பயனல்ல. அவெ அரசாங்கத்தோட ஆளுன்னு நாம புரிஞ்சுகோணும். அவ்வளவு ஏன் நாம மட்டும் ரெம்ப ஒசந்த சாதியாக்கும் நமக்கு மேல ஒரு சாதி இருக்குங்குறத மறந்துட்டோமில்ல...

நம்ம நாட்ட ஆண்ட மன்னனுங்க நெலபொலங்கல யாருக்கு தானமா எழுதி வச்சிருந்தாங்க கோயிலுக்கு கோயில்ல மணியடிச்ச அய்யரு, அய்ங்காருக்கல்ல எழுதி வச்சிருந்தாங்க? அப்ப நெல முச்சூடு அய்யர், அய்யங்காருகிட்டதானே இருந்திருக்கோணும்? இப்ப மாதாரிங்க நம்மகிட்ட அடிமையா இருக்குற மாதிரி நம்ம பாட்டெபூட்டெ முப்பாட்டணும் அய்யங்ககிட்ட அடிமையாத் தானே இருந்திருக்கோணும்?

இப்ப மாதாரிங்க நம்மல ‘சாமி’ன்னு கூப்புடற மாதிரி நாமளும் அய்யர், அய்யங்கார ‘சாமி’ன்னுதானே கூப்புடுறோம்? என்ன அவங்க நம்மளப் பாத்து, “நீங்க தீண்டபடாத சாதி எங்களத் தொடாதீங்கின்னு சொல்றதில்ல, ஆனா நாலாஞ்சாதியான நம்மள வேதத்துல அவங்க வப்பாட்டி மவென்னு தானே சொல்லி வச்சுருக்குறாங்க? நம்ம அம்மாவ ‘தேவடியான்’னு சொல்ற சட்டத்தையோ, சாஸ்தரத்தையோ நாம இன்னும் எதுக்கவே இல்லயே? இதைவிட, தாழ்ந்தசாதிங்கறது ஒண்ணும் கேவலமில்லயே?

நாம சுப்ப மவனெ ஊருக்குள்ள விடல, அய்யருக இன்னைக்கிம் நம்ம பழனி முருகன் கோவிலுக்குள்ள, நம்ம முருகன, நாம தொட்டுக் கும்புடறதுக்கு விடமாட்டிகிறாங்களே? கீழ்சாதிங்காறானே? சுப்ரீம் கோர்ட்லயே சொல்லிட்டானே? அங்க போயி நாம மீசைய முறுக்குனோமா?

அவ்வளவு தூரம் ஏங்க? மெட்ராஸ் மாதிரி பெரியவூரா இருக்குற ஐஐடின்னு சொல்ற நாட்ட நிருவாகஞ் செய்யற பெரிய படிப்பு படிக்கிற காலேஜீல இப்பவரைக்கு நம்ம பசங்கள சேத்த மாட்டேங்குரானே அத எதுத்து நாமோ என்ன புடுங்கிட்டோம்?

நமக்கு கோவ வர்லயே? நாமளும் கொஞ்ச நாளக்கி முன்னாடிவரக்கும் தீண்டப்படாம அடிமயாத்தா இருந்திருக்கோம் அது மாறலியா? நம்மள ஒருத்த அடிமய நடத்துனப்ப நமக்கு எப்பிடி வலிச்சதோ, அத மாதிரிதான் நம்ம அடிமப்படுத்தற காலனிகாரங்களுக்கு வலிக்கும்? அத மொத புருஞ்சுக்கோணும்.

ஒரு எழுவது எண்பது வருசத்துக்கு முன்னாடி கவர்மண்டு ஆபீசுல போய்பாத்தா, அம்புட்டும் குடுமியும் பூணூலும் போட்டுக்குட்டு அய்ரு, அய்ங்காருதானே ஆபீசரா இருந்தாங்க? இப்ப நம்ம பசங்க படுச்சு டாக்டரா, இஞ்சினிரா, வக்கீலா, கலெக்டரா, ஜட்ஜா இருக்குறாங்கல்ல? அதப் பாக்கறதுக்கு எம்புட்டுச் சந்தோசமா இருக்குதோ, அதமாதிரி படிப்புவாசமே என்னான்னு தெரியாத தாழ்த்தப்பட்ட சாதிகாரங்க, இப்பதான் படிச்சுட்டு, சின்ன சின்ன அரசாங்க வேலங்களுக்கு வர்றாங்க. அதத் தடுத்து நிறுத்தி அடுச்சு அட்டூழியம் பண்ணினோமுன்னா அவங்க நம்மள திருப்பி அடிக்கிறதுக்கு எம்புட்டு காலமாயிரும்?

அதனால நம்ம மனச மாத்திக்கிட்டு சுப்ப மவன போஸ்டுமேனா வந்துபோறதுக்கு வுடுறதத் தவர வேற வழியில்லீங்கோ” எனத் தனிக்கொடி சொன்னதும் கூட்டமே அமைதியானது.

சரிங்க... நம்ம தனிக்கொடி சொல்ற மாதிரி இப்போதக்கி சுப்ப மவன போஸ்டுமேனா, செருப்புப் போட்டுக்குட்டு சைக்கிள்ல வந்துபோறதுக்கு வுட்டுவோம். அப்புறம் கொஞ்ச நா கழிச்சு சண்டீரு கவண்டன ஜாமீன்ல எடுப்போமுன்னு சொல்லி நாட்டாண்மை ஊர் கூட்டத்தை முடித்தார்.

## மாப்பிள்ளை சிங்கம்

தமிழ்நாட்டு அரசியலில் திரைப்பட வசனங்கள் மிகப்பெரும் தாக்கத்தை உருவாக்கியுள்ளன. பல கதாநாயகர்களையும், முதல்வர்களையும் உருவாக்கியவை தமிழ்த்திரைப்பட வசனங்கள். அறிஞர் அண்ணா, கலைஞர், திருவாரூர் தங்கராசு, கவிஞர் கண்ணதாசன், நாகூர் செய்யது காஜா முகைதீன் ( ரவீந்தர் ) போன்ற பலரும் எழுதிய வசனங்கள் திரையுலகில் மட்டுமல்லாமல், தமிழ்ச்சமுதாயத்திலும் சில மாற்றங்களைச் செய்தன. திராவிடர் இயக்கக் கருத்துக்கள் பட்டி தொட்டி எங்கும் பரவ ஒரு வாய்ப்பாக திரைப்பட வசனங்கள் இருந்தன.

வேதம் புதிது கண்ணன், இதுநம்ம ஆளு பாக்கியராஜ் ஆகியோரின் வசனங்கள் திராவிடர்கழகத்தினரையே கிராமம் கிராமமாக அந்தப்படங்களை ஒளிபரப்பச் செய்தன. அதற்குப் பிறகு நீண்ட இடைவெளிக்குப் பிறகு இயக்குநர் மணிவண்ணனின் வசனங்கள் சில படங்களில் நாத்திகத்தையும் சாதி ஒழிப்பையும் பேசின.

லியாகத் அலிகானின் வசனங்கள் விஜயகாந்த்தை தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக மாற்றின. காலப்போக்கில் சுஜாதா, பாலகுமாரன், ஜெயமோகன், கிரேசி மோகன், விசு என முற்றிலும் பார்ப்பனர்களிடம் வசனத்துறை சிக்கியது. கதை திரைக்கதை வசனம் இயக்கம் என்ற நான்கையும் இயக்குநரே செய்வது என்ற ட்ரெண்ட் உருவாகி சமூகச்சிக்கல்கள் எதையும் உள்வாங்காத பல இளம் இயக்குநர்கள் ( இப்ப அவங்கெல்லாம் அங்க்கிள்கள்) கையிலும் வசனம் எழுதும் பணி சிக்கிச் சீரழிந்தது.

கடந்த சில வருடங்களாக காமெடி நடிகர்கள் விவேக், வடிவேலு, சந்தானம் போன்றோர் தங்களுக்கென தனியாக காமெடி ட்ராக் வசனம் எழுதும் குழுக்களை ஏற்படுத்திக் கொண்டனர். விவேக் மட்டும் பல படங்களில் நாத்திகத்தைப் பேசினார். வடிவேலு, சந்தானம் ஆகியோர் பேசும் வசனங்கள் சமுதாயத்தில் பெரும் தாக்கத்தை உருவாக்குகின்றன. அனைத்து அரசியல் தலைவர்களையும் கலாய்க்கும் மீம்ஸ்களின் அடிப்படையே இவர்களின் வசனங்கள்தான். குறிப்பாக கவுண்டமணி பேசிய வசனங்கள் காலத்தை வென்று இன்றும் மீம்ஸ்களை உருவாக்கப் பயன்படுகின்றன. உலகப்புகழ்பெற்ற, மிகப்பெரும் பன்னாட்டு விளம்பர நிறுவனமான ஜே வால்டர் தாம்சன் கூட தி.மு.க வின் விளம்பரத்துக்கு சினிமா வசனங்களைத் தான் நம்பியுள்ளது.

இவ்வளவு பலம் வாய்ந்த ஊடகத்தில் இன்றைய நிலையில் திராவிடர் இயக்கக் கருத்துக்களையும், பெரியாரின் பண்பாட்டுச் சிந்தனைகளையும் திரைப்படவசனங்களில் கொண்டு வருவது என்பது, ஒரு பெரும் மக்கள் இயக்கத்தின் பணிக்கு இணையானது. இன்றைய அரசியல் சூழலில், தனியாக ஒரு திராவிடர் இயக்கத்தையே நடத்துவதற்கு இணையானது. இந்தத் தளத்தில் மிகவும் அரிதாக திராவிடர் இயக்கக் கருத்தாளர்கள் உள்ளே வருகிறார்கள். மிக நீண்ட இடைவெளிக்குப் பிறகு மாப்பிள்ளை சிங்கம் படத்தில் டான் அசோக் என்ற புதிய, இளைய தோழர் உரையாடல் ஆசிரியராக அறிமுகமாகி உள்ளார். கிடைத்த வாய்ப்பை மிகச் சரியாகப் பயன்படுத்தியுள்ளார் டான் அசோக்.

புதிய இயக்குநர் இராஜசேகர் என்று சொல்ல முடியாத அளவுக்கு மிகவும் சிக்கலான ஜாதிமறுப்பு என்ற களத்தில் ஜாதி மறுப்புத் திருமணங்களை மக்கள் ஏற்றுக் கொள்ளும்படியாகப் படத்தை நகர்த்திச் சென்றுள்ளார். காதல் திருமணம் செய்து கொள்ளும் இணையர்களைப் பிரிப்பதே வேலையாக அலையும், திருச்செங்கோடு யுவராஜ் போன்ற ஒரு கேரக்டர், தானே மனம் மாறி தனது தங்கையின் ஜாதி மறுப்புத்திருமணத்தை நடத்தி வைப்பதும், தானும் ஜாதி கடந்து திருமணம் செய்வதும் தான் மாப்பிள்ளை சிங்கம்.




அதுவும் காதலைப் பிரிக்கும் கும்பலின் கொடியை பி.ஜே.பி கொடியைப் போலவே வடிவமைத்ததும் சிறப்பு. இயக்குநர் பொன்ராம், சிவகார்த்திகேயன், சூரி கூட்டணியில் வெற்றி பெற்ற வருத்தப்படாத வாலிபர் சங்கம் போல, மக்களை சிரிக்க வைத்து, சிந்திக்கவும் வைக்கிறது இந்தக் கூட்டணி இராஜசேகர், டான் அசோக், விமல், சூரி என புது ட்ரெண்ட் உருவாக வேண்டும்.

“நாம யாரோட வாழப்போறோம்ங்கிறத நாம தான் முடிவு பண்ணனும்” என்று பெண்ணான அஞ்சலி பேசுவது, “உங்களுக்கு ஏதாவது இலட்சியம் இருக்குதா?” என சூரியிடம் பெண்ணான மதுபாலா கேட்பது என அறிவுப்பூர்வமாக, சுயமாக சிந்தித்து முடிவெடுக்கும் பெண்கள் கேரக்டர்கள் அருமை. அண்ணனின் காதலுக்காகத் தூது செல்வது, க்ளைமாக்ஸ் சண்டையில் முனீஸ்காந்தை அறைவது,

தன் குடும்பப் பிரச்சனையில் சாதிச் சங்கம் நுழைவதை எதிர்ப்பது என அஞ்சலியின் பாத்திரம் சரியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. படத்தில் மொத்தம் நான்கு தாய்மாமன் கேரக்டர்கள் வருகின்றன. நான்கு தாய் மாமன்களையும் காமெடியன்களாகக் காட்டியிருப்பது மிகவும் அவசியமானது. பாராட்டத்தக்கது.

ஆண்டபரம்பரைத் திமிர், பெண்களைப் படிக்க விடாத சந்தேகம், வேலைக்கு அனுப்பி சுயமாக வாழவிடாத ஆதிக்கம் போன்ற சமுதாயத்தின் இயல்பாகிவிட்ட கொடுமைகளை வெளிக்காட்டுகிறது இப்படம். சில விமர்சனங்கள் இருக்கின்றன. அதைத் தாண்டி இந்த ஊடகத்தில் சொல்ல முடிந்தவற்றைச் சொல்லியதைப் பாராட்ட வேண்டும்.

சாதி மறுப்பு, ஆணவக் கொலைகள் தொடர்பான வசனங்கள் படம் நெடுகிலும் வருகின்றன. அதேசமயம், “ஒலகத்துலயே தன்ன எதித்து நிக்கிற கேண்டிடேட்டப் பாத்து சைட் அடிக்கிற முதல் கேண்டிடேட் நீ தாண்டா,” “ஒலகத்துலயே காதலிக்கிறவய்ங்கள சேத்து வய்க்கிற முதல் வில்லன் நீதான்யா” என்பது போன்ற வசனங்கள் வரும்போது எழும் சிரிப்பொலி, அடுத்த சில காட்சிகள் வரை நீடிக்கிறது. நமக்கான கருத்தைக் காமெடியாய்ப் பேசும் இந்தக் கூட்டணி தொடர வேண்டும். வெல்ல வேண்டும்.

## காதலும் கடந்து போகும்

சூதுகவ்வும் கூட்டணி மீண்டும் இணைந்துள்ளது. விஜய் சேதுபதி - பிரேமம் மடோனா, அல்லக்கை - ஐடி பெண் ணாக வருகின்றனர். அந்தக் காலத்தில், வறுமையின் நிறம் சிவப்பு போன்ற படங்கள் ஆண் தன் வருமானத்திற்காகப் படும் துயரங்களை விளக்கின. இந்தப்படம் ஒரு பெண் தன் அடையாளத்திற்காகப் போராடும் இன்றைய நிலையை விளக்கியுள்ளது.

தன் இலட்சியமான மென்பொருள் துறை வேலை திடீரெனப் பறிபோய்விடுகிறது. அதன் பிறகு அதே துறையில் தனது அடையாளத்தை உறுதிப்படுத்த மடோனா நடத்தும் போராட்டம்; அதற்குத் துணையாக வரும் விஜய் சேதுபதி, இது தான் காதலும் கடந்து போகும்.

மக்கள் தொகைப் பெருக்கத்தின் விளைவுகள், இன்ஜினியரிங் கல்லூரிகள், பெற்றோர்களின் போக்கு எனப்பலவற்றைப் பேசுகிறது படம். தொடர்ந்து விஜய்சேதுபதி இதே போன்ற ரோல்களில் நடிப்பது போர் அடிக்கிறது. நானும் ரவுடிதான் போலவே தான் இந்தக் கதிரவன் பாத்திரமும். ஆனால் இப்படத்தில் அண்ணன்களால் ஏமாற்றப்படும் அல்லக்கைகளை கண்முன் நிறுத்தியுள்ளார். பாராட்டுக்கள்.

முக்கியமாக, கதிரவன் - யாழினி காதல் உருவாகும் விதம் மிகவும் நேர்த்தியாகக் கட்டமைக்கப் பட்டுள்ளது. செயற்கைத் தன்மை இல்லாமல் ஒரு காதலைக் காட்டியிருக்கிறார்கள். லவ் லெட்டர் இல்ல, எஸ்.எம்.எஸ் இல்ல, எஃ பி ஸ்டேட்டஸ் இல்ல, வாட்ஸ் அப் டி.பி யும் இல்ல. இது எதுவுமே இல்லாமல், அதேசமயம் ட்ரெண்டியாகவும் காதலைக் காட்டியிருக்கும் நலன் குமாரசாமிக்கு வாழ்த்துக்கள்.

கதிரவனை இரண்டு ஆண்டுகளாகப் பிரிந்து விட்டாலும், அந்தக் காதல் அவளுக்குப் போதையை உருவாக்கவில்லை. தான் கனவு கண்ட இலட்சியப் பயணத்தில் தொடர்ந்து பயணிக்கிறாள் யாழினி. அவ்வப்போது அவனது நினைவுகள் அவளை கண்கலங்கச் செய்கின்றன. அவ்வளவுதான். காதலின் பிரிவை இயல்பாகக் காட்டியது பாராட்டத்தக்கது.

பெண்கள் மேன்சனில் பீர்பாட்டில்கள், படுக்கையறை செல்ஃபி, லெகின்ஸ், அப்பா அம்மாவிடம் சொல்லாமல் சென்னைக்குக் கிளம்புவது என கலாச்சாரக் காவலர்களுக்கு நிறைய சிக்கலை உருவாக்கியுள்ளனர். முக்கியமாக, விஜய் சேதுபதியுடன் சரக்கு அடிக்கும் காட்சிகள். ரெண்டாவது ரவுண்டு உள்ளே போனதும், தனது முன்னாள் காதலனைப் பற்றிப் பேசுவது, அப்படியே அங்கேயே மட்டையாவது, என சுதந்திரமான பெண்ணைக் கண்முன் காட்டுகிறார்கள்.

இதெல்லாம் தான் பெண் சுதந்திரமா என கேட்க வேண்டாம். தன் எதிர்காலத்தைத் தானே முடிவு செய்யும் ஒரு பெண்; அதற்காகக் கடும் விலைகளைக்கொடுக்கும் ஒரு பெண் எது செய்தாலும் அது சுதந்திரத்தின் அடையாளம்தான். கல்லூரி மாணவிகள் அவசியம் பார்க்க வேண்டிய படம். பெண்களுக்கான படம்.





பூங்குழலி

# குழந்தைகளுக்கு மொட்டை அடிப்பதும், காது குத்துதலும் பயனற்றவை

மொட்டைப் போடுவதால் முடி வளரும். அதுவும் அடர்த்தியாக வளரும் என்பது முற்றிலும் அறிவியலுக்குப் புறம்பான மூட நம்பிக்கையாகும். முடி எவ்வாறு வளர்கிறது என்பதை பார்க்கலாம்

ஒவ்வொரு முடிக்கும் கீழ் மயிர்க்கால், மயிர்வேர் என இருக்கின்றன. ழயசை குடிடடைைடநள எனப்படும் வேர் என்பது, ஒரு விதையைப் போடுவதற்காக நாம் தோண்டும் சிறு குழியைப் போன்றது. இதுதான் முடி வளர்வதற்கான அடிப்படை. எத்தனை *Hair Follicles* இருக்கிறதோ அதற்கேற்றார் போல முடி இருக்கும். இதனை மரபணு, ஹார்மோன்கள் மற்றும் வயது போன்றவை தீர்மானிக்கின்றன.

ஒரு ஆணுக்கு முகத்தில் *Hair Follicles* அதிகமாக இருந்தால் தாடி நெருக்கமாக வளர்கிறது. தலையில் இருந்தால் தலைமுடி அடர்த்தியாக வளர்கிறது. தலைக்கு வெளியே மொட்டை அடிப்பதன் மூலம் இந்த Hair Follicles- இன் எண்ணிக்கையை அதிகப்படுத்த முடியாது. ஏனெனில் அது இருப்பது தலைக்கு உள்ளே.

வயது மற்றும் சரியான பராமரிப்பு இன்றியோ அல்லது மரபணு காரணமாகவோ இந்த *Hair Follicles* சிறிது சிறிதாக சாகலாம். அதன் காரணமாகதான் வழுக்கை விழுகிறது. முடி அடர்த்திக் குறைகிறது. நாம் எண்ணைத் தேய்ப்பது போன்றவை இந்த *Hair Follicles*-அய் சாக விடாமல் உயிர்ப்புடன் வைத்திருக்கத் தான் பயன்படுமே ஒழிய புதிதாக *Hair Follicles* உருவாவதற்குப் பயன்படாது. மொட்டை அடித்தால் முடி வளரும் என்றால், வழுக்கை விழுந்தவர்கள் மொட்டை அடித்து முடி வளர வைக்கலாமே

**மொட்டை அடித்தபின் முடி அடர்த்தியாகத் தெரிகிறதே?**

ஒவ்வொரு *Hair Follicles* - சும் ஒரே மாதிரியான வலுவைக் கொண்டிருப்பதில்லை. அதன் வலுவின் அடிப்படையில் முடியின் நீளம் இருக்கிறது. மொட்டை அடித்த உடன் வளரும் முடி, ஒரு குறிப்பிட்ட அளவு வளரும் வரை, அனைத்தும் ஒரே அளவாக இருக்கும். அதனால் அடர்த்தி அதிகமாக தெரிகிறது. நீளமாக வளர வளர, ஒரு சில *Hair Follicles* மட்டுமே அதிக நீளத்தைக் கொடுப்பதால் அடர்த்தி குறைகிறது.

*Hair Follicles*-அய் வலுவாக வைத்திருந்தால் முடி அனைத்தும் ஒரே அளவில் வளரும். அதனால் மேலிருந்து கீழ் வரை ஒரே நீளமாக, ஒரே அடர்த்தியில் இருக்கும். ஆக *Hair Follicles*-அய் வலுவாக வைப்பது மட்டுமே முடியை நீளமாக வளர வைக்க வழிசெய்யும். அதற்கு மொட்டை அடிப்பது எந்த விதத்திலும் உதவாது.

*Hair planting* என்று கேள்விப்படுகிறோமே, அது உடம்பின் வேறுப் பகுதியிலிருந்து *Hair Follicles*-அய் எடுத்து வந்து தலையில் நடுவது. அவ்வளவுதான். ஆக பொய்யான ஒரு காரணத்தைக் கூறி, அதற்காக குழந்தைக்கு மொட்டை அடிப்பது என்பது அறிவீனமானது.

வளர்ந்த ஒரு ஆணின் கடினமான தோலில் சவரம் செய்வதற்கே சோப் போட்டு வலிக்காமல் எடுக்கிறோம். ஆனால் மென்மையான குழந்தையின் தலையில் அப்படியே நேரடியாக கத்தியைப் போட்டு இழுக்கிறோம். இது எத்தனை கொடூரமானது?

காதுகுத்துதல் அதை போன்றே ஒரு மூட நம்பிக்கையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட பிம்பம். காது குத்துவது அக்குபஞ்சர் போன்ற ஒன்று என்றும் அது மூளை வளர்ச்சிக்கு அடிப்படையானது என்றும் சொல்பவர்கள், காது குத்தும் பழக்கம் அற்ற வெளிநாட்டினரை விட குறைவான மூளை வளர்ச்சி உடையவர்களாக இருப்பது ஏன்? இன்றைய பெண்கள் காது மட்டுமல்ல உதட்டில் கூட ஓட்டைப் போட்டு நகை அணிகிறார்கள். இவை அலங்காரத்தின் மீதான ஆசை மட்டுமே..

( கொடைக்கானலில் 13.05.2014 ல் நடைபெற்ற கருந்திணைக் குடும்பங்களின் ஒன்றுகூடலில் தோழர் பூங்குழலியின் உரை)



# காது குத்துவது பெண்களை அடிமைப்படுத்தும் சடங்கே!

தோழர் பெரியார்



இந்தக் காதணிவிழாவில் வந்து நான் கலந்து கொள்வது, இதன் மூலம் நம் கருத்தினைச் சொல்லலாம் என்பதற்காகத்தானே தவிர, இது சரியானது என்பதால் அல்ல. இக்காரியம் முட்டாள்தனமானது தான். கொஞ்சம் நாளானால் தானாகவே மறைந்து விடும். பல பழக்க வழக்கங்கள் நம்மிடையே மறைந்து போகவில்லையா, அதுபோன்று இதுவும் மறைந்து விடும்.

உண்மையான தத்துவம் தம் தாய்மார்கள் தெரிந்து கொள்ள வேண்டும். பெண்களை ஆண்களுக்கு அடிமையாக்கப் பலவிதச் சடங்குகளைச் செய்கின்றனர். அவற்றில் ஒன்று தான் இந்தக் காது குத்துவதுமாகும். இந்த நகைகள் - ஓட்டைகள் எல்லாம் எதற்காக என்றால், கொஞ்சம் வலுவான பெண்கள் ஆண்கள் (தங்கள் கணவன்) அடிக்கும் போது எங்கே திருப்பி அடித்து விடுவார்களோ என்று, ஆண்கள் அவர்கள் திரும்ப அடிக்காமல் முதுகைக் காட்டும்படிச் செய்வதற்காகவே இவை யாவும், காதிலும், மூக்கிலும் ஓட்டையைப் போட்டு நகையை மாட்டினால் ஆண் அடிக்கப் போனால் பெண் தன் முகத்தையும், காதையும் பொத்திக் கொண்டு முதுகைக் காட்டுவாள். அதற்குத் தான் இந்த நகைகள் பயன்படுகின்றன. ரொம்ப பேர் எங்கள் பக்கங்களில் சம்மதிப்பது கிடையாது.

தாய்மார்கள் பிள்ளைகளை நல்லா படிக்க வைக்க வேண்டும். நல்லவர்களோடு பழக விட வேண்டும். முன்பு உறை போட்டுக் கொண்டிருந்த துலுக்கப் பெண்கள் இப்போது பனியன்கள் போட்டு குஸ்திச் சண்டைக்கு வருகின்றார்கள். வெள்ளைக்காரப் பெண்களும் சமமாகப் பழகுகின்றனர். அதுபோல நம் பெண்களும் ஆண்களோடு எல்லா காரியங்களிலும் சரிநிகராகப் போட்டிப் போட வேண்டும். சமுதாயத்தில் பாதி அளவு இருக்கும் பெண்கள் தங்கள் அடிமைத் தன்மையால் சமுகத்திற்குப் பயன்படாமல் போய் விடுகின்றார்கள். அவர்கள் விடுதலை பெற்றால் தான் நம்நாடு முன்னேற்றமடைய முடியும். சமுதாயம் முன்னேற்றமடைய முடியும் என்பதால், நாங்கள் சமுதாயச் சீர்திருத்தம் செய்யக் கூடியவர்களானதால் இதையெல்லாம் எடுத்துச் சொல்லி மக்கள் திருந்த வேண்டுமென்று பாடுபடுகின்றோம்.

*16.06.1968 அன்று அன்பரசி காதணி விழாவில்*
*பெரியார் - விடுதலை 07.07.1968*

## பூப்புனித நீராட்டு விழாவின் அடிப்படை

பாலியல் சுரப்பிகள் ஆண், பெண் இருவருக்கும் பிறப்பிலிருந்தே இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட வயதில் அவை வளர்ச்சி அடைந்து, பிறகு வெவ்வேறு விதமாக முழு வளர்ச்சி அடைகிறது. ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமாக அதற்குண்டான வேலையை துவங்குகின்றன. பாலியல் சுரப்பியின் வளர்ச்சி பொதுவாக பெண்களுக்கு 12 வயதில் ஏற்படும். ஆண்களுக்கு சற்று தாமதமாக 14 அல்லது 15 வயதில் நிகழும்.

பெண்ணின் அடிவயிற்றில் உள்ள கருப்பையின் இருபுறங்களிலும் சினைப்பைகள் உள்ளன. மாதம் தோறும் ஒரு கருமுட்டை சினைக்குழாயின் வழியே கருப்பையை வந்தடைகிறது. கருவாக உருவாவதற்காக அது காத்திருக்கிறது. அதன் பாதுகாப்பிற்காகக் கருப்பை தனது ஓரங்கள் முழுவதும் ஜவ்வு மெத்தைப் போன்ற ஒரு அமைப்பை உருவாக்குகிறது.

28 நாட்கள் காத்திருக்கும் கருமுட்டை, கருவாக உருவாகும் வாய்ப்புக் கிடைக்காவிடின் கரைந்து வெளியேறுகிறது. அப்படி அது வெளியேறும் போது, அதன் பாதுகாப்பிற்காக கருப்பையின் ஓரங்களில் உருவான ஜவ்வு மெத்தைப் போன்ற அமைப்பும் கிழிந்து வெளியேறுகிறது. அப்படி அது கிழியும் போதுதான் ரத்தப் போக்கும், வலியும் உண்டாகிறது. முழுமையாக அந்த ஜவ்வுப் பகுதி வெளியேறி, கருப்பை சுத்தமாகிறது. இவ்வாறு பெண்ணின் முதல் முதலான இரத்தப் போக்கு வெளியேறுவதை பெண் வயசுக்கு வந்துட்டா, பூப்பெய்திட்டா என்று பல்வேறு விதமாக அழைக்கின்றனர்.

நமது சமூகம் ஆணாதிக்கமும் மூட நம்பிக்கையும் நிறைந்தது. அதனால் இச்சமூகம் பெண்ணை சொத்தாகவும், போகப்பொருளாகவும் நினைக்கிறது. பெண் வயசுக்கு வந்துட்டா, பூப்பெய்திட்டா என்று சொல்லி நடத்தப்படும் பூப்புனித நீராட்டு விழா என்பது, அப்பெண் குழந்தை பெறத் தகுதி பெறுகிறாள் என்று ஊருக்கு பகிரங்கமாக அறிவிக்கும், ஒரு அநாகரீகமான விழாவாகும். இம்மாதிரியான விழாக்கள் ஆண்களுக்கு நடத்தப்படுவது இல்லை. இந்த நவீன காலத்திலும் அவ்வாறு விழாவின் மூலம், பொருட்செலவு (வீண்செலவு) செய்வது அறியாமை ஆகும்.

# திராவிடர் பண்பாட்டு வாழ்வு



தாவணி அணியும் விழா

அழைப்பிதழ்

## காது குத்து – மூக்குக்குத்து – மொட்டை போடுதல் – பூப்புனித நீராட்டு விழாக்களைத் தவிர்த்தோர்

2



**அரங்க ஆயறிவன் - அறிவொளி,**

ஆய்க்குடி, பெரம்பலூர் மாவட்டம்

தோழர் பெரியாரின் பண்பாட்டுப் புரட்சியின் பல கூறுகளை தம் வாழ்வில் செயல்படுத்தி வாழ்ந்த ஆயிரக்கணக்கான மக்களில் ஒரு சிலரை இப்பகுதியில் தொடர்ந்து அறிமுகப்படுத்துகிறோம். இந்த இதழில் பெரம்பலூர் மாவட்டம் குன்னம் அருகே உள்ள ஆய்க்குடி என்ற சிறு கிராமத்தில் வாழும் அறிவொளி அவர்களை அறிமுகப்படுத்துகிறோம்.

இவரது துணைவர் அரங்க. ஆய்அறிவன் தமிழாசிரியராகப் பணியாற்றிய பெரியாரியல்வாதி. 1998 லேயே அவர் மறைந்து விட்டார். பெரியார் கருத்துக்களைப் பள்ளியில் பேசி, பரப்பி வந்ததால் பலமுறை இடமாறுதல் செய்யப்பட்டவர். ஆய் அறிவன் - அறிவொளி இணையருக்கு புரட்சிக்கொடி, அருள்செல்வி, சிந்தனைவளவன் என்று மூன்று பிள்ளைகள். மூவருக்கும் காது, மூக்குக் குத்துதல், குலதெய்வக் கோவிலில் முதல்முடி எடுத்தல் போன்ற எந்தச் சடங்குகளையும் செய்யவில்லை. பெண் பிள்ளைகளுக்கு பூப்புனித நீராட்டுவிழாவையும் நடத்தவில்லை. அவை தொடர்பாக அறிவொளி அவர்களிடம் நேர்காணலுக்காகச் சென்றோம்.

அப்போது அவரிடம் இருந்து கிடைத்த தகவல்கள் பெரியார் தனது இயக்கத்தில் நேரடியாகப் பங்கேற்ற தோழர்களிடம் ஏற்படுத்திய பண்பாட்டு மாற்றங்களைவிட, தன்னோடு நேரடியாக இயக்கத்தில் பங்கேற்காத இலட்சக்கணக்கான மக்களிடம் பெரும் தாக்கத்தை உருவாக்கியிருக்கிறார் என்பதற்கான சான்றுகளை அறியமுடிந்தது.

அறிவொளி அவர்களின் தந்தை பொன்னுச்சாமி என்பவர் பெரியார் இயக்கத்தைச் சார்ந்தவர் அல்ல. ஆனால் பெரியாரின் அனைத்துக் கூட்டங்களுக்கும் செல்பவர். அவரது கருத்துக்களை ஏற்றுச் செயல்படுத்த எண்ணியவர். மதுரைமாவட்டம் சோழவந்தான் பகுதியில் வாழ்ந்தவர். தாயார் தையல்நாயகி அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தைச் சார்ந்தவர். இருவரும் வெவ்வேறு ஜாதிகளில் பிறந்தவர்கள். இருவருக்கும் ஏற்கனவே வெவ்வேறு துணைவர்கள் உயிருடன் இருந்தார்கள். அந்த நிலையில் இருவரும் தங்களது முதல் திருமண உறவில் முரண்பட்டு - அவற்றிலிருந்து பிரிந்து மறுமணமாக இணைந்த இணையர்களாவர்.

முதன்முறையாக இந்தத் தகவலைக்கேட்டதும் வியப்பு கலந்த அதிர்ச்சியாகத்தான் இருந்தது. தனக்கு ஒத்துவராத இணையைப் பிரிந்து, மற்றொரு இணையைத் தேர்ந்தெடுத்து அவருடன் இயல்பாக வெளிப்படையாக வாழ்வது - முதல் துணைவர்களிடமிருந்து எந்தச் சிக்கலும் இல்லாமல் வாழ்வது - என்பது இன்றைய காலகட்டத்திலேயே நாம் காண இயலாத ஒரு சுதந்திர வாழ்க்கை. ஆனால் 1940 களிலேயே - எந்த ஒரு இயக்கத்திலும் களப்பணியாற்றும் தோழர்களாக இல்லாதவர்களே - சராசரி மக்களே - அப்படி தனக்கு ஒத்துவராத இணையைப் பிரிந்து, தான் விரும்பியவருடன் தன் வாழ்க்கையைத் தொடர்ந்தனர் என்ற செய்தி பெரியாரின் சாதனையைப் புரிய வைத்தது.

பெரியாரின் முக்கியத்தளபதியாக இருந்த அ.பொன்னம்பலனார் - சுலோச்சனா திருமணமும் இதுபோன்ற திருமணமாகும். அத்திருமணத்தில் பெரியார்,

> “இன்றைய மணமகளாகிய திருமதி. சுலோசனா ஏற்கனவே திருமணம் நடந்து அந்தம்மையினுடைய கணவனார் இப் பொழுது நல்ல நிலையிலும் உத்தியோகத்திலும் இருந்து கொண்டிருக்கிறார். அப்படி இருக்க இந்தம்மைக்கு இப்போது முதல் புருஷன் இருக்கவே அவரிடமிருந்து விலகி, இது இரண்டாவ தாக செய்துகொள்ளும் சீர்திருத்த திருமணமாகும். ஆண் பெண் விவாக விஷயத்தில் ஏற்படும் சீர்திருத்தமே நமது நாட்டை- ஏன் உலகத்தையே சமதர்ம மக்களாகச் செய்யக்கூடிய ஒரு முக்கிய கருவியாக இருக்கும் என்று கருதுகிறேன்”.- பெரியார் - குடி அரசு - 31.05.1931

என்று பேசியுள்ளார். 1930 ஆம் ஆண்டு அக்டோபர் 5 ஆம் நாளில் திருச்சியில் நடைபெற்ற நீலாவதி - இராமசுப்பிரமணின் திருமணம், 1930 செப்டம்பர் 10 ஆம் நாள், நாகர்கோவில் கோல்டன் தியேட்டரில் நடைபெற்ற நல்லசிவன் - கமலாம்பாள்திருமணம் போன்ற எண்ணற்ற மறுமணங்களை - ஏற்கனவே திருமணம் நடந்து, பிரிந்த இரு இணையருக்கு நடந்த திருமணங்களைப் பெரியார் தலைமையேற்று நடத்தியுள்ளார். இதனால் சுயமரியாதை இயக்கத்தாருக்கே கடும் கோபம் வந்து பெரியாரை விமர்சித்துள்ளனர். அந்த விமர்சனங்களுக்கு தனது குடி அரசில் விளக்கமான பதில்களை பெரியார் எழுதியுள்ளார்.

அறிவொளி அவர்களின் பெற்றோர் பொன்னுச்சாமி - தையல்நாயகி இணையர், திருமணம் என்பதில் மட்டுமல்ல - குழந்தை வளர்ப்பு, இந்து மதச் சடங்குகள் மறுப்பு; ஜாதிச்சடங்குகள் மறுப்பு, தனது குழந்தைகளுக்கும் ஜாதி மறுப்புத் திருமணம் என பெரியாரின் அனைத்துப் பண்பாட்டு நடவடிக்கைகளையும் தம் வாழ்வில் சரியாகக் கடைபிடித்துள்ளனர். இவர்களுக்கு நான்கு பெண் குழந்தைகள் நால்வருக்கும் வெவ்வேறு ஜாதிகளில் திருமணம் செய்து வைத்துள்ளனர். அந்த நான்கு பெண்குழந்தைகளுக்குமே, காது, மூக்குக் குத்துதல், குலதெய்வக் கோவில்களில் முதல் முடி

எடுத்தல், பூப்புனித நீராட்டு விழா நடத்துதல் என எந்தச் சடங்கையும் நடத்தவில்லை என்பவற்றை அறிவொளி வெகு இயல்பாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

சடங்குகளை மறுப்பது மட்டுமல்ல, 70 வயதைத் தாண்டிய அறிவொளி இன்றும் தனது வாழ்வு தொடர்பான முடிவுகளைத் தானே எடுக்கிறார். தனது பிள்ளைகளையும் அவ்வாறு தங்கள் வாழ்க்கை தொடர்பான முடிவுகளைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ள இடமளிக்கிறார். எவரது வாழ்விலும் தலையிடுவதோ – கருத்துச் சொல்வதோ – ஆலோசனை சொல்வதோ கிடையாது. இவர்களது பிள்ளைகள் மூவருமே தங்களது திருமணங்களைத் தாங்களே முடிவுசெய்து கொண்டார்கள். எதற்கும் சுயமாக முடிவெடுத்துப் பழக்கப்பட்டவர் – பழக்கப்படுத்தப்பட்டவர் என்பதால் தமது பிள்ளைகளும் சுயமாக முடிவெடுப்பதில் தலையிடுவதில்லை.

நாங்கள் அறிவொளியைத் தான் நேர்காணல் எடுக்கச்சொன்றோம். அவரது பெற்றோரின் புரட்சிகர வாழ்க்கையின் தொடர்ச்சியாகத்தான் இவரது வாழ்க்கையும் உள்ளது என்பதை அறிந்தோம். கருப்புச்சட்டைப் போட்டுவிட்டாலே போதும் தான் பெரும் புரட்சிக்காரன் என்று எண்ணிப் பெருமைப்பட்டுக்கொள்ளும் இந்தக் காலத்துப் பெரியாரியலாளர்களாகிய எங்களுக்கு – சட்டைகளின் வண்ணங்களைச் சட்டை செய்யாமல், பெரியாரின் எண்ணங்களைச் செயல்படுத்திய அந்தக் காலத்துத் தோழர்களின் கொள்கைச் செயல்பாடுகள் ஒருவிதக் குற்ற உணர்ச்சியை உருவாக்கின. பொன்னுச்சாமி – தையல்நாயகி இணையரின் மகள் அறிவொளி அவர்களின் உரையாடலைப் பார்ப்போம்.

**உங்கள் திருமணம் ஜாதிக்குள் நடந்ததா? ஜாதி மறுப்பா?**

*ஆம். ஜாதி மறுப்புத்திருமணம்.*

**அந்தக் காலத்தில் அரேஞ்டு ஜாதி மறுப்புத் திருமணம் எப்படி சாத்தியப்பட்டது?**

*எங்கள் குடும்பம் ஜெயங்கொண்டம். எனது தந்தை பொன்னுச்சாமி, அம்மா தையல்நாயகி இருவரும் அந்தக் காலத்திலேயே ஜாதிமறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள். எனது அம்மா முதல் கணவரைப் பிரிந்து இரண்டாவதாக எனது அப்பாவை மறுமணம் புரிந்தவர். என் அப்பா பெரியார் இயக்கக் கூட்டங்கள் அனைத்திற்கும் செல்வார்.*

*எனவே ஜாதி மறுப்புத்திருமணம் என்பதைக் கொள்கையாக ஏற்றுக்கொண்டவர். அரியலூர் வாரியங்காவல் அரசுப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றிய ஆயறிவன், அவரது நண்பரான கண்ணையன் என்ற ஒரு விளையாட்டு ஆசிரியர் மூலமாக எனது தந்தையை அணுகிப் பெண் கேட்டார். ஜாதி மறுப்பைக் கொள்கையாக ஏற்றுக் கொண்ட எனது தந்தை இதற்கு முழு மனதுடன் சம்மதித்தார். இருந்தாலும் அப்போதும் உறவினர்களின் எதிர்ப்பு கடுமையாக இருந்தது. அனைத்தையும் மீறி 1961 ல் இத்திருமணம் நடைபெற்றது.*

**உங்கள் உடன் பிறந்தவர்கள் திருமணம் எப்படிப்பட்டது?**

*எங்கள் வீட்டில் நான்கு பெண் குழந்தைகள். நால்வரையுமே வெவ்வேறு ஜாதிகளில் தான் திருமணம் செய்து வைத்தனர். அனைத்துமே சம்மந்தப்பட்ட வீட்டார்களின் சம்மதத்துடன் நடந்த திருமணங்கள்தான்.*

**உங்கள் அப்பா உங்களுக்கு காது, மூக்கு குத்தினாரா? ஜாதகம் எழுதினாரா?**

*என் பெற்றோரே பெண் குழந்தைகளான எங்கள் நாலு பேருக்குமே காது, மூக்குக் குத்தவில்லை, ஜாதகம் எழுதியதில்லை. அதனால் எந்தப் பாதிப்பும் இல்லை. எங்கள் உடன் பிறந்தவர்கள் அனைவரும் நன்றாக வாழ்கிறார்கள்.*

**உங்கள் குழந்தைகளுக்குக் காதுகுத்து, மூக்குக்குத்துதல், குலதெய்வம் கோவிலில் முடி எடுத்தல் போன்றவற்றைச் செய்தீர்களா?**

*இல்லை. எனது குழந்தைகள் யாருக்கும் அப்படிச் செய்யவில்லை. தாய்மாமன் மடியில் உட்கார வச்சு காது குத்துறது, குலதெய்வம் கோவில்ல முடி எடுக்கிறது எல்லாமே ஜாதியையும் மதத்தையும் விட்டு நாம பிரிஞ்சுடாம இருக்கச் செய்யற காரியம்தானே? அதனால அதையெல்லாம் செய்ய வேண்டாம்னு எங்க அப்பாவும் சொல்லியிருக்கார். என் கணவரும் சொல்வார். பெரும்பாலும் நம்ம குலதெய்வம் என்னன்னு சொல்லிட்டா நம்ம ஜாதிய ரொம்ப ஈசியா கண்டுபிடிச்சிறலாமே? ஜாதி ஒழிப்புனா, ஜாதி மறுப்புக் கல்யாணம் மட்டுமில்ல; இதெல்லாம் சேர்ந்தது தான். அதுவும் ஆம்பளயோட குலதெய்வக் கோவிலுக்குத்தான் போவாங்க. மனைவியோட குல தெய்வக் கோவிலுக்கு யாரும் போக மாட்டாங்க. அங்க போயி யாரும் முடி எடுக்க மாட்டாங்க. அப்ப ஆம்பளய நம்பித்தான் வாழணும்கறதத் திணிக்கிறதும் இதுமாதிரி காரியங்கள் தான்.*

**இந்த முடிவு, உங்கள் கணவர் எடுத்த முடிவா? இருவரும் சேர்ந்து எடுத்த முடிவா? ஏன் காது, மூக்குக் குத்தக்கூடாது என்று உங்கள் கணவர் உங்களுக்கு விளக்கினாரா?**

*எனது கணவரும், எனது அப்பாவைப் போலவே பெரியார் கொள்கையில் உறுதியாக இருப்பவர். இரண்டு பேரும் சேர்ந்து கலந்து முடிவு செய்தவைதான். எங்களுக்கே காது குத்தாத போது என் குழந்தைகளுக்கு நான் ஏன் செய்யப் போகிறேன்? இதனால் எந்தப் பயனும் இல்லை. இதெல்லாம் ஜாதிக்காரர்களைத் தக்கவைத்துக்கொள்ளும் விழாக்கள். எனவே இவற்றைப் பற்றி எனக்கு விளக்க வேண்டிய நிலையே வரவில்லை. என் அப்பா காலத்தில் இருந்து நான் கேட்ட விசயங்கள் தான் இவை.*

பூ, பொட்டு, தோடு, மூக்குத்தி போன்றவை இந்து மதத்தின் அடையாளங்கள். அந்த இந்து மதத்தின் அடையாளங்கள் நமக்குத் தேவையில்லை என நானும் கணவரும் முடிவு செய்தோம். மதச்சடங்குகள் தேவையில்லை என்பதாலும். தேவையற்ற செலவுகள் வேண்டியதில்லை என்பதாலும் இந்த முடிவு.

**உறவினர்கள் எப்படி எடுத்துக்கொண்டனர், ஆதரித்தார்களா? எப்படிப்பட்ட எதிர்ப்புகள் வந்தன?**

எனது தந்தை பெரியார் இயக்கத்தவர் என்பதால் அவரது தரப்பிலிருந்து, அந்தச் சொந்தங்களிடமிருந்து எந்த எதிர்ப்பும் இல்லை. எனது கணவரின் ஜாதிச் சொந்தங்கள் என்னிடம் வந்து கடும் எதிர்ப்புகளைத் தெரிவிப்பார்கள். நான் பதில்களைச் சொல்வேன். ஆனால் எனது கணவரிடம் எவரும் சென்று பேசக்கூட மாட்டார்கள். எந்தக் கேள்வி கேட்டாலும் கடுமையாகப் பதில் கொடுத்துவிடுவார். பதில் பேச முடியாத அளவுக்கு முரட்டுத்தனமாகவும் பேசிவிடுவார் என்பதால் உறவினர்கள் யாரும் அவரிடம் பேசப் பயந்தார்கள். அதுவே எங்களுக்கு எங்கள் கொள்கையைச் செய்து கொள்ளப் பாதுகாப்பாகவும் இருந்தது. மேலும் பெரும்பாலான உறவினர்கள் எங்களைப் புரிந்தும் இருந்தார்கள்.

**உங்கள் குழந்தைகளுக்குப் பூப்புனித நீராட்டுவிழா நடத்தினீர்களா?**

எனக்கோ, எனது உடன் பிறந்தவர்களுக்கோ எங்கள் அப்பா அம்மாவே அதெல்லாம் நடத்தல. என் கணவரும் இதே கொள்கைக்காரர். அப்புறம் நாங்க ஏன் எங்கள் பிள்ளைகளுக்கு நடத்தப் போறோம்? எங்கள் மகள் பருவத்தை அடைந்த போது புறத்தாக்குடியில் கிறித்தவப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தாள். விடுதியில் தங்கிப் படித்தாள். அந்தச் சமயத்தில் அவள் வீட்டுக்கே வரவில்லை. வரவழைக்கவும் இல்லை. விடுதியிலேயே தங்கியிருந்தாள். அவளுக்கு அங்கிருந்த சிஸ்டர்ஸ் சத்தான உணவுகளைக் கொடுத்துள்ளனர். எனது கணவர் அவளிடம் பலமுறை, பருவமடைதல் பற்றி மருத்துவரீதியாக விளக்கமாகப் பேசிஇருந்தார்.

**தாய்மாமன் தரப்பிலிருந்து எதிர்ப்புகள் வந்ததா?**

வந்தது. வெறும் முணுமுணுப்பாகத்தான் வந்தது. எனது கணவர் ஊர்க்காரியங்களிலும், உறவினர் காரியங்களிலும் நேர்மையாக, உண்மையாக நடந்துகொள்வார். மக்களுக்குப் பயன்பட்டு வாழ்ந்தார். இது போன்ற கொள்கைப் பிரச்சனைகளில் தலையிட்டால் மிகவும் முரட்டுத்தனமாகப் பேசிவிடுவார் என்பதால் ஊரிலும். உறவிலும் எவருமே எதிர்க்கவில்லை.

**தற்காலத்தில் பெண் குழந்தைகளே “எங்களுக்குச் சடங்கு நடத்துவேண்டும்” என்று பிடிவாதம் பிடிக்கிறார்கள். அப்படி நடத்துவது தங்களுக்கு ஒரு அங்கீகாரம் என நினைக்கிறார்கள், உங்கள் குழந்தைகள் தங்களுக்கு சடங்கு நடத்த வேண்டும் என பிடிவாதம் பிடிக்கவில்லையா?**

அவர்கள் இதுபோன்ற உறவினர்களின் எந்தச் சடங்கு சம்பிரதாயங்களுக்கும் சென்றதில்லை. பார்த்ததும் இல்லை. அப்படிப்பட்ட விழாக்களுக்கு நாங்கள் அழைத்துச் சென்றதே இல்லை. சொந்த ஜாதிக்காரர்களின் திருமணங்களுக்குக்கூட அவர் போகவும் மாட்டார். யாரையும் அழைத்துச் செல்லவும் மாட்டார். மேலும் பருவமடைதல் பற்றிய புரிதலையும் உருவாக்கியிருந்தார். எனவே அது பற்றிய ஆசை எனது குழந்தைகளுக்கு வந்ததில்லை. புரட்சிக்கொடி கூடப்படிக்கும் மாணவிகளுக்குத் தகவலைச் சொல்லவே இல்லை. எனவே அவளுக்கும் தோழிகளின் நெருக்கடியும் இல்லை.

அந்த நேரத்தில் சிஸ்டர்ஸ் புரட்சிக்கொடிக்கு தலையில் வைத்துக்கொள்ள பூவைக் கொடுத்துள்ளார்கள். முதன் முதலாக பூவை வைத்து வகுப்புக்குச் சென்றதால், சக மாணவிகள் புரிந்து கொண்டு கேட்டிருக்கிறார்கள். கோபமடைந்த புரட்சிக்கொடி சிஸ்டர்ஸைப் பார்த்து, அந்தப் பூவை வைத்ததால் தான் அனைவருக்கும் தெரிந்துவிட்டது, என்று கூறி பூவைத் தூக்கி எறிந்துவிட்டுப் போய் விட்டாள்.

அவளுடன் படித்த மாணவிகள் பெரும்பாலும் ஆர்.சி. கிறிஸ்தவ மாணவிகள். அவர்களிடம் பூப்புனித நீராட்டு விழா போன்ற பழக்கங்கள் கிடையாது. மாதவிடாய் காலங்களில் சக மாணவிகள் சகஜமாக தேவாலயத்துக்குச் செல்வார்கள். வகுப்புக்கு வருவார்கள் என்பதால் புரட்சிக்கோ, அருளுக்கோ அப்படி ஒரு ஆசையோ, நெருக்கடியோ வரவில்லை.

**பெண் என்றாலே பூ வைப்பது, பொட்டு வைப்பது, நகை அணிவது இதெல்லாம் சமுதாயத்துல இயல்பா இருப்பது தானே? அதை ஏன் நாம மறுக்கணும்?**

எனது மகள் புரட்சிக்கொடி பள்ளிப்படிப்பு முடிக்கும் வரை பொட்டு வைத்ததில்லை. பூ வைத்ததில்லை. முடி வளர்க்காமல் தலைக்கு க்ராப் வெட்டி இருந்தாள். சில சமயம் தனது உடன் படிக்கும் மாணவிகள் நகை அணிந்து வருவதைப் பார்த்து தனக்கும் நகை வேண்டும். பட்டுப் புடவை வேண்டும் என்றெல்லாம் கேட்டாள். எனது கணவரோ,

“இங்க பாரும்மா... நகை வாங்கினா படிக்க வைக்க முடியாது. பட்டுப்புடவை வாங்கினா படிப்புக்குப் பணம் கட்ட முடியாது. தங்க நகைக்கும், பட்டுப்புடவைக்கும் ஆசைப்பட்டா அது மட்டும்தான் நம்மகிட்ட இருக்கும். அறிவோ, சுதந்திரமான வாழ்க்கையோ நிச்சயம் கிடைக்காது... எது வேணுமோ முடிவு செஞ்சுக்கம்மா....” என்று நிதானமாகப் பேசிப் புரிய வைப்பார்.

காலேஜுக்குப் போன பின்னாடி, தோழிகளோட சேர்ந்துகிட்ட பலமுறை பூவைப்பதும், நகை அணிவதும் என இருந்தாள். ஆனால் காலப்போக்கில் அவற்றைத் தானே விட்டுவிட்டாள். இதெல்லாம் கூடப் படிக்கிற பிள்ளைகள், சுத்தி இருக்கிற சொந்த பந்தங்கள், பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லாம் சேர்ந்து திணிப்பதுதான். இயல்பா யாருக்கும் அப்படி எண்ணம் இருக்காது.

பல வெளிநாடுகள்ல, கிறித்தவப் பிள்ளைகள், முஸ்லீம் பிள்ளைகள் எல்லாம் பூ, பொட்டு, நகை இதெல்லாம் இல்லாமத்தான் வர்றாங்க.

**இந்தத் தலைமுறையில் உள்ள பெரியாரியல் வாதிகளின் குடும்பப் பிள்ளைகள்கூட நகை அணிவதில் ஆர்வம் காட்டுகிறார்களே? இது பெரியார் கொள்கைகளுக்கு வந்த தோல்வின்னு சொல்லாமா?**

பெண்களுக்குப் பல சிக்கல்கள் இருக்கிறது. ஏன் பொட்டு வைக்கவில்லை? நீங்க கிறிஸ்டியன்கூட இல்லயே? உங்க வீட்டுக்காரர் செத்துப் போயிட்டாரா? என்னதான் வீட்ல சண்டைனாலும் பொட்டு வைக்காம வரலாமா? என்பது போன்ற அநாவசியமான கேள்விகள் நமக்கு எரிச்சலைக் கிளப்பும். இவ எதுக்கும் அடங்க மாட்டா, திமிர் பிடிச்சவ என்பது போன்ற எண்ணத்தையும் உருவாக்கும். இந்தத் தொல்லைகளுக்கு அந்தக் கருமத்தை வச்சுத் தொலைச்சுட்டுப் போலாமேன்னு தான் பெரும்பாலும் நம்ம பிள்ளைகள் நினைக்கிறாங்க.

ஆனா இதையெல்லாம் நிச்சயம் விட்டுறணும். சமுதாயத்துக்குப் பயந்து நாம வாழ முடியாது. நகைய வச்சோ, பட்டுப்புடவைய வச்சோ எப்போதும் சமுதாயம் நம்மை மதிப்பதில்லை. நம்மோட அறிவு, படிப்பு இதுக்குத்தான் மரியாதை. அதை நம்ம பிள்ளைகள் புரிஞ்சுக்கணும்.

இப்பக்கூட சபரிமலை அய்யப்பன் கோவில்ல பொம்பளைகள கும்பிட விடமாட்டிக் கிறாங்கன்னு போராட்டம் நடக்குதாம். செய்தில சொன்னாங்க. நாம வேணா ஒரு 20 பவுன் நகையப் போட்டுக்கிட்டு, பொட்டு வச்சு, பூ வச்சு, நல்ல பட்டுப்புடவையக் கட்டிக்கிட்டுப் போய்ப் பார்ப்போமே.... உள்ள விட்டுருவானா?

நகைக்கும், பட்டுக்கும் செலவழிக்கிற காசை அறிவுவளர்ச்சிக்குச் செலவழித்தால், அந்தக் கோயிலுக்கும் போக வேண்டாம், எந்தக் கோவிலுக்கும் போக வேண்டாம். அங்க எந்தக் கடவுளு மில்லங்கற அறிவு வந்திடும். அந்த அறிவுதான் நமக்கு அழகு. தன்மானம் தான் நமக்கு அழகு.

எங்க காலத்துல பெரியார்இயக்கம் எங்க பாத்தாலும் இருந்துச்சு. பெரியார் பேசுறத எல்லாம் செய்யுறதுக்கு மக்கள் தயாராக இருந்தாங்க. எதிர்ப்பு இருந்த அதே அளவுக்கு ஆதரவும் இருந்துச்சு. பெண்களோ, ஆண்களோ தைரியமா சமுதாயத்தை எதித்து நின்னாங்க. இப்ப அப்படி இல்ல. இப்ப இதப்பத்தி எல்லாம் யாரும் பேசுறதே இல்ல. பிறகு பிள்ளைகள் நகை போடத்தான் செய்வாங்க. இதுனால பெரியாருக்குத் தோல்வினு சொல்ல முடியாது. அவர் கருத்தை இன்னும் அதிகமாப் பேச வேண்டியிருக்குன்னுதான் சொல்ல முடியும்.

**இதுபோன்ற விழாக்கள் நடத்தாவிட்டால் உறவினர்கள் நம்மைவிட்டு ஒதுங்கிப்போய் விடுவார்கள் என்கிறார்கள்? உங்களது அனுபவம் என்ன?**

நானே ஜாதி மறுப்புத் திருமணப் பெற்றோருக்குப் பிறந்தவள் என்பதால், எனக்கு எனது பெற்றோரின் இரண்டு ஜாதியிலும் உறவுகள் இருக்கின்றன. அந்த இரண்டு ஜாதி அல்லாமல் என் கணவர் வேறொரு ஜாதியைச் சேர்ந்தவர். எனது பிள்ளைகள் இந்த மூன்றிலும் இல்லாத வேறு ஜாதிகளில் திருமணம் செய்துள்ளனர். இப்ப எனக்கு ஐந்து அல்லது ஆறு ஜாதிகளில் உறவினர்கள் இருக்கிறார்கள்.

எவரும் எங்களை விட்டு ஒதுங்கிப் போகவில்லை. எனது கணவரைப் பற்றி அவர்கள் பேசும்போது, அவரது கொள்கைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால் அவரைப் போல அனைவருக்கும் உதவியாக யாராலும் வாழ முடியாது என்பார்கள். எந்த உறவுகளும் எங்களை விட்டுப் போகவில்லை.

நகரங்களில் வாழும் எனது பிள்ளைகளுக்கு உள்ள நிலை வேறு. நகரங்களில் பக்கத்து வீட்டுக்காரர்கள் தான் உறவுக்காரர்கள் என்பது போன்ற நிலை உருவாகி வருகிறது. அப்படித்தான் இருக்கணும். ஆனால் கிராமங்களில் இருக்கும் நிலை வேறு. என்னதான் நான் பல ஜாதிகளுக்குச் சொந்தக்காரியாக இருந்தாலும் என்னை எனது கணவரின் ஜாதியில்தான் இணைத்துப் பார்ப்பார்கள். ஏதாவது சிறு சிறு சண்டை வந்தால்கூட என்னைச் "சின்ன ஜாதிக்காரி" எனப் பேசிவிடுவார்கள். பிறகு சமாதானமும் ஆகிவிடுவார்கள்.

**உங்களது கணவர் இருந்த போது உறவினர்கள் ஆதரவு எப்படி இருந்தது? இப்போது உறவினர்கள் ஆதரவு எப்படி இருக்கிறது?**

எனது கணவர் உயிருடன் இருக்கும்போதே மிக நெருங்கிய உறவுகளைத் தவிர, பொதுவாக ஜாதிச் சொந்தங்களின் விழாக்களில் ஒதுங்கியே இருந்தார். எனவே இப்போதும் அந்த நிலை தொடருது. பெரிசா ஒட்டும் இல்லை. பெரிய அளவில் விரிசலும் இல்லை. இப்போதுவரை எந்த உறவுகளும் எங்களை ஒதுக்கவில்லை.

சொந்த வாழ்க்கையில் நேர்மையாக வாழ்ந்துகொண்டு பெரியார் கொள்கைகளைச் செய்யும்போது சொந்தம் என்பதைத் தாண்டி ஊரில் உள்ள அனைத்து ஜாதியினருமே நம்மை விட்டு விலக மாட்டார்கள். இதுதான் என் வாழ்க்கையில் நான் நேரடியாகப் புரிந்துகொண்டது.

( நிறைவு)

பூங்கொடி
யாழ் அழகு நிலையம், தாராபுரம்

# ஆறடி கூந்தல்

## அவசியமா? அநாவசியமா?



*“பெண்கள் ஆண்களைப் போல் கிராப் வைத்துக் கொள்ள மற்றும் கால் சட்டையணியப் பழகவேண்டும்” -தோழர் பெரியார்.*

ஆரம்பத்தில் இதைப் படிக்கும் போது வியப்பாக இருந்தது. ஆனால் இன்றைய காலத்திற்கு இது மிகவும் அவசியமாகவும், வசதியாகவும் இருக்கும் என்பதை உணர்ந்தே பெரியார் சொல்லி இருக்கிறார். சமீபத்தில் படித்த ஒரு செய்தி, “கேன்சரினால் பாதிக்கப்பட்டுத் தங்கள் தலை முடியை இழந்த பெண்களுக்கு ஒரு சில பெண்கள் இணைந்து தங்கள் கூந்தலில் கொஞ்சம் வெட்டி, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு விக் செய்து கொடுத்தார்கள்” என்பது தான். இப்படிப் பெண்களின் வாழ்விலும் சாவிலும் ஒன்றிணைந்து விட்ட கூந்தலைப் பற்றிதான் நாம் பேசப் போகிறோம்.

என்னுடைய யாழ் அழகு நிலையத்திற்குத் தங்களுடைய பெண் குழந்தைகளை அழைத்து வரும் அனைத்து தரப்புப் பெற்றோர்களும் முதலில் சொல்வது பசங்களைப் போல் கிராப் வெட்டிவிடுங்கள் என்பது தான். காரணம் என்னவென்றால் முடி நீளமாக இருந்தால் வியர்வை அதிகமாகி சளி பிடித்தல், தலையில் ஈறு, பேன், போன்ற தொல்லைகள் ஏற்படும். மேலும் அதைப் பராமரிக்க ஏற்படும் தொல்லை இருக்கே அப்பப்பா அதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.

குழந்தைப் பருவத்தில் கிராப் வைத்துக் கொள்ளச் சொல்லி கட்டாயப்படுத்தி, அவர்களின் உடல் நலனில் அக்கறை காட்டிய பெற்றோர்கள் தான், பின்னாளில் எங்கே தன் பிள்ளை கல்யாணச் சந்தையில் விலை போகாமல் போய்விடுவாளோ என்று பயந்து, கூந்தலை நீளமாக வைக்க நிர்ப்பந்திக்கிறார்கள். நீளமான கூந்தல் தான் அழகு, அது தான் நம் தமிழ்ப் பாரம்பரியம் என்று சொல்லி அவர்களை ஆணாதிக்கம் நிறைந்த ஒரு சகதியில் தள்ளிவிடுகின்றனர்.

பெண்களும் நீளமான கூந்தலை ஒரு அழகியல் சார்ந்து தான் சிந்திக்கிறார்களே தவிர, அதன் பின்னால் இருக்கும் அடிமைத்தனம், சந்தை ( எண்ணெய், சீயக்காய், சாம்பு விளம்பரங்களின் அரசியல்) முதலிய விசயங்கள் தெரிவ தில்லை. தனக்கு நீளமான கூந்தலே இல்லையென்றாலும் கூட ஒட்டு முடி வைத்தாவது திருமண மேடையில் நிற்கிறார்கள். எனக்கு இருக்கும் முடியின் அளவோடு தான் திருமண மேடையில் நிற்பேன் என்று எந்தப் பெண்ணும் (சுயமரியாதைப் பெண்கள் தவிர) சொல்வதில்லை.

நீளமான கூந்தலை வளர்ப்பதிலுள்ள சிக்கல் என்னவென்று ஒரு அழகுக் கலை நிபுணராக நன்கறிவேன். தினமும் தலையை நன்றாக ஷாம்பு அல்லது சீயக்காய் கொண்டு அலச வேண்டும். இதற்கு ஒரு கால் மணி நேரமாகும். பின்னர் அதை உலர்த்தி நன்றாகக் காய வைக்க வேண்டும். காய்ந்த முடியை அள்ளி அவரவர் பணிக்குத் தகுந்தமாதிரி சிகை அலங்காரம் பண்ண வேண்டும். பள்ளி செல்லும் மாணவி என்றால் இரட்டைச்சடை, பணிப் பெண்கள் கொண்டை போடுதல், குதிரை வாலு, அப்படியே தொங்கவிடுதல்(ஸ்ஸ்ஸ் .முடியல). கூந்தலைப் பொலிவுடன் வைக்கக் கூடுதலாக ஏற்படும் செலவினம்.



**Debjani Ghosh,**
South Asia Managing Director, Sales and Marketing, Intel Corporation

கிராப் வைப்பதினால் மேற்கண்ட தொல்லை களிலிருந்து முற்றிலுமாக விடுதலை கிடைக்கும். கிராப் பெண்கள், சமுதாயத்தில் நீளமான கூந்தல் பெண்களைவிட கூடுதல் துணிச்சலுடனும், தன்னம்பிக்கையுடனும் இருக்கிறார்கள். ஒரு வீட்டில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமிருந்தால் அதில் ஒருவர் கண்டிப்பாக ஆணைப் போல் கிராப் வைத்து வளர்க்கப்படுவார். அந்தப் பெண் தான் கூந்தலுடைய பெண் எங்கே சென்றாலும் பாதுகாப்பாக கூடவே இருப்பார்.

அதுமட்டுமில்லாமல் எந்த முடிவையும் துணிந்து எடுப்பார். ஏன் இப்படி ஒரு பெண்ணுக்கு மட்டும் கிராப் வைத்து ஆண் போல் வளர்க்கிறீங்க என்று அந்த பெற்றோரிடம் கேட்டால், எங்களுக்கு ஆண் குழந்தை இல்லை அதனால் ஒரு பெண்ணை இப்படி வளர்க்கிறோம் என்பார்கள். இதைத் தான் அந்த ஈரோட்டு கிழவனும் சொன்னார் ''பெண் பிள்ளைகளை ஆண்களைப் போல் வளர்க்க வேண்டும்'' என்று..



**indra nooyi** - pepsi ceo

இன்று பொதுவாக அனைத்துப் பெண்களும் இரு சக்கர வாகனம் ஒட்டுகிறார்கள், ஆனால் கிராப் வைத்த பெண்களால் தான் ஆண்கள் ஒட்டக்கூடிய இரு சக்கர வாகனங்களையும் சவுகரியமாக ஒட்ட முடிகிறது. கிராப் வைத்த பெண்கள் மீதான ஆண்களின் பார்வை அவர்கள் ஒழுங்கீனாமானவர்கள் என்ற நிலையிலிருந்து மாறி அவர்கள் மேல் ஒரு மரியாதையும் உள்ளூர பயத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது என்றே பெருமிததுடன் சொல்லலாம்.

இந்தியாவில் உள்ள பெரும் பன்னாட்டு நிறுவனங்களின் இயக்குநர்கள் மற்றும் சி இ ஓ க்கள் போன்ற பலம் பொருந்திய பதவிகளில் இருக்கும் சில வெற்றிப் பெண்கள் க்ராப் புடன் தான் வாழ்கிறார்கள். எடுத்துக்காட்டாக, Rekha Menon, Chairperson, Accenture India, Neelam Dhawan, Managing Director, HP India, Vanitha Narayanan, Managing Director, IBM India Private Limited, Kirthiga Reddy, Head of Office, Facebook India, Indra Nooyi, CEO Pepsi Co ஆகியோரும் உலக அளவில் இன்னும் ஏராளமான க்ராப் பெண்களும் வெற்றி பெற்ற பெண்களாக வலம் வருகிறார்கள்.




**kirthiga reddy**
facebook india-ceo

அரசியல், தொழில் துறை, இராணுவம் காவல்துறை, போன்ற துறைகளில் கிராப் மட்டுமல்ல கால் சட்டையுமணிந்த பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்த இடத்தில் மேலே சொன்ன பெரியாரின் வார்த்தைகளை மீண்டுமொரு முறை நினைத்துப் பார்கிறேன்.

ஆகையால் எனதருமைப் பெண்களே, நீளமான கூந்தலுடையப் பெண்கள் பாரதிராஜா படங்களில் வரும் டீச்சர் கேரக்டருக்கு வேண்டுமானால் பொருத்தமாக இருக்கும். இன்றைய அதி வேகமான காலத்திற்கு ஒத்து வராது என்பது தான் யதார்த்தம்.

''ஆறடிக்கூந்தல் சுத்தம் செய்து நேரம் கழிவது சரிதானா?
அரையடிக் கூந்தல் அரைநொடிபோதும் நேரம் மிச்சமே
பிழைதானா? புதுயகம் திறந்து வைக்க பூமிக்கு வந்தோமா''

ஏதோ ஒரு அலைவரிசையில் இந்தப் பாடல் ஒலித்துக் கொண்டிருக்கிறது.



**Neelam Dhawan**
Managing Director,
HP India

அதி அசுரன்

# பன்னாட்டு நிறுவனங்களின் 'பால் அரசியல்'

ஜல்லிக்கட்டு என்ற இந்து - ஆணாதிக்க - ஜாதி ஆதிக்கப் பண்பாட்டுவிழாவை உச்சநீதி மன்றம் தடை செய்தது தொடர்பாக, மே 17. இளந்தமிழகம் ஆகிய அமைப்புகள் எடுத்த நிலைப் பாட்டில் உள்ள பார்ப்பனச் சார்புத்தன்மையைச் சென்ற இதழில் விளக்கினோம். தொடர்ச்சியாக, ஏ1 பால். ஏ2 பால் என்ற அடிப்படையில் ஒரு போலி அறிவியல் கருத்து பரப்பப்பட்டு வருவதைப் பார்ப்போம். முதலில் இந்த போலி அறிவியலாளர்கள் கிளப்பிவிட்ட அறிவியல் கரடியைப் பற்றிப் பார்ப்போம்.


### A1பால் - A2 பால் - BCM7

*"பால் குழந்தைகளுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும் கால்சியம், புரதச் சத்து, விட்டமின் 'ஏ'வையும் கொடுக்கிறது. ஆனால் பாலில் இருக்கும் கேசின் புரதம் நீரிழிவு நோயை தூண்டக் கூடியது. இந்த கேசினில் ஏ1, ஏ2 என்று இரண்டு வகை இருக்கிறது. பாஸ் இன்டிகஸ் இன மாடுகளில்( திமில் உள்ளது, நாட்டு மாடுகள்) ஏ2 அதிகமாகவும், பாஸ் டாரஸ் ( திமில் அற்றது, ஹெச்.எப், ஜெர்சி போன்ற அயல்நாட்டு இனம்) மாடுகளில் ஏ1 கேசின் மட்டும் இருக்கின்றன. ஏ1 கேசின் இருக்கும் பாலைக் குடித்தால் அது குடலில் செறிக்கப்படும் போது BCM7 (beta-caso-morpine-7) ஆக மாற்றமடைந்து, நீரிழிவு, நரம்பு தளர்ச்சி, மூளை வளர்ச்சியைப் பாதித்தல் (ஆடிசம்) போன்ற வியாதிகளை உண்டாக்கு வதாகக் கண்டுபிடித்துள்ளார்கள். "ஏ2 கேசின் உள்ள பாலைக் குடித்து அது செறிக்கப்படும் போது, உடலுக்கு தீமை செய்யாமல் உடலைக் காப்பாற்றுகிறது" என்கிறார் ஏ1, ஏ2 பாலைப் பற்றி ஆய்வு செய்த பேராசிரியர் 'பாப் எலியாட். இவர் 1990-ம் ஆண்டு வாக்கில் ஆக்லாந்து பல்கலைக் கழகத்தின் குழந்தைகளுக்கான மருத்துவப் பிரிவைச் (childeren's medicine at aucklanad university) சேர்ந்த பேராசிரியர். - வினவு தளம் 21.11.2012*

இந்தியாவில் 2009 லேயே இந்தக் கருத்துப்பரவல் தொடங்கிவிட்டது. பார்ப்பன இந்து முன்னணிகள், ஆர்.எஸ்.எஸ் அமைப்புகள், கோசாலைகள். கோமடங்கள், சில தமிழ்த்தேசிய அமைப்புகள் போன்றவை நாட்டுப்பசு மாடுகளைக் காப்பாற்ற இதுபோன்ற கருத்துக்களைப் பரப்புவதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் பார்ப்பன எதிர்ப்பைப் பேசும் ம.க.இ.க வும் இந்த வேலையைப் பார்ப்பது மிகவும் தவறான, கண்டிக்கத்தக்க போக்கு.

### ஏ 1 பால் – ஏ 2 பால் என்றால் என்ன?

பாலில் 209 வகையான அமினோ அமிலங்கள் உள்ளன. அவற்றில் 67 வது இடத்தில் Proline என்ற அமினோ அமிலம் அதிகமாக இருந்தால் ஏ 2 பால். அதே 67 வது இடத்தில் Histidine என்ற அமினோ அமிலம் அதிகமாக இருந்தால் ஏ1 பால். ஆனால் இந்த 209 அமினோ அமிலங்களில் மேற்கண்ட இரண்டுமே இருக்கும். இதுதான் வேறுபாடு. 67 வது இடத்தில் உள்ள Proline



அளவை மரபணு மாற்றத் தொழில்நுட்பம் வழியாக உயர்த்தலாம். மாற்றலாம். இதில் ஏ 1 தீங்கானது. ஏ 2 நல்லது என்ற போலியான அறிவியல் கருத்தைப் பரப்பியது பன்னாட்டு நிறுவனங்களில் வணிக வெறி.

**ஏ 2 பாலின் சர்வதேச வணிகப் பின்னணி**

இன்று நேற்றல்ல; 1980 லிருந்தே இந்த சர்ச்சை தொடங்கிவிட்டது. அப்போதிருந்து ஏ1 ஏ2 பால் பற்றிய ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.1994 ல் இந்த ஏ 2 பால் உற்பத்திமுறையை New Zealand Dairy Board என்ற கூட்டுறவு பால் உற்பத்தி நிறுவனம் காப்புரிமைச் சட்டங்களின் படி (New Zealand patent application 295774, 1994) பதிவு செய்துவிட்டது.

நியூசிலாந்து கூட்டுறவு பால் உற்பத்தியாளர் நிறுவனத்தில் Howard Patterson என்ற மிகப்பெரும் கோடீசுவரரும் உறுப்பினராக இருந்தார். அவரது வணிக மூளை இந்த ஏ 2 பால் வணிகம், அது தொடர்பான காப்புரிமைப் பதிவு என்பவை பெரும் ஆசையைக் கிளப்பிவிட்டது.1994 ல் நியூசிலாந்து பால் கூட்டுறவு நிறுவனம் பதிவு செய்திருந்த காப்புரிமையை அவர் விலைக்கு வாங்கிவிடுகிறார்.

அதன் பிறகு இந்த ஏ 2 முறையை வைத்து வணிகக்கொள்ளையைத் தொடங்குவதற்காக 2001 ல் A2 Corporation என்ற நிறுவனத்தைத் தொடங்குகிறார். 2012 ல் உலகம் முழுவதுக்கும் ஏ 2 பாலுக்குரிய உற்பத்தி முறை, ஏ 2 பாலிலிருந்து கிடைக்கும் உபபொருட்கள் தயாரிப்பு முறை, அது தொடர்பான வணிகம், ட்ரேட் மார்க் உள்பட அனைத்து உரிமைகளையும் A2 Corporation நிறுவனம் பெற்றுவிடுகிறார்.

**அறிவியல் உண்மை அல்ல**

1994 ல் நியூசிலாந்து காப்புரிமையைப் பெற்றது முதல், ஏ 2 பால் தொடர்பான ஏராளமான ஆராய்ச்சிகளுக்கு ஏ 2 நிறுவனம் பெரும் தொகைகளைச் செலவழித்தது. சர்வதேச அளவிலான காப்புரிமை பெற்ற பிறகு இது தொடர்பான ஆய்வுகள் ஏராளமாக நடந்தன. ஆனால் அந்த ஆய்வுகள் எவையும் ஏ 1 பால் தீங்கானது என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி நிருபிக்கவில்லை. ஏ 2 நிறுவனம் நடத்திய போலி அறிவியல் மோசடியை 2005 லேயே நேச்சர் இதழே அம்பலப் படுத்தியது.

ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னி பல்கலைக்கழகத்தின் உயிர் வேதியியல் துறைப் பேராசிரியர் AS Truswell ( Department of Biochemistry, Human Nutrition Unit ) தலைமையில் நடைபெற்ற விரிவான ஆய்வு "ஏ 1 பால் தீங்கானது, ஏ 1 பாலின் புரதம் நீரிழிவு நோயை உருவாக்கும், இதய நோய் உருவாக்கும், குழந்தைகளுக்கு ஆட்டிசம் போன்ற நோய்களை உருவாக்கும் என்பது போன்ற கருத்துக்கள் தவறானவை. அறிவியல் ரீதியாக உறுதிப்படுத்தப்படாதவை" என அறிவித்தது. இந்த ஆய்வு. The A2 milk case: a critical review AS Truswell - என்ற தலைப்பில் Nature குழுமத்தின் European Journal of Clinical Nutrition (2005) என்ற ஏட்டில் வெளியானது.

அதன்பிறகு, ஐரோப்பிய உணவுப் பாதுகாப்பு நிறுவனமான EFSA என்ற அமைப்பு 2009 ல் Ivano De Noni, Richard J. FitzGerald, Hannu J. T. Korhonen, Yves Le Roux, Chris T.Livesey, Inga Thorsdottir, Daniel Tome, Renger Witkamp ஆகிய அறிவியல் அறிஞர்களைக் கொண்டு ஏ1, ஏ2 பற்றி ஒரு விரிவான ஆராய்ச்சியை மேற்கொண்டது.

அந்த ஆராய்ச்சிக்குழு. "ஏ 1 பால் தீங்கானது என்பதற்கு அடிப்படையாகக் கூறப்படும் கருத்துக்கள் அனைத்தும் அறிவியல் ரீதியாக உறுதிப்படுத்தப்படாதவை. ஆதாரமற்றவை. அது தொடர்பாக நடந்த ஆராய்ச்சிகள் அறிவியல் அடிப்டையில் நடந்தவை அல்ல. அவற்றை உறுதிப்படுத்தும் விதமாக இதுவரை எந்த ஆதாரமும், எந்த அடிப்படை அறிவியல் உண்மையும் இதுவரை வெளிவரவே இல்லை. இவை முற்றிலும் தவறான கருத்துக்கள்" என்று தெளிவாக அறிவித்து விட்டன. 2009 ஆம் ஆண்டு ஜனவரி 29 ல் இந்த ஆய்வு வெளியிடப்பட்டது.

அதன் பிறகும் சர்வதேச அளவில் அறிவியல் ஆய்வுக்கட்டுரைகளை வெளியிடும் பல ஆய்வு இதழ்கள் கடந்த 2014 வரை இந்த ஏ 1. ஏ 2 தொடர்பாக வெளியான மோசடியான அறிவியல் கருத்துக்களை அம்பலப்படுத்தி வந்துள்ளன. அவற்றைப் பற்றி எந்த அக்கறையும் இல்லாமல், எந்தப் பதிலும் சொல்லாமல், ஏ 2 நிறுவனம் தனது வணிகத்தை விரிவு படுத்தி வருகிறது.

**A 2 என்ற பன்னாட்டுநிறுவனத்தின் அறிவியல் & வணிக மோசடி வரலாறு**

**1.நியூசிலாந்து**

அறிவியல் அறிஞர்கள் ஏ2 பால் உயர்வானது, ஏ 1 பால் தீங்கானது என்ற கருத்தை 2005 மற்றும் 2009 ல் முறியடித்துவிட்டனர். அதற்கு முன்பே 2001 லிருந்தே, அந்த மோசடியான அறிவியல் கருத்தை அடிப்படையாக வைத்து, தனது வணிகக் கொள்ளையை உயர்த்த துடித்த A2 Corporation நிறுவனம் பல நாடுகளிலும் தனது முயற்சிகளை மேற்கொண்டு வந்தது.

நியூசிலாந்தில் Fonterra Co-operative Group Limited என்ற கூட்டுறவு நிறுவனம் இருக்கிறது. அந்த நாட்டின் ஒட்டு மொத்த பால் உற்பத்தியாளர்களும் இணைந்த

கூட்டுறவு நிறுவனம் அது. நியூசிலாந்தின் பால் வணிகம் அந்நிறுவனத்தின் கையில்தான் உள்ளது. நியூசிலாந்தின் பால் வணிகத்தை கைப்பற்றத் துடித்த A2 Corporation நிறுவனம், தனது ஏ 2 பால் என்ற பால் பொருளை ஒரு மருந்துப்பொருள் என்றி பிரிவில் பதிவுசெய்தது. பிறகு, Fonterra Co-operative Group Limited மீது 2001 ல் நியூசிலாந்து உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடுத்தது.

“Fonterra விநியோகிப்பது பால் ஏ 1 பால். அது குழந்தைகளுக்குத் தீங்கானது, நீரிழிவு, ஆட்டிசம், இதய நோய்களை உருவாக்கும். எனவே அந்தப் பால் விற்பனையைத் தடுக்க வேண்டும். அல்லது அதன் பால் பாக்கெட்டுகளிலும், விளம்பரங்களிலும் மேற்கண்ட தகவல்களை அச்சிட வேண்டும்” என வழக்குப் போட்டது.

அந்த வழக்கின் தீர்ப்பில் நீதிபதிகள் A2 Corporation நிறுவனத்தைக் கடுமையாக எச்சரித்தது. அதாவது, “நீங்கள் கூறிய தகவல்களுக்கு எவ்வித அறிவியல் ஆதாரத்தையும் நீங்கள் சமர்ப்பிக்க வில்லை. அறிவியல்ரீதியாக உறுதிப்படுத்தப்படாக தகவல்களைக் கொண்டு எந்தப் பொருளையும் தடுக்க முடியாது. மேலும் இந்த ஏ2 என்ற பால் பொருளை, ஒரு மருந்துப்பொருளாகவும் பதிவு செய்துள்ளீர்கள். இது பெரும் மோசடி ஆகும்” என அந்நிறுவனத்திற்கு எச்சரிக்கையும் விடுத்தது.

## 2. ஆஸ்திரேலியா

அதன் பிறகு ஆஸ்திரேலியாவின் பால் வணிகத்தைக் கைப்பற்ற Denniston என்ற குழுவுடன் ஒப்பந்தம் போட்டு, அங்கும் தனது ஏ2 பால் என்ற மோசடி அறிவியல் கருத்தை பரப்பத் தொடங்கியது. ஆஸ்திரேலிய நீதிமன்றம் ஏ 2, டென்னிசன் ஆகிய இரு நிறுவனங்களையும் ஆதாரமற்ற தகவல்களைப் பரப்ப வேண்டாம், மக்களைத் தவறாக வழிநடத்த வேண்டாம் எனக் கடுமையாக எச்சரித்து, 50,000 டாலர் அபராதமும் விதித்தது. மேலும் A2 Corporation, Denniston ஆகிய இரண்டு நிறுவனங்களின் லைசன்களையும், ஒப்பந்தங்களையும் ரத்து செய்தது.

அதன்பிறகு, ஆஸ்திரேலிய உணவுப் பாதுகாப்பு அமைப்புகளுடன் சுமுகப் போக்கை மேற்கொண்டு, பேச்சுவார்த்தைகளை நடத்தியது. A2 Australia என்ற புதிய நிறுவனத்தைத் தொடங்கி, உலகம் முழுதும் கிளை பரப்பியுள்ள Fraser & Neave என்ற நிறுவனத்துடன் இணைந்து தற்போது ஆஸ்திரேலியாவின் பால் வணிகத்தை முழுவதும் ஆக்கிரமித்துவிட்டது.

2003 ல் நியூசிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் தொடங்கிய ஏ2 பால் வணிகம், 2015 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவில் மட்டும் 3000 கோடி யூரோ அளவுக்கு வணிகம் நடத்தும் மிகப் பெரிய நிறுவனம் என்ற அளவுக்கு வளர்ந்துள்ளது.

## 3 அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா

2003 விருந்து அமெரிக்காவில் Ideasphere Incorporated என்ற நிறுவனத்துடன் இணைந்தும் 2005 விருந்து Twinlab என்ற நிறுவனத்துடனும் இணைத்து அமெரிக்காவின் பால் வணிகத்தைத் தன் கட்டுக்குள் கொண்டுவந்தது.

2011 நவம்பரில் இங்கிலாந்து நாட்டின் மிகப்பெரும் தொழில் நிறுவனமான Muller Wiseman Dairies உடன் ஒப்பந்தம் செய்து இங்கிலாந்தில் பால்வணிகத்தையும் கைப்பற்றியது. தற்போது 2014 ல் சீனாவிலும் கால்பதித்துள்ளது. Tmall Global and JD Worldwide என்ற நிறுவனங்களுடன் இணைந்து சீனாவின் பால் வணிகத்தையும் தன்வசப் படுத்தியுள்ளது.

இப்படி ஒரு மிகப்பெரும் பன்னாட்டு நிறுவனத்தின் வணிகக் கொள்ளைக்கு இந்தியாவில் உள்ள அரசாங்கமும், அரசியல்வாதிகளும் பட்டுக்கம்பளம் விரிக்கத் தொடங்கி விட்டனர். ஆளும் பி.ஜே.பி யின் அடிப்படை அமைப்புகளான ஆர்.எஸ்.எஸ், இந்துமுன்னணிக் காவிக்கும்பல் நாட்டை A 2 Milk Corporation கம்பெனிக்காரனுக்கும் கொஞ்சம் பட்டாப் போட்டுக் கொடுக்கத் தயாராகிவிட்டது. அதன் அறிகுறியாகத்தான் கடந்த சில ஆண்டுகளாகவே இந்த ஏ 2 பால் பற்றிய வியாபார அறிவியல் கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

இந்தியாவின் 2016 - 17 வரவு செலவு அறிக்கையில் இந்த நாட்டுப்பசு மாடுகளை மேம்படுத்த 850 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் வட பகுதியில் உள்ள கிர், காங்கிரேஜ், தார்பார்க்கர், சிந்து, சாஹிவால், தமிழ்நாட்டு இனமான காங்கேயம், பர்கூர் போன்ற கலப்பினமாக மாற்றப்படாத எந்த மாட்டில் இருந்தும் ஒரு லிட்டர் பால் கறந்தாலும் A 2 Milk Corporation நிறுவனத்துக்கு இராயல்டி கட்டப்போகும் நாள் வெகு தொலைவில் இல்லை.

## ஏ 2 மில்க் நிறுவனம் வளர்ப்பது Holstein மாடுகள் தான்

இப்படி ஏ 2 பால் என்ற பெயரில் நடக்கும் பன்னாட்டுக்கொள்ளைக்கு ஆதரவாக வந்துள்ள அறிவியல் கருத்தின் தன்மை முற்றிலும் நேர்மையற்ற, ஆதாரமற்ற, பொய்ப்பிரச்சாரமாகவே இருக்கிறது.

“இந்தியாவின் நாட்டுப்பசு மாட்டிலிருந்து மட்டும்தான் இந்த ஏ 2 பால் கிடைக்கிறது. வெளிநாட்டு மாடுகளுக்கு வியர்வைச் சுரப்பிகளே கிடையாது. எனவே அவற்றின்

வியர்வையும் பாலின் வழியாகத் தான் வரும். அந்த மாடுகளின் பால் சர்க்கரை நோயை உருவாக்கும். எனவே இந்திய நாட்டு மாடுகளை அந்நிய நாடுகளுக்குக் கொண்டு செல்வதற்காக ஜல்லிக்கட்டைத் தடுக்கிறார்கள்."

என்று அரைகுறையாகத் தகவல்களைத் தெரிந்து கொண்டு ஆளாளுக்கு அறிவியலாளர்கள் போலக் கருத்துக்களைப் பரப்பி வருகிறார்கள்.

இந்திய நாட்டுப் பசு மாடுகளிடம் மட்டுமே ஏ 2 பால் கிடைக்கும் என்பது தவறான தகவல் என்பதை - ஏ 2 பால் என்பதை வணிகமயப்படுத்திய - உலகமயப்படுத்திய A 2 Milk Corporation நிறுவனமே உறுதி செய்து விட்டது.

இந்த A 2 Milk Corporation தனது பால் உற்பத்தித் திட்டங்களுக்கு எந்த வெளிநாட்டு மாடு களையும் பயன்படுத்துவதில்லை. ஆஸ்திரேலியாவைத் தாயகமாகக் கொண்டு அந்த நாட்டுக்கு உள் நாட்டு மாடுகளான Holstein மாடுகளைத்தான் நம்பி இருக்கிறார்கள். இந்தியாவிலும் ஏராளமாகக் கிடைக்கும் இந்த Holstein தான் ஏ 2 பாலைத் தருகிறது என A 2 Milk Corporation நிறுவனமே அறிவித்துவிட்டது. அந்நிறுவனத்தின் அனைத்துப் பண்ணைகளிலும் ஆயிரக்கணக்கான ஐரோப்பிய மேய்ச்சல் நிலங்களிலும் மேய்ந்து கொண்டிருப்பவை இந்த Holstein தான். இது தொடர்பான தகவல்கள் ஏ2 நிறுவனத்தின் இணையதளங்களிலும், சர்வதேச அளவிலான அறிவியல் ஆய்வு ஏடுகளிலும் விரிவாகக் கிடைக்கின்றன.

### ஏ 2 பாலைக் கொடுக்கும் வெளிநாட்டு மாடுகள்

இந்தியாவில் ஜெர்சி, ஹோல்ஸ்டியன் ஆகிய ஐரோப்பியப் பசுக்கள் ஏ 2 பாலைத் தராது எனத் தவறான பிரச்சாரம் நடைபெறுகிறது. இதையும் Nature என்ற சர்வதேச அறிவியல் இதழ் மறுத்துள்ளது. இந்தியாவின் கிர், சாஹிவால், தார்பார்க்கர், காங்கேயம் மட்டுமல்ல. ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள அனைத்து மாடுகளும் ஏ 2 வகைப் பாலைத் தான் தருகின்றன. ஆசியக் கண்டத்திலுள்ள எல்லா நாடுகளிலும் உள்ள அனைத்து வகை மாடுகளும் ஏ 2 பாலைத் தான் வழங்குகின்றன. குறிப்பாக, ஃப்ரான்சில் உள்ள Limousin, Charolasis, இங்கிலாந்தில் உள்ள Jersey, Guernsey, Alderney போன்ற மாட்டினங்களும் ஏ 2 பாலைத் தான் வழங்குகின்றன. 2005 ஆம் ஆண்டிலேயே இக்கருத்து வெளியிடப்பட்ட போதிலும் இங்குள்ள பார்ப்பன அறிவுஜீவிகளும் பார்ப்பன அடிமைகளும் இதைக் கண்டுகொள்ளவே இல்லை. இந்தியாவில் தவறான கருத்தை உருவாக்கியுள்ளனர்.

### ஒட்டு மொத்தமாக மாட்டுப்பாலே மனிதனுக்குத் தீங்கானது

முக்கியமாக மாட்டிலிருந்து பெறப்படும் பால் அது எதுவாக இருந்தாலும் தீங்குதான் என சில புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சுவீடனில் உள்ள உப்சலா பல்கலைகழக ஆராய்ச்சியாளர்கள் Susanna C. Larsson, Alessio Crippa,Nicola Orsini, Alicja Wolk Karl Michaëlsson ஆகியோர் இணைந்த குழுவினர், கடந்த 20 ஆண்டுகளாக பால் குடிப்பவர்கள் - பாலையே பயன்படுத்தாதவர்கள் என சுமார் 1 இலட்சம் மக்களிடம் ஆய்வு மேற்கொண்டு முடிவினை வெளியிட்டுள்ளனர். "Milk Consumption and Mortality from All Causes, Cardiovascular Disease, and Cancer: A Systematic Review and Meta-Analysis" என்ற தலைப்பில் சுவிட்சர்லாந்திலிருந்து வெளி வரும் உலகப்புகழ் பெற்ற அறிவியல் ஏடான 'Nutrients' இந்த ஆய்வை வெளியிட்டுள்ளது.

> "தினமும் இரண்டு டம்ளருக்கும் அதிகமாக, அதாவது அரை லிட்டர் அல்லது அதற்கு அதிகமாக பால் குடிப்பவர்களுக்கு பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டு சீக்கிரமே உயிரிழப்பது தெரியவந்தது.
>
> பாலில் கலந்திருக்கும் 'லக்டோஸ் மற்றும் கிளாக்டோஸ்' என்ற பொருட்கள் (சர்க்கரை தன்மை) காரணமாக, பல்வேறு உடல்நல பாதிப்பு ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படுவதாகவும் தெரியவந்துள்ளது. குறைவாக பால் குடிப்பவர்களை விட அதிகமாக பால் குடிப்பவர்கள் விரைவாக உயிரிழப்பது உறுதி" என்று தெரிவித்துள்ளார்.

ஆனந்த விகடனில் இயற்கை உணவு குறித்து சில ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகக் கட்டுரைகளை எழுதிவரும் மருத்துவர் கு.சிவராமன், தனது ஆறாம்திணையில்,

> "'பால் சாப்பிட்டால் டாக்டர் செலவு குறையும்' என்ற பிரசாரமே 'அக்?ஷய திருதியைக்குத் தங்கம் வாங்கினால் வீட்டில் வளம் கொழிக்கும்' என்று தங்கம் விற்பவர்கள் செய்யும் உட்டாலக்கடி போலத்தான் என்கின்றன பால் மீதான சமீபத்திய ஆய்வுகள். தாய்ப்பாலுக்குப் பின் மனிதனுக்கு எந்தப் பாலும் தேவை இல்லை என்கின்றனர் மேற்கத்திய ஆய்வாளர்கள்."

என்று கூறியுள்ளார். இவர் மட்டுமல்ல, இயற்கை மருத்துவத்தை மேற்கொள்ளும் பல மருத்துவர்கள் மாட்டுப்பாலைத் தவிர்க்கச் சொல்கிறார்கள். ஆட்டுப்பாலைப் பரிந்துரைக்கிறார்கள்.

**மாட்டுப்பாலைவிட ஆட்டுப்பாலில் தான் ஏ 2 தன்மை அதிமாக உள்ளது**

எல்லாவற்றையும் விட, மாட்டுப்பாலை விட ஆட்டுப்பாலில்தான் முழுமையாக ஏ 2 வகைப் பால் கிடைக்கிறது என பால் ஆராய்ச்சியாளர்கள் பல காலமாகச் சொல்லி வருகின்றனர். இந்தியாவில் Ishi Koshla என்ற ஆராய்ச்சியாளர் இதைப் பற்றி முழுமையாக ஆய்ந்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளார்.

சென்னை கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகப் பேராசிரியர்முனைவர் மீனாட்சிசுந்தரம் இதைப் பற்றி ஆய்வு செய்தவர். தமிழ் இந்து நாளிதழில் அவர் எழுதிய தாய்ப்பாலுக்கு மாற்று கட்டுரையிலிருந்து,

> “ஆட்டுப்பாலானது, மாட்டுப்பாலைவிட தாய்ப்பாலை ஒத்த பண்புகளை அதிகம் கொண்டிருக்கிறது. ஆட்டுப்பாலில் உள்ள பீட்டாகேசின் புரத அமைப்பு தாய்ப்பாலில் காணப்படும் புரத அமைப்பு போன்றே இருக்கிறது. ஆட்டுப்பாலில் உள்ள ஒலிகோசேக்ரைடு என்னும் சர்க்கரையின் அமைப்பும் தாய்ப்பாலில் உள்ளது போன்றே காணப்படுகிறது.
>
> மேலும் தாய்ப்பால், ஆட்டுப்பாலில் மாட்டுப்பாலைவிட அதிக அளவு செலினியம் காணப்படுகிறது. மேற்கூறிய காரணங்களால் பச்சிளம் குழந்தைகளுக்குத் தாய்ப்பாலுக்குச் சிறந்த மாற்றாக ஆட்டுப்பாலே கருதப்படுகிறது.
>
> ஒவ்வாமையை ஏற்படுத்தும் புரதமான ஆல்பா எஸ்1கேசினின் அளவு மாட்டுப் பாலில், அதிகமாக இருப்பதாலேயே இந்த ஒவ்வாமை ஏற்படுகிறது. ஆனால், ஆட்டுப்பாலில் தாய்ப்பாலைப் போலவே ஆல்பா எஸ் 2 கேசின் வகைப் புரதம் உள்ளதால், ஆட்டுப்பால் ஒவ்வாமையை ஏற்படுத்துவதில்லை. மாட்டுப் பால் அருந்துவதால் ஏற்படும் ஒவ்வாமையால் பாதிக்கப்பட்ட 93 விழுக்காடு குழந்தைகளில், ஆட்டுப்பால் அப்படிப்பட்ட ஒவ்வாமையை ஏற்படுத்தவில்லை என்பது ஆய்வுகளின் மூலம் உறுதியாகியுள்ளது.
>
> பாலில் உள்ள லாக்டோஸ் என்னும் சர்க்கரையைச் செரிப்பதற்கு லாக்டேஸ் என்னும் நொதி மிகவும் இன்றியமையாதது. இந்த லாக்டேஸ் அளவு மிகக் குறைவாகவோ அல்லது முற்றிலுமாக இல்லாமல் இருப்பவர்கள் பாலைச் செரிக்க முடியாமல் லாக்டோஸ் சகிப்புத்தன்மை இல்லாமையால் (lactose intolerant) அவதிப்படுகின்றனர். ஆட்டுப்பாலில் லாக்டோஸ் சர்க்கரையின் அளவு குறைந்து காணப்படுவதால் ஆட்டுப்பால் அருந்துபவர் களுக்கு லாக்டோஸ் சகிப்புத்தன்மை இல்லாமை ஏற்படுவதில்லை...
>
> சீரான ரத்த அழுத்தத்தைப் பராமரிக்க உதவும் பொட்டாசியம் ஆட்டுப்பாலில் அதிகம் இருப்பதால், ஆட்டுப்பால் அருந்துவதன் மூலம் ரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டில் வைத்து, இதயத்தைப் பாதுகாக்கலாம்.

**இயற்கை உரம் முகமூடியுடன் பார்ப்பன ஆதிக்கத்துக்கு உரம்**

செயற்கை உரங்களுக்கு மாற்றாக இயற்கை விவசாயத்தைத் திறம்பட நடத்த இயற்கை உரம் தேவை. அதற்கு நாட்டுப்பசுக்கள் தேவை என்ற ஒரு கருத்தும் முன்வைக்கப்படுகிறது. நாட்டு எருமையிலும் அதே தரமான எரு கிடைக்கிறது.

நாட்டுப்பசுக்களின் எருவைவிட ஆட்டுஎரு, பன்றி எரு, கோழி எரு ஆகியவை மிகச்சிறந்த இயற்கை உரங்கள். இவை எல்லாவற்றையும் விட மனிதக் கழிவு மிகச்சிறந்த எருவாகும். ஆடு, மாடு, கோழி, பன்றி எருக்கள் எவையாக இருந்தாலும், அவை தாவரங்களில் உடனடியாக மாற்றத்தைக் கொடுக்காது. மனிதக்கழிவு மட்டுமே பயிர்களுக்கு உடனடி ஊட்டம் கொடுக்கக் கூடியது.

கி.பி. 1880 களில் இங்கிலாந்து ராணி இந்திய விவசாயமுறை பற்றி அறிந்து அறிக்கை கொடுக்குமாறு ஒருவரை அனுப்பிவைத்தார். அவர் பெயர் ஜான் அகஸ்டன் வால்கர். அவர் ஓராண்டு இந்தியா முழுவதும் சுற்றி அலைந்து, ஆராய்ந்து ஒரு அறிக்கை கொடுத்தார். இந்திய விவசாய முறையின் பெருமைகளைப் பேசும் அந்த அறிக்கை முக்கியமாகச் சொன்னது இது.

“பயிர் சாகுபடியைப் பொறுத்தவரை ஒரே ஒரு குறைபாட்டைத்தான் பார்க்கிறேன். மனித மலத்தை எருவாகப் பயன்படுத்துவது இந்தியாவில் காண முடியவில்லை. அதற்குக் காரணம் உள்ளது. நிலம் மேல் ஜாதிக்காரனிடம் இருக்கிறது. கீழ்ஜாதிக்காரர்கள் தங்கள் நிலத்தில் மலம் கழிக்க மேல்ஜாதிக்காரர்கள் அனுமதிக்க மாட்டார்கள். அதனாலேயே மனித மலம் இன்னும் எருவாகப் பயன்படவில்லை.” என்கிறார்.

இன்று செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும் வாகனங்கள் ஏராளமாக வந்துவிட்டன. வத்துக் கறவைப் பசு மாடுகளை வளர்த்து, நட்டப்பட வேண்டியதில்லை. ஒரு ஏக்கருக்கு ஒரு டேங்க் என தாராளமாகக் கொட்டலாம். அதுபற்றி இயற்கைக் காவலர்கள் யோசிப்பதே இல்லை.

பார்ப்பன வந்தனா சிவா வின் 'நவதான்யா', நம்மாழ்வாரின் 'வானகம்' சுற்றுச்சூழலுக்காக இயங்கும் 'பூவுலகின் நண்பர்கள்' உட்பட இந்த நாட்டில் இயற்கை விவசயாம், இயற்கை உரம் பற்றிப் பேசுபவர்கள் ஏராளமாக உள்ளனர். பார்ப்பன 'பசுமை விகடன்' உட்பட ஏராளமான ஏடுகள் உள்ளன. எந்த நிறுவனமும், எந்த ஏடும், எந்த இயற்கை ஆர்வலரும், பயிர்களுக்கு உடனடிப்பலனைக் கொடுக்கக்கூடிய இயற்கை எருவான, மனித மலத்தைப் பயன்படுத்துவது பற்றிப் பேசுவதுகூடக் கிடையாது.

பார்ப்பன அமைப்புகள் பேசாமல் இருப்பதற்கு, அவற்றின் இராமராஜ்ய அஜெண்டாக்கள் அடிப்படையாக இருக்கின்றன. பார்ப்பனர் அல்லாத இயற்கைக் காவலர்கள் இதுவரை அறியாமல்கூட இருந்திருக்கலாம். இனியாவது நாட்டு மாடுகளை வளர்த்து அதனாலும் பொருளாதார இழப்பைச் சந்திப்பதைவிட - மனித எரு, ஆடு, பன்றி, கோழி எருக்களை இயற்கை விவசாயத்துக்குப் பரிந்துரைக்க வேண்டும்.

தமிழ்ப்பண்பாட்டைக் காப்போம், இந்தியப் பாரம்பரியத்தைக் காப்போம், ஜல்லிக்கட்டை ஆதரிப்போம், நாட்டுமாடுகளைக் காப்பாற்றுவோம், தற்சார்பு விவசாயத்தை உருவாக்குவோம், இயற்கை விவசாயத்தைத் காப்பாற்றுவோம், இயற்கை உணவுக்குத் திரும்புவோம் என்பது போன்ற முழக்கங்கள் மீண்டும் நம்மை 1000 வருடங்களுக்குப் பின்னால் இழுத்துச் சென்றுவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

மேற்கண்ட எந்த முழக்கத்துக்கும் நாம் எதிரானவர்கள் அல்ல. ஆனால் அந்த முழக்கங்களை முன்னெடுப்பவர்கள் அவற்றுக்குப் பின்னால் உள்ள பார்ப்பன நலன்களையும், பார்ப்பன ஆதிக்கப் பின்னணிகளையும் அக்கறையுடன் கவனித்துக் களைய வேண்டும். அப்படி இல்லாவிட்டால், அவை அனைத்தையும் எதிர்க்க வேண்டியது எமது கடமை.

### ஆர்.எஸ்.எஸ்.கூறும் இந்து மதத்தில் காப்பாற்றப்பட வேண்டியவர்கள்

"பிராமணனையும் பசுவையும் காப்பாற்ற வேண்டியதுமே ஒவ்வொரு இந்துவின், இந்து மதத்தின் தர்மம்" - காஞ்சி சங்கராச்சாரியார் 10.03.1946 சேலம் பார்ப்பனர் மாநாட்டுக்கு அனுப்பிய செய்தி

### முடிவுகள்

1. ஏ 1 பால் தீங்கானது என்பது அறிவியல் ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட உண்மை அல்ல.

2. ஏ 2 பால் நல்லது என்ற கருத்து பன்னாட்டு நிறுவனங்களின் வணிகக் கொள்ளைக்குப் பயன்படுத்தப்படும் போலி அறிவியல் கருத்து.

3. ஏ 2 பால் இந்திய மாடுகளில் இருந்து மட்டுமே கிடைக்கின்றன என்பது தவறான கருத்து.

4. ஒட்டுமொத்தமாக மாட்டுப் பாலே மனிதனுக்குத் தீங்கு என ஆய்வுகள் வந்து விட்டன.

5. தாய்ப்பாலின் தன்மையைக் கொண்டது ஆட்டுப்பால் மட்டுமே.

6. நாட்டுப்பசு எருவை விட, மனித, ஆடு, பன்றி, கோழி எருக்களே விவசாயத்துக்கு ஏற்றவை.

7. ஏற்கனவே நொடித்துப் போயுள்ள விவசாயிகளிடம், ஏ 2பால், இயற்கை உரம் போன்ற காரணங்களைக்கூறி நாட்டுப்பசு மாடுகளை வளர்க்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்வது முழுக்க முழுக்க பார்ப்பன ஆர்.எஸ்.எஸ் ஸின் திட்டம்.

### பரிந்துரைகள்

1. குழந்தைப் பருவத்தைத் தாண்டிய பிறகு மனிதனுக்கு எந்த விலங்கின் பாலும் தேவையில்லை. ஏ2 பாலுக்காக பாலுக்காக நாட்டுப்பசுக்களை வளர்க்க வேண்டியதில்லை. உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் மாட்டுப்பாலைத் தவிர்க்க வேண்டும். தேவைப்பட்டால் ஆட்டுப் பாலைப் பயன்படுத்தத் தொடங்குங்கள்.

2. இயற்கை எரு நாட்டுப்பசு மாட்டைவிட மனிதக்கழிவில் தான் தரமாகக் கிடைக்கிறது. இயற்கை விவசாய ஆர்வலர்கள் மனித, ஆடு, பன்றி, கோழி எருக்களைப் பயன்படுத்தத் தொடங்க வேண்டும்.

### சான்றுகள்:

1.EFSA Scientific Report (2009) 231, 1-107Review of the potential health impact of ß-casomorphins and related peptides - Report of the DATEX Working Group on ß-casomorphins

2. Milk Consumption and Mortality from All Causes, Cardiovascular Disease, and Cancer: A Systematic Review and Meta-Analysis - Nutrients 7(9):7749-63 · September 2015

3.The A2 milk case: a critical review AS Truswell - European Journal of Clinical Nutrition (2005) & 2005 Nature Publishing Group

4.www.thea2milkcompany.com/about-us/product-businesses/ - www.a2milk.com.au/our-farms/perry-view/

5.vinavu.com, *21.11.2012*, Indian Express 11.07.15, *தி தமிழ் இந்து 24.06.2014*

# ம.க.இ.க வுக்கு பூணூலையும் மறைக்கத் தெரியவில்லையே?

உடுமலையில் 13.03.2016 அன்று சங்கர் - கௌசல்யா என்ற ஜாதிமறுப்புத் திருமண இணையர்கள் - தேவர் ஜாதியைச் சேர்ந்த கௌசல்யாவின் பெற்றோராலும், கூலிப்படையினராலும் வெட்டப்பட்டுள்ளனர். தலித் மணமகன் சங்கர் படுகொலை செய்யப்பட்டார். செய்தி அறிந்த உடுமலையிலுள்ள அனைத்து முற்போக்கு அமைப்புகளும் குற்றவாளிகளைக் கைது செய்யகோரி கண்டன ஆர்ப்பாட்டங்களையும், மறியல்களையும் நடத்தியுள்ளனர். காட்டாறு குழுவின் சார்பாக தோழர் மலரினியன், குணசேகரன் உள்ளிட்ட தோழர்களும் போராட்டங்களில் பங்கெடுத்தார்கள்.

திராவிடர் கழகத் தலைவர் மானமிகு தோழர் கி.வீரமணி விடுதலையில் கடும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளார். திராவிடர் விடுதலைக்கழகம் தீண்டாமை ஒழிப்புப்பிரிவு காவல் பிரிவை முற்றுகையிடும் போராட்டத்தையும், தந்தை பெரியார் திராவிடர் கழகம் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி வருகிறது. தி.மு.க தலைவர் கலைஞர் மு.கருணாநிதி உட்பட பல்வேறு அரசியல் தலைவர்களும் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் ம.க.இ.க என்ற பார்ப்பனத் தலைமையிலான அமைப்பு சந்தடி சாக்கில், "ஆணவக் கொலை செய்யும் சாதிகளுக்கு இட ஒதுக்கீட்டை ரத்து செய்" என்ற முழக்கத்தை முன்வைத்து சுவரொட்டிகளை அச்சிட்டுள்ளது. மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையம் என்ற பெயரில் இயங்கும் ம.க.இ.க வின் வழக்கறிஞர் பிரிவு சார்பில் இச்சுவரொட்டி போடப்பட்டுள்ளது.

ஆணவக் கொலையை எந்த ஜாதி செய்யாமல் இருக்கிறது? பத்திரிக்கை, டி.வி போன்ற மீடியாக்களுக்கு வந்த ஆணவக்கொலைகளை விட வெளிவராத ஆணவக்கொலைகள் ஏராளமாக உள்ளன. தாழ்த்தப்பட்டோர் உட்பட பெரும்பாலான ஜாதிகள் ஆணவக்கொலையைச் செய்துள்ளன. அப்படியானால் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஆகிய அனைத்து சாதியினருக்கும் உரிய இடஒதுக்கீட்டை ரத்து செய்து விடலாமா?

ஹரியானாவில் ஜாட் பிரிவினர் நடத்தும் இடஒதுக்கீட்டு எதிர்ப்புப் போராட்டங்களுக்கும் - படேல்களின் இடஒதுக்கீடு எதிர்ப்புப் போராட்டங்களுக்கும் - ம.க.இ.க வின் இடஒதுக்கீட்டு எதிர்ப்பு முழக்கத்திற்கும் எந்த வேறுபாடும் இல்லை.

ஏதோ ஒரு இடத்தில் ஒரு முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவன் குண்டு வைத்துவிட்டால், ஒட்டுமொத்த இஸ்லாமியர்களையும் தீவிரவாதிகள் போலச் சித்தரிக்கும் பார்ப்பன ஆர்.எஸ்.எஸ் சுக்கும், ம.க.இ.க வுக்கும் என்ன வேறுபாடு?

ஆணவக்கொலைகள் இன்று நேற்றல்ல, பல ஆயிரம் ஆண்டுகளாக நடைபெற்றுத்தான் வருகிறது. அண்மைக்கால வரலாற்றில் நாம் அறிந்த கீழ்வெண்மணி தொடங்கி இன்று உடுமலை வரை ஏராளமான ஜாதியப் படுகொலைகளைப் பார்த்துவிட்டோம். இவற்றில் வன்னியர்களும், தேவர்களும், கவுண்டர்களும், சில இடங்களில் பறையர்களும் தாக்குபவர்களாக - படுகொலை செய்தவர்களாக இருந்துள்ளனர்.

அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் உரிமைக்காகக் குரல்கொடுக்கும் பல அமைப்புகளில் மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையமும் ஒன்று. இந்த ஆணவக்கொலைகள் செய்யும் ஜாதிகளுக்கு அர்ச்சனை உரிமை எதற்கு? ஏன் போராடினீர்கள்? அப்படியானால் அந்தப் போராட்டங்களில் நீங்கள் நேர்மையாக இருந்திருக்க மாட்டீர்கள் என்பது உறுதியாகிறது.

'மக்கள் அதிகாரம்' என்ற அமைப்பை வைத்து, டாஸ்மாக் ஒழிப்புப் போராட்டங்களையும், மாநாடுகளையும் நடத்தினீர்கள். ஆணவக்கொலைகள் செய்யும் ஜாதிக்காரன் இருந்தால் என்ன? குடித்துச் செத்தால் என்ன? ஆணவக்கொலைகள் செய்த - செய்யும் ஜாதிக்காரர்களுக்கு மட்டும் டாஸ்மாக் நடத்தலாம் என்று இதுவரை நீங்கள் ஏன் முழங்கவில்லை?

சில நாட்களுக்கு முன்பு, தஞ்சையில் சோழகன்குடிக்காட்டில் கோடக் மகேந்திரா வங்கியில் கடன் வாங்கி ட்ராக்டர் வாங்கிய விவசாயி பாலன் ஆணவக்கொலை செய்த ஜாதியைச் சேர்ந்தவர்தான். அவருக்காக கடந்த 14.03.16 ல் தஞ்சையில் மறியல் போராட்டம் நடத்தினீர்களே? ஏன்? ஆணவக்கொலை செய்யும் ஜாதிக்காரனுக்கு எதற்காகக் கருணை காட்டுகிறீர்கள்?

தஞ்சை டெல்டாவைப் பாலைவனமாக்கும் திட்டங்களான மீத்தேன் திட்டம், ஷெர் ஆயில் திட்டம் போன்றவற்றையும் கொங்குப் பகுதியில் செயல்படுத்த உள்ள கெயில் திட்டம் உட்பட பல திட்டங்களை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களையும் அறிக்கைகளையும் விடுகிறீர்கள். தஞ்சை மாவட்டத்திலும், கொங்கு மண்டலத்திலும் இதனால் பலன் அடையப் போகிறவர்கள் பெரும்பகுதி ஆணவக் கொலை செய்த ஜாதியினர் தானே? ஏன் அவர்களுக்காகப் போராடுகிறீர்கள்?

உழைக்கும் மக்களுக்கு என்ற பெயரில் ஆணவக்கொலை செய்யும் ஜாதி மக்களுக்கு இவ்வளவு அமளி துமளிகளை நடத்தும் ம.க.இ.க வுக்கு, அதே ஆணவக்கொலை செய்த ஜாதிகளின் இடஒதுக்கீட்டை மட்டும் ரத்து செய்ய வேண்டுமாம். ஆர்.எஸ்.எஸ் பார்ப்பானுக்குக் கொண்டையைத் தான் மறைக்கத் தெரியவில்லை. ம.க.இ.க வுக்கு பூணூலையும் மறைக்கத் தெரியவில்லையே?

# சாதி மயிர்

வெட்டியவனும் இந்து
வெட்டுப்பட்டவனும் இந்து...
அதானாலென்ன
“வாயை மூடிக்கொள்
நாமெல்லாம் ஒரே மதம்”.

வெட்டியவனும் தமிழன்
வெட்டுப்பட்டவனும்
தமிழன்...
“அதனாலென்ன
கண்ணை மூடிக்கொள்
நாமெல்லாம் ஒரே இனம்”.

இஸ்லாமியனுக்கு எதிராய்
தீக்கொளுத்த வேண்டுமா?
வெட்டியவனையும்
வெட்டுப்பட்டவனையும்
ஒன்றாய் உசுப்பி விடு ...
“இந்துவே எழுந்துவா”.

தெலுங்கனுக்கு எதிராய்
கொம்புசீவ வேண்டுமா?
வெட்டியவனையும்
வெட்டுப்பட்டவனையும்
ஒன்றாய் சீண்டி விடு ...
“தமிழனமே பொங்கி எழு”.





உசுப்பேற்றும் போது
“இந்துவாக இரு”
சீண்டிவிடும் போது
“தமிழனாய் இரு”
மற்ற நேரம்
“சேரியில் இரு”.

இந்துவோடு இந்துவாய்
கலக்கலாம் என்கிறாய்...
தமிழனோடு தமிழனாய்
கலக்கலாம் என்கிறாய்...
மனிதரோடு மனிதராய்
கலந்து வாழ்ந்தால்
அரிவாள் எடுக்கிறாய்.

‘ஆண்ட பரம்பரைகளின்’
சாதி மயிர்
ஆண்குறியில்தான்
இருக்குமென்றால்
வெட்ட வேண்டியது
தலையை அல்ல...
மயிரை.

- தோழர் வெண்புறா சரவணன்

## குழந்தைகள் வாழ்க்கைக் கல்விப் பயணம்

சமுதாயத்திற்காக ஒரு ஆண்டின் அனைத்து நாட்களையும் செலவிடுகிறோம். நமக்காக - நமது மன வளத்தை உயர்த்திக்கொள்வதற்காக - நமது அறிவியல் மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளவதற்காக - வாழ்க்கைக்கான கல்வியைக் கற்பதற்காக - சில நாட்களையாவது தேர்ந்தெடுப்போம்.

உணவு, உடைத்தேவைகளுக்கு அடிப்படையான விவசாயம், ஆடைத் தேவைக்கு அவசியமான ஆடை உற்பத்தி, இரண்டுக்கும் தேவையான மின்சார உற்பத்தி, அன்றாடத் தேவையான உணவுத்தயாரிப்பு, சக உயிர்களை மதிக்கத் தேவையான பாலின சமத்துவம், இவை அனைத்துக்கும் அடிப்படையாக இருக்க வேண்டிய அறிவியல் அணுகுமுறை ஆகியவற்றை நேரடிகாட்சிகளாக - சுற்றுலாவாகச் சென்று அறிந்து கொள்ள - ஒரு 5 நாட்களைச் செலவிடுவோம்.

2016 மே 12 - 16 ஆகிய 5 நாட்கள் குழந்தைகள் வாழ்க்கைக்கல்விப் பயணம் - நன்கொடை : ஒருவருக்கு ரூ 1500 ( உணவு, தங்குமிடம், பயணக்கட்டணம் உட்பட) 8 முதல் 15 வயது வரை உள்ளவர்கள் மட்டும் பங்கேற்கலாம். பெற்றோர்களும் வரலாம். அவர்களுக்கான கட்டணம் ரூ 2500. ஏப்ரல் 15 க்குள் பாதித் தொகையைச் செலுத்தி வருகையை உறுதிசெய்யுங்கள். தொடர்புக்கு :

ஆசிரியர் இரஞ்சிதா 98426 26686 மருத்துவர் பெரியார்செல்வி 98656 30383 மலரினியன்

**TEAM LIFE SCIEÑCE**

kaattaaru2014@gmail.com
Kaattaaru Monthly Magazine, 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001

